1129

சிவமயம்.

மைலம் - தமிழ் உபாத்தியாயர்

அ. துரைசாமி முதலியார் அவர்களியற்றிய,

# துரோணாச்சாரியார்
# பள்ளிக்கூட
# நாடகம்.



16 FEB 1924

கன்னிபுத்தூர்,
அருணகிரி முதலியாரால்
பிரசுரிக்கப்பட்டது,

1923.

ரிஜிஸ்டர்ட் காபிரைட்.

இதன் விலை அணா—6.

பேஜிமாத்திரம்—முராரி பிரஸ். சென்னை

0-,2MDM1
N23
97233

உ

சிவமயம்.

துரோணாச்சாரியார்

# பள்ளிக்கூட நாடகம்.

இஃது.

மைலம். தமிழ் உபாத்தியாயர்

அ. துரைசாமிமுதலியார்

அவர்களால் இயற்றப்பட்டு,

மதுரைமாநகரம்,

கவிராஜ கந்தசாமிபிள்ளை அவர்களால்

பார்வையிடப்பட்டு,

கன்னிபுத்தூர்

அருணகிரி முதலியார்

அவர்களால்.

சென்னை.

ஸ்ரீ ஆதிமூலம்பிரஸில்

பதிப்பிக்கப் பட்டது.

1923.

ரிஜிஸ்டர் காபிரைட்.

894.812
3117

உ

சிவமயம்.

# ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலருக்குந் தெரியிப்பது யாதெனில் 1867-வருஷத்திய 25-வது ஆக்டின் 20-வது பிரவின் 6-வது, விதியின் பிரகாரம் இந்நூலை காப்பிரைட் ரிஜிஸ்ட்டர் செய்யப் பட்டிருக்கின்றது, ஆகையால் இந்நூலுக்கு உடையவராகிய கன்னிபுத்தூர் அருணகிரிமுதலியாரவர்களின் உத்தரவின்றி பிறர் இதைப் பதிப்பித்தாலும் இதை வேறு பாஷையில் எழுதி பெயர்த்தாலும் அல்லது இதிற்கண்டிருக்கின்ற பாட்டுகளை அச்சிடுதலுங் கூடாது, அப்படி அச்சிட்டால் அதனாலுண்டாகும் நஷ்டத்தை வசூல் செய்யப்படும்.

இப்படிக்கு,

க. அருணகிரி முதலியார்.

நெ. 31 வடமலை மேஸ்திரி தெரு மதராஸ்.

97233

N23

உ

கடவுள் துணை.

## துரோணாச்சாரியார்

# பள்ளிக்கூட நாடகம்.



### விநாயகர் துதி.

க வி.

சீர்பெரும்புகழ்பாஞ்சாலன் தேசமும்ஆண்டநீதி
பேர்பெரும்பாஞ்சாலன்தன் பெரியநாடகமுரைக்க
நேர்பெரும்விமலிபாலன் நெஞ்சமுமகிழ்ந்தளித்த
யேர்பெரும்கரிமுகத்தோன் இணையடிகாப்பதாமே.

கவி-சோமுகராஜன்-வருவது.

பூமகன்உலவுந்தேசம் புறவலரடிவணங்க
நாமகன்உலவும்நெஞ்சம் நாவலரடிவணங்க
நேமகம்தவறிடாத நீதியும்நெறிமிகுத்தோன்
சோமுகராஜவேந்தன் சயசபைவருகின்றாரே.

சோமுகன் - தரு.

சூரர்கள்மனம்வாட வீரதீரர்கொண்டாட
சோமுகராஜன்வந்தான் பொன்னகர்மெச்சிய
சோமுகராஜன் வந்தான்
ஆரமோகனமாலை அணிந்ததோடாவுமின்ன சுரு
ஆசையாகபல ராஜருமெச்சியே
தேசுலாவுமுக பூரணவுச்சித (சூரர்)
மந்திரியிருபுரம் வந்தடிபணிந்திட
மகரகுண்டலமாடவே வெகுவிந்தையதாக
மகரகுண்டல மாடவே
சந்திரக்குடைகவிக்க தரித்தமுடிசொலிக்க சுரு
தாவியகவுரிகள் பாவையர்வீசிட
மேவியதுதிபலர் நாவலர்பேச (சூரர்)

அமலருலகம்நாட டமரம்கின்னரிபாட
அகிலங்கிடுகிடென்னவே வெகுவாத்தியம்பாட
அகிலங்கிடுகி டென்னவே
திமிர்த்தநாட்டியமாதர் ததிங்குமியென்றாட சுரு

திட்டமதாகவே கட்டியங்கூற
மட்டில்லாதகெடி யெட்டியேமீற (சூரர்)

நீண்டத்தனுதண்டமும் பூண்டலணிகள்மின்ன
நீதிசெங்கோலிங்கவே புவியெங்குமிலங்க
நீதிசெங்கோல் யிளங்கவே
தாண்டவதிருபாதம் வேண்டிமிகத்துதித்து சுரு

தங்குப்சிம்மாதனம் பொங்கமாய்நாடி
கொங்கணம்வங்கணர் அங்கவர்கூடி (சூரர்)

சோமுகன்-கவி.

அருமைசேர்மந்த்ரிமாரே அழகுபாஞ்சாலனுக்கு
வருகிறோம்கல்வியோதி வல்லவனாகவேண்டி
தருகவேயிதுகாலத்தில் தனுர்வேதம்வித்தையாவும்
தெரிவித்துவரலாமிந்த சீரறிந்துரைசெய்வீரே.

வசனம்.

கேளுங்களப்பா மந்திரிமார்களே நமது குமாரகனாகிய பாஞ்சாலனுக்கு கல்விப்பயர்ச்சி செய்துவருகிறோம் இனிமேல் தனுர்வேதம் கர்ப்பிக்கவேண்டும் அதைஎவரைக்கொண்டு கர்ப்பிக்கலாம் சொல்லுங்கள் மந்திரிமார்களே.

மந்திரி-வசனம்.

கேளும்மகாராஜனே தபோவனத்தில் வாசமாகிய அக்கினிகோத்திர முனிவரால் உமதுகுமாரனுக்கு தனுர்வித்தையைக் கற்பிக்கலாம் மகாரார்ஜனே.

சோமுகன்-வசனம்.

ஆரடா காவலாலர்களே எனதுகுமாரனாகிய பாஞ்சாலனை அழைத்துவாருங்கள் மந்திரிமார்களே.

பாஞ்சாலன்-கவி.

அரிபதம்மறவாச்சீலன் அரசனும்மனங்களிக்க
வரிசிலைமதனைப்போலும் வாகுவல்லயமிலங்க

சரிகைபட்டாடைமின்ன தண்டையும்சதங்கைகொஞ்ச
பரிவாகதந்தைமுன்னே பாஞ்சாலன்வருகின்றனே.

பாஞ்சாலன்-தரு.

பாலன்பாஞ்சாலன் வந்தான்சபைதனிலே
நல்லதிருமுகசுந்திர பாலன்பாஞ்சாலன்
பாலன்பாஞ்சாலன்வந்தான் கோலமணிகள்மின்ன சுரு
பச்சையும்பலபணி உச்சிதபூஷணம்
கச்சிதமாகவே வச்சிரமின்ன (பால)

முத்துசுட்டியுந் தொங்கலாட நல்ல
நல்லயிருபுரமாதர்கள் பத்தியுடன்கவரிவீச
கொத்துசரப்பளிகள் ரத்தினப்பணிகள்மின்ன சுரு
கொஞ்சியகிளிமொழி வஞ்சியர்சூழ
ரஞ்சிதமாகவே நெஞ்சமகிழ்ந்து (பால)

தண்டைசதங்கைமணி கொஞ்சமிகவடிவழகான
கண்டசரங்கள்சோதி மின்ன
கெண்டைநயனமாதர் அண்டிமனங்களிக்க சுரு
கொடிபெருஞ்செங்கை கடகமிலங்கவே
அடைவுடன்திடமது நடைவொயிலாக (பால)

நீதிமன்னவர்பாதங்கண்டு தனைவேண்டியழைத்திடும்
சேதியரியயின்பங் கொண்டு
பாதிமதியணிந்த பரமன்பாதந்துதித்து சுரு
பத்தியதாகவே யெத்திசைமெச்சவே
உத்தமன்சோமுகன் பெற்றசிகாமணி (பால)

பாஞ்சாலன்-கவி.

நந்தகோவிந்தன்பாதம் நம்பியேஉலகமாளும்
தந்தையேவுமதுபாதம் தனையனுன்சரணம்புக்கி
விந்தைமன்னவர்களெல்லாம் மேவுமிச்சபையைநாடி
எந்தனையழைத்தசேதி இன்னதென்றியம்புவீரே.

வசனம்.

சரணம் சரணம் தந்தையே என்னை இச்சபைநாடி அழை
த்ததை திருவுளம் பற்றியருளும் தந்தையே.

சோமுகராசன்-கவி.

மதன்வடிவாகவந்த மைந்தனேசுகித்துவாழி
சதமெனஉந்தனுக்கு தனுர்வேதம்உணரச்செய்து
அதனமாயறிந்தநாதன் அகினிமுனிவோன்பக்கல்
பதனமாயிருக்கவேண்டி பக்ஷம்வைத்தேகலாமே.

வசனம்.

வாரும் குமாரகா தபோவனத்தில் இருக்கும் அக்கினிகோத்திர முனிவரிடத்திலிருந்து நீ தனுர்வேதமென்னும் ஆயுதவித்தையை கற்றுக்கொள்ளும்படி உன்னை அழைத்தேன் அவரிடம் போவோம் வாரும் பாஞ்சாலனே.

பாஞ்சாலன் வசனம்.

ஆனால் அப்படியே போய் வருவோம் வாரும் தந்தையே'

சோமுகன்-தரு.

| | |
|---|---|
| வந்தாரேகானகம் | நோக்கியே |
| மந்திரிசேனையுஞ் | சூழ்ந்திடவே |
| இந்திராதிதேவரும் | மெச்சவே |
| இரவிமணிமுடி | துலங்கிடவே |
| சோதிப்பணிகள்மின்ன | நல்ல |
| சுந்திரமாய்மைந்தன் | சூழ்ந்திடவே |
| நீதிப்புரவலர்கள் | சூழ |
| நேருடனேவெகு | சீருடனே |
| ஆனைப்பரிரதங்கள் | சூழ |
| அழகாகப்பூச்சக்கிர | குடைகவிக்க |
| கானகமாமுனியைத் | தேடி |
| காரிடிபேரிகை | பூரிகையும் |
| பூமிக்கிடுகிடென்ன | வாத்தியம் |
| பொன்னகரமாள | தன்னகரம் |
| சோமுகன்தேசம்விட்டு | வந்தார் |
| சொல்லுமவ்வனத்திற்கு | நல்மனதாய் |

பொது-வசனம்.

அகோகேளுங்கள் சபையோர்களே சோமுகனும் பாஞ்சாலனும் வனத்திற்கு வந்தபோது அக்கினிகோத்திர முனிவரும் துரோணாச்சாரியாரும் வருவது.

துரோணர் அக்கினிகோத்திரர்-கவி.

நெடுமுடிசடைகள்மின்ன நிகரில்லாவல்லதீரன்
கெடிபெருஞ்சிலைவாளேந்தி கெந்தமும்பறக்கவீச
அடிமிசைதுரோணர்சூட அரசனைக்காணவேண்டி
வடிவுடனக்கினிகோத்திர மாமுனிவருகின்றாரே.

அக்கினிகோத்திரர் தரு:

சகலகலையுணர்ந்த புகலும்யக்கினிகோத்திரர்
தபமுனிநாதர்வந்தார் வருமரசனைக்காண
தபமுனிநாதர் வந்தார்
இகல்பெருந்துரோணாச்சாரி இனத்துடனேசூழ சரு

இலகியசுடரொளி மலரணிகளபமும்
நலமுடன்வீசவே பலவரும்யஞ்சும் சகல

கண்டிகையும்பிரள குண்டலமுஞ்சொலிக்க
கடகம்பளபளென்னவே இருகரமதிலழகிய
கடகம்பளப ளென்னவே
தெண்டுகமண்டலமும் சிலையுங்கரத்திலேந்தி
தேசமெங்கும்வணங்க பூசும்வெண்ணீரிலங்க சரு

சித்தர்மகிழ்ந்திட பற்றியாயுதம்
வித்தைகளோதிய உத்தமரானவர் சகல

தேசமெங்கும்வணங்க ராஜராஜர்கள்சூழ
தேவர்கண்டுகொண்டாடவே,மிகுவிற்குருவென்றுமே
தேவர்கண்டு கொண்டாவே
பாசமுடனேவரும் ராசனென்னமீடேற சரு

பன்னியமுனிவரும் உன்னிதமைந்தரும்
தன்னடிகாணவே வண்ணமதாகவே சகல

வேதமுனிவர்சூழ பாதக்குறடசைய
வெகுவிதசம்பிரமாகவே மனமொத்துமகிழ்ந்து
வெகுவிதசம்பிர மாகவே
மாதவன்திருக்கமல பொற்பாதமறவாசசீலன் சரு

மந்திரமோதிய சிந்தையிலழகிய
சுந்திரமிருதிய விந்தையதாக சகல

சோமுகராஜன்-கவி.

அருமைசேர்முனியேபோற்றி அரசன்சோமுகனும்யெந்தன்
ஒருமைசேர்மைந்தனுக்கு உந்தனைலளவில்லாதி
தருகும்வில்வித்தையோத சந்தோஷித்திங்குவந்தேன்
நருமலர்ப்பாதாவேறு நவின்றிடாதருள்செய்வீரே.

வசனம்.

சரணம் சரணம் சிறந்தவித்தையின் சிரோன்மணியே நானே சோமுகாதிபதியாகிய சோமுகராஜனென்பார்கள் என்மைந்தனாகிய பாஞ்சாலனுக்கு உம்மாலே வித்தை முதலான சகல வித்தைகளும் பூரணமாக கற்பிக்கும்படி உம்மை நாடிவந்தேன் எனக்கு நல்லவாக்கருளும் முனிவரே.

அக்கினிகோத்திரர்-கவி.

ராசனேசுகித்துவாழி நம்மிடதுரோணர்வித்தை
பாசமாயுணருகின்றேன் பண்புடன்மைந்தனுக்கு
நேசமாய்வித்தையோதி நிகரில்லாவல்லனாக
தேசமுமறியச்சொன்னேன் திருநகர்சேருவீரே.

வசனம்.

கேளும் மகாராஜனே பரத்துவாசர் மைந்தனாகிய துரோணச்சாரியான இந்த பிள்ளையும் நம்மிடத்தில் ஆயுதப்பரிக்ஷை கற்றுவருகிறான் அவனுடனே உன் குமாரகனுக்கு சகல ஆயுத வித்தையும் கற்பிதது தேசமெங்கும் வித்தையில் சிறந்தவனென்று சொல்லும்படி கடாக்ஷித்தேன் நீர் எனக்கு ரொம்பவும் சொல்லவேண்டியதில்லை உன் நகரம்போய்வாரும் மகாராஜனே.

சோமுகன்-வசனம்.

அப்படியே போய்வருகிறேனையா முனிநாதரே.

துரோணர்-கந்தார்த்தம்.

வடிவுக்குகந்த பாஞ்சாலன்மைந்தா
மலர்கொண்டு யானைமுகவன்
அடிமிக்க வுன்னிசிலைஎடுத்தண்டம்
அஸ்த்திர சஸ்த்திர அக்ஷதைகள்
தடிமிக்ககற்றுபாயுஞ் சிலம்பம்
சொல்மந்திர உபதேசமும்
கெடிமிக்கதெண்டும் தனுர்வேதமல்லாம்

தரு.

கிருபைவைத்தருள் செய்குவேன்
மைந்தாவுனக்கு கிருபைவைத்தருள்செய்குவேன்
தருபதியேவுமக்கு குருபத்திமிகுத்திட
வரும்வித்தையதிகமாய் கிருபைபாரும் கிரு

பாஞ்சாலன்-கந்தார்த்தம்.

வனமேவுகின்ற புனலோடுபுஷ்பம்
மதைகொண்டு யானைமுகவன்
கனலேவுகின்ற பாதம்வணங்கி
கையாற்பூசை புரிய
மனமேவுகின்ற குருபத்திகொண்டு
வந்தேன்நான் சிந்தைமகிழ
தினமேவுகின்ற தனுர்வேதமெல்லாம்

தரு.

தெரியச்செய்குவீரையனே ஜெயவிற்குருநாதா
தெரியச்செய்குவீர் ஐயனே
தெரியஆயுதவித்தை பிரியம்வைத்தருள்செய்து
கரியமாலெனவந்த சரியானமுனிநாதா தெரி

பொது-வசனம்.

இவ்விதமாக பாஞ்சாலனுக்கும் துரோணச்சாரிக்கும் முனிவர் சகல ஆயுதவித்தைகளைக் கற்றுக்கொடுத்து வரும்போது பரத்துவாசமுனிவ ரிடத்திலும் அக்கினிகோத்திர முனிவரிடத்திலும் தான் கற்றிருக்கும் சிலம்ப அஸ்திர வித்தைகளை துரோணரானவர் பாஞ்சாலனுக்கு கற்றுக்கொடுக்கும் விதம்.

துரோணர்-தரு.

ராஜராஜகுமாரகா நாமிருவரும்கூடி
நேசங்கொண்டோமே பாலகா
பாசமானகுருவும் பயின்றயென்தந்தையாரும்
பரிவுடன்எனக்குமே தெரிவித்திருக்கிறர்
அரிதானவித்தையை தெரிவிப்பேனுனக்கு ராஜ

பாஞ்சாலன்-தரு.

அன்பானதுரோணச்சாரியே நாம்கட்டிதனித்திட
இன்பம் என்மேலும் வைத்திட

துன்பமில்லாமலேகீர்த்தி துலங்கமனங்களித்து சுரு
சொல்லுஞ்சத்ராதியை வெல்லுந்திறமறிந்து
நல்லவித்தையைத்தாரும் வல்லவனாக (அன்)

துரோணர்-தரு.

தொடுக்கும்பாணமேநினைக்க கோடிசங்கம்சங்கமதாக
விடுக்கும்போதது முளைக்க
முடுக்கும்மந்திரங்களும் முட்டிநிலமையான சுரு

மூவரும்தேவரும் யாவரும்நடுங்க
மேவியேபோகும்விந்தை ஆவலாயறிவாய் (தொ)

பாஞ்சாலன்-தரு.

பொன்னானபாதங்கண்டேனே அரிதானவித்தையை
உன்னாலறிந்துக் கொண்டேனே
முன்னாள்தவப்பயனே முனிவருக்குமேலான சுரு

முத்தியைதந்திடும் உத்தமகுருவென
பத்தியதாகயென் சித்தம்வைத்தேனே (பொ)

துரோணர்-கவி.

பாரியயின்பத்தாலும் பகர்ந்தவில்வித்தையாலும்
சூலிகாமாக்ஷியம்மன் துணையருளுந்தனுக்கு
மேலானகுருவாயென்றும் விளம்பினதாசனெந்த
காலமும்நிலமைகொண்டால் கடந்துலகாளுவோமே.

வசனம்.

கேளும் பாஞ்சாலனே நாமிருவருங் கூடிய பாலிய சினேகிதத்தினால் நாம் உமக்கு சிலம்பவிதை கற்பித்து வந்ததினாலும் நமது குருவுக்கு மேலான குருவென்று என்னைமதித்தீர் நீர் சொல்லிய வார்த்தையானது நிலையாக எண்ணிவந்தால் உன்னரசுக்கு ஈனமில்லாமல் சுகமாக வாழ்குவாய் என் அன்பனே.

பாஞ்சாலன் வசனம்.

அதற்கு சந்தேகம் இருக்குமா சுவாமி.

பொது—வசனம்.

இப்படி வித்தை அப்பியாசம் செய்துவரும்போது சோமுகராஜன் மந்திரியைப் பார்த்து சொல்வது.

சோமுகன்-கவி

இருபுரமிருக்கும்மந்திரி என்சுதன் தபனகோத்திர
குருமுனியவரிடத்தில் குணமுடன்வித்தையோதி
வருபவன்தனையழைத்து மகிழ்ந்திவ்வரசளிக்க
ஒருமனதாகிவந்தேன் உகந்துபின்வருகுவீரே.

வசனம்

கேளும் மந்திரிமார்களே அக்கினிகோத்திர முனிவரிடத்திலே வில்வித்தைகற்று வருகின்ற என்குமாரனுக்கு இளவரசு பட்டந் தரும்படி நினைத்திருக்கிறேன் குருதக்ஷணை தந்து பாஞ்சாலனை அழைத்துவருவோம் வாருங்கள் மந்திரிமார்களே.

சோமகன்-தரு.

அந்தணர்மறைபாட வெருவிதஅரிவையரெதிராட
சுந்திரமாமுனிவர் பக்கலுக்கு
சோமுகராஜன் வாரார்
சோதிமுடியிலங்க மணியிழைத்த
துய்யப்பணி துலங்க
நீதிதவராத சோமுகராஜன்
நிருபன் நடந்தனரே
வரிசையாய்ரதமேறி கொடிகளுஞ்ச
மந்திரிமார்க ளுடன்
அரசர்நெருங்கிடவே சோமகராஜன்
அன்பாய்நடந் தனரே
பூச்சக்கரகுடைபிடிக்க படைகளும்
பூமிகிடுகி டென்ன
வாசனைகளபம்வீச சோமுகராஜன்
மகிழ்ச்சியுடன் நடந்தார் அந்

சோமுகராஜன்-கவி.

வையகம்புகழவந்த மாமுனிநாதாபோற்றி
அய்யனே சுதனும்வித்தை யாவையுந்தெளியக்கண்டு
வெய்யனேமனமகிழ்ந்து வெகுமதியாவுந்தந்தேன்
செய்யபாலகனைவாழ்த்தி சிறப்புடனனுப்புவீரே.

வசனம்.

சரணம் சரணம் முனிநாதரே என்மைந்தனுக்கு வில்வித்தை முதலானதும் ஆயுதவித்தையும் ஆனையேற்றம் குதிரையேற்றம் முதலானதும் கற்பித்து வந்த அருமைக்கு குருதக்ஷிணை முதலான வெகுமதியுந் தந்தேன் கொடிகூட்டத்தைவிட்டு நீங்கி இளவரசு பெற்றுக்கொள்ளும்படி வாழ்த்தி என்பின்னால் என் குமாரனை அனுப்பிவையுங் குருநாதா.

அக்கினிகோத்திரர்-வசனம்.

அப்படியே ஆசீர்வதித்தேன். உன் குமாரனாகிய பாஞ்சாலனை அழைத்துக்கொண்டுபோம் மகாராஜனே.

பாஞ்சாலன்-கந்தார்த்தம்.

குருமுனிவிடையளிக்க கும்பிட்டுதெண்டனிட்டேன்
அருமுனிதுரோணாச்சாரி அய்யனேபாதம்போற்றி
இருகிலத்தவர்கள்காண இளவரசானபின்பு
வருகுவீர் பாதிநாட்டை

தரு.

மங்களமாகத்தருவேன் சந்தேகமில்லாமல்
மங்களமாகமே பங்கும்பங்காளியாய்
தங்கியிருக்கலாம் பொங்கமாய்விடைதாரும் மங்

துரோணர் கந்தார்த்தம்.

வந்தநாளிந்தநாளாய் மருவியேகளித்திருந்தோம்
உந்தனைப்பிரிந்து யெந்தன் உள்ளமுங்களிப்பதுண்டோ
பந்தமாயெந்தனுக்குப் பாதினாடளிப்பேனென்று
சிந்தைவைத் ததுவேபோதும்

தரு.

செல்வனேபோய்வாரும் சோமுகராஜன்
மைந்தனேபோய் வாரும்
செல்வனேவெகுவித கல்விப்பெருகியே
சொல்மொழிஉருதியாய் தொல்லுலகாள செல்

பாஞ்சாலன்-கந்தார்த்தம்.

பக்ஷக்ஷமாய்விடையும்பெற்ற பாஞ்சாலனுடனே தந்தை
அக்ஷக்ஷணம்நகரடைந்து அம்புவியரசர்காண

நக்ஷக்ஷத்திரராசிவாரம் நற்சுபபலன்குணத்தில்
இஷ்ட்டமாய் மைந்தனுக்கு.

தரு.

இளவரசளித்தாரே சோமுகராஜன்
இளவரசளித் தாரே
இளவரசளித்தாரே வளமானவிதிப்படி
உளமதுமகிழவே அளவில்லாமுடிதந்து(இள)

பொது-வசனம்.

இம்படிபாஞ்சாலராஜன் இளவரசுபட்டம் கட்டிக்கொண்டு அரசுசெய்து வருகிறபோது பரத்துவாசருடைய புத்திரனுகிய துரோணுச்சாரியாருக்கு திருக்கலியாணம் நடப்பது காண்க.

துரோணுச்சாரியார் கந்தார்த்தம்.

சுத்தவீரியனுய்வித்தை துரோணருமுணர்ந்தபின்பு
குற்றமில்லாததந்தை குருவிடையளிக்கச்சொல்லி
சத்தியந்தவறிடாத சரத்வந்தர்மகளைவாங்கி
சித்தமும் மகிழ்ச்சியாக.

தரு.

திருமணம்முடித்தாரே துரோணுச்சாரிக்கு
திருமணம் முடித்தாரே
திருமனம்முடித்தனர் கிருபிமனைவியாக
சுருதிமுனிவர்பாட கருதிவிதிப்படிக்கி(திரு)

பொது-வசனம்.

இப்படியாகசரத்துவந்தர் குமாரத்தியாகிய கிருபாங்கனிக்கும் பரத்துவாசர் குமாரன் துரோணருக்கும் திருமணம்முடித்து வாழ்ந்துவருங்காலத்தில் ஸ்ரீ கைலாயத்தில் இருந்து பரமசிவனும் உபார்வதியும் கொலுவாக வருகிறுர்.

பரமசிவன்-கவி.

பூதலம்அன்பர்வாழ்த்த புரிசடைமுடியுங்கங்கை
சீதளமதிவிளங்க சிறந்தருத்ராக்ஷம்பூண்டு
போதவெண்ணீறிலங்க புகழ்சிவகாமியம்மன்
வேதமாமுனிவர்சூழ விமலரும்வருகின்றுரே.

பரமசிவன்-தரு.

கைலாசனாதர்வந்தார் விடையில்யேறி
கைலாசனாதர் வந்தார்
கைலாசனாதர்வந்தார் கனகமணிபீடத்தில்
ஒயிலாய்க்கொலுவிருக்க உமையாள்புறஞ்சொலிக்க சரு
ஓதியமாதவர் வேதம்புரிந்திட
காதலர் தங்களைப் பாதம்சிறந்திட (கை)
திங்கள்பிறையுங்கொன்றை செஞ்சடாமகுடமும்
தங்குஞ்சூலகபாலம் தரிக்கவெண்ணீறணிந்து சரு
தாசரும்நேசர்கள் வாசமாய்நாடியே
ஆசையானபதி தேசமேகூடிய (கையி)
அந்திரகெந்திருவர் அமரர்முனிவரன்பர்
வந்தடி பணிந்திட மகதேவராகிய சரு
வஞ்சியரிருபுரம் அஞ்சலிசெய்திட
கொஞ்சியமாமொழி வஞ்சியர் வாழ்ந்திட (கையி)
தேவரம்பையராட ஜெயமங்களங்கள் பாட
ஏவல்செய்யுங்கணங்கள் இறைஞ்சிவாய்புதைத்திட சரு
இந்திரமுனிவரும் வந்தடிபோற்றிட
சந்திரசேகரன் சுந்திரமாகவே (கையி)

பொது-வசனம்.

இப்படி பரமசிவன் கொலுவாக வீற்றிருக்கும்போது பிர்ம தேவன் புத்திரனாகிய நாரதர் வருவது.

நாரதர்-கவி.

வளங்கிரிகையிலைநாதன் மலரடிவணங்கிதேவர்
விளங்கியமுனிவர்சூழ வீற்றிடுங்கொலுவைநாடி
உளங்களில்மகிழ்ச்சியாகி உலகெலாம்படைக்கும்வேந்தன்
களங்கமில்லாதமைந்தன் கடுகிநாரதர்வந்தாரே.

நாரதர்-தரு.

வந்தார்நாரதமுனிவர் சிவனிருபதங்காண
வந்தார்நாரத முனிவர்
வந்தார்நாரதமுனி வானுலோகத்தைவிட்டு
செந்தாமரைமுகமும் தேவர்மனங்களிக்க சரு

சித்தரும்முத்தரும் பத்திபுரிந்திட
எத்திலும்குற்றமே சித்தமேவைத்திடும் (வந்)
மெய்யில்வெண்ணீறுபூசி வேதமந்திரம்பேசி
கையில்வீணையுமீட்டி சுருதியின்பத்தைநாட்டி சுரு
கண்டருந்தேடியே வண்டணிநாதனை
பண்டுபுரிந்திடும் அண்டர்நாயகன்மகன் (வந்)
புலித்தோலாசனத்துடன் பூண்டருத்திராக்ஷமும்
மெலித்தகாவியிலங்க வேதனமனங்களிக்க சுரு
விந்தையாய்ப்பிர்ம்மனும் மைந்தனய்வந்திடும்
சுந்திரமிகுதியுந் தந்தவொய்யாரன் (வந்)
பாதக்குறடசைய பஞ்சாக்ஷரங்களோதி
நாதன்கையிலைநகர் வீதிவழியைத்தாண்டி சுரு
நாடியேயீசனைப் பாடியுஞ்சூடியும்
ஈடில்லாதபல வேடிக்கையாக (வந்)

நாரதர்-கவி.

பிஞ்சிளமதியுங்கங்கை பினாகமேமழுவுஞ்சில
மிஞ்சியேயரவம்பூண்ட மெய்ப்பொருளானேபோற்றி
அஞ்செழுத்துடையாய்போற்றி அகிலகாரணனேபோற்றி
செஞ்சடாதரனேவுந்தன் திருவடிக்கடியேன்போற்றி.

பரமசிவன்-கவி.

நலமுடன்பதம்பணிந்த நாரதமுனியேவாழி
பலமுடனுலகமெங்கும் பாராததேசமில்லை
அலர்முகத்தழகுமேன்மை அருகைகற்பினிலுயர்ந்த
மலரணிமாதருண்டோ வகுத்துரைசெய்குவாயே.

வசனம்.

பிர்ம்மன் புத்திரனாகிய நாரதமகாமுனிவரே நீர் இந்த உலகமெங்கும் பாராத யிடமில்லை வடிவிலும் கற்பிலும் சிறந்தபதிவிராதா சிரோன்மணிகளாகவும் இந்த பார்வதியைப் போலே பூலோகத்தில் யாராவது இருக்கிறார்களோ சொல்லும் திருலோகசஞ்சாரியான நாரதமகாமுனிவரே.

நாரதர்-தரு.

தேவர்களெல்லாம்பணியும்நாதா இப்போ
செப்புவேன்பெருவசனம் கேளுமையா
பூவுலகந்தன்னில்சரத்துவந்தர் அந்த
புண்ணியனளித்தகிருபாசாரியென்னு மைந்தன்
அவருடையதங்கைகிருபாங்கன்னி இப்போ
அன்புடையதுரோணச்சாரியானவற்குப் பன்னி
தவறில்லாதசோதிரூபரூபி அவள்
சங்கரிதனக்குநிகர்யெங்கும் மறதாபி
கற்பினுச்சறசியவளாகும் சுவாமி
கண்டபோதேமுனிவருக்கும் மனமுருகிப்போகும்
அர்ப்பமல்லயங்கவள்மகிமை சொல்ல
அமுர்தமொழிமாமுகத்தை சந்திரனும்வெல்ல
போகுமோபதிவிரதை என்றால்
புண்ணியவதிக்கடுக்கும் கண்டறியும்நன்றாய்
ஆகுமோயவளுக்கிடு காட்டதகுந்த
அண்டரெண்டந்தன்னிலுண்டோ நானறிந்துகூட்ட
தேவர்களெல்லாம்பணியும் நாதாசுவாமி
சொல்லுவேன்விபரமதாய் கேளுமிதைநன்றாய்

பரமசிவன்-கவி.

நங்கையைபெரிதாயெண்ணி நாரதமுனியேவந்து
சங்கரிதனக்கொப்பாக சாற்றிநீரறிந்தேனிப்போ
மங்கையாம்கிருபாங்கன்னி மனதைசோதிக்கவேணும்
துங்கசன்னசியாகி சுருக்குடன்வருகுவேனே.

வசனம்.

கேளும் நாரதமாமுனிவரே சரத்துவந்தர் குமாரியாகிய கிருபியானவள் உமாமயேஸ்பரிக்கு நிகரானவளென்றும் உலகத்திலுள்ள பெண்களுக்கெல்லாம் வடிவுங் கற்பும் பதிவிரதாதத்துவத்தில் மிகுத்தவளென்றும் நீர் சொன்னபடியினால்அதை நாம் சென்று பரிசோதிக்கவேண்டும் ஆதலால் நான் பாலசந்நியாசிரூபங்கொண்டு வருகிறேன் நீர் நமக்கு சிஷ்யனாகவருவீர் நாரதமகாமுனிவரே.

நாரதர்-வசனம்.

ஆனால் அப்படியே சிஷ்யனாகி வருகிறேன் கர்த்தவ்யமே.

பாலசந்யாசி-விருத்தம்.

ஆலமுதுண்டயீசன் அவருமேஉருவமாறி
மேலானதபசியென்ன விரிசடைமுடிகளாட
காலணிகுறடிலங்க கமண்டலதாரியான
பாலசந்யாசியாகிப் பரமரும்வருகின்றுரே

பாலசந்யாசி-தரு.

பாலசந்யாசியாகினர் பரமனுமே
காலகாலனுன உக்கிரமுடனே (பா)

பாலசந்யாசியாகி சீலமுடனேபேசி
பத்தர்கள்சித்தர்கள் உத்தமர்மற்றவர்
சித்தரும்மெத்தவே தத்தளித்தோடவே (பா)

நீண்டசடைமுடிகள் நெருங்கித்துலங்கிடவே
பூண்டசெவிகுழைகள் ஆடிக்குலிங்கிடவே
நீண்டசூலமுமேந்தி தாண்டிநடைகடந்து

நின்னிலந்தன்னிலே உன்னிதகன்னியின்
பன்னியவண்ணமும் நன்னயங்காண (பா)

கட்டும்வெளளபீனம் தூளிதம்பூசியே
மட்டுமெதமில்லா மந்திரம்பேசியே
கட்டும்புஸ்த்தகமுடன் கலைத்தாசனங்கொண்டு

கங்கையுந்திங்களும் மங்கயுந்தங்கிய
அங்கமும் பொங்கமாய் சங்கமராகி (பா)

பரமசிவன்-விருத்தம்.

செகம்புகழரியமேன்மை சீஷனேஉருவமாத்தி
மகஞ்செயும்முனிவர்வாழும் வனமெல்லாம்பாடியாடி
சுகம்பெறும்துரோணைச்சாரி துலங்கும்ஆசிர்மங்கண்டு
அகமகிழ்ந்திங்குவந்தேன் அவன்மனதறிகுவேனே

வசனம்.

கேளும் பிர்மகுல சீஷனே எனது உருவத்தை மாற்றி சந்யாசி வேடம் பூண்டு திருக்கயிலாயம் விட்டு யாகாதி கீர்த்தியங்களைச்செய்து வருகின்ற மடங்கள் தோறும் புகுந்து இன்பமான ஆடல் பாடல்களும் செய்து துரோணச்சாரி ஆசிர் மங்காண வந்தோம் அவருடய பக்தி விஸ்வாச மறிகுவோம் வாரும் சீஷனே.

துரோணர்-வித்தரும்.

அருந்தவப்பெரியோரான அழகு சங்யாசியாரே!
வருந்தியென்கண்முன்வந்தீர் மலரடிக்கடியேன்போற்றி
பெருந்தவப்பலனோயென்மேல் பிரியங்கொண்டிங்குவந்தீர்
பொருந்தும்பூஷணரே உண்மைபுகலுவீரறியத்தானே

வசனம்.

மகாபெரியோரான சந்யாசியாரே உமது திருவடிக்கு அடியேன் தீர்க்க வந்தனம் முன் சென்மத்தில் என்னதபம் செய்தேனோ தேவரீர் நம்மை நாடி வந்த சங்கதி தெரியச்சொல்லவேண்டும் சுவாமி.

தர்க்கம்-சங்யாசி-தரு.

பெரிதானமாமுனியேகேளும் இப்போ
பெரும்பசிமீறியிங்கு வரலானேன்
ஐயரேதருவீரே சாதம்யெந்தனுக்கிப்போ
தடைசொல்லிசகிக்கவும் முடியாதுகாணும்

தண்டமல்லவே உண்டுயிர்சொல்ல
சத்தியமாகவே உறுதிதைசொல்லும் (பெ)

துரோணர்-தரு.

வடிவானமாதவரே இங்குவர
என்னதபஞ்செய்தேன் குருநாதாசுவாமி
அடியேனாலானமட்டும் உமக்குநான்
அறுசுவையோடன்னம் தருகுவேனே

அதற்குமேலஞ்சவும் இதற்குநீர்கெஞ்சவும்
ஆகுமோவுன்மனம் நோகுமேவேண்டாம் (வடி)

சங்யாசி-தரு.

வாயாரசாதமளிப்பேனன்றாய் வயிர்பசிமீறியே
துயர்போமோ போடா
தாயாரைப்போலவே மனமதுதுடிக்காமல்
தயங்கியேவிருந்துக்கு தருவாய்பயங்கனியே

தாங்குவனோபசி வாங்குவனோருசி
தான்பசியற்யமே நான்மிகவாடி (வா)

துரோணர்-தரு.

ஐயாவுமக்குநான்பயந்தாலும் சுவாமி
அடுப்பும்பயங்கொள்ளுமோ அறியாயோசுவாமி
கையாறபூசைபுரிந்து மென்ன நானும்
கடும்பசிதணிப்பதே திடமாகுமென்பார்

கண்டு வுரைத்தீர் - உண்டுபொருந்திட
காத்திடப்பெரியவர் பார்த்திருப்பேனே (ஐயா)

சந்யாசி-விருத்தம்.

நிலத்தினிவழகமைந்த நித்திரைசுகங்காணாது
பலத்தினில்அதிகமான பசிருசியறியாதென்று
நலத்தினில்அறியுமப்பா நாடியென்பசிதணிக்க
சலத்துடன்சாதம்தந்தால் சம்பிரமாயேகுவோமே

வசனம்.

கேளும் அன்பனே நித்திரைசுகமறியாது பசிருசியறியா தென்னும் பழமொழி யறியாயோ யெனக்கானல் உதிராக்கினி பெருகி வாதிக்கின்றது அதையறிந்து சலமும் அமுதும் அளித் தால் சந்தோஷந்தான் அன்பனே.

துரோணர்-வசனம்.

அப்படியே சாதம் அளிக்கிறேம் இந்த ஆசனத்தில் வீற் றிரும் நாதா சந்நாசியை அமர்த்தி விட்டு மனைவியாகிய கிரு பாங்கன்னியை அழைக்க அப்பொது கிருபியானவள் கணவ னைக் காண வருவது.

கிருபாங்கன்னி-விருத்தம்.

கதிர்மணிபணிசிங்காரி கடககங்கணமுங்கொஞ்ச
அதிரவேசிலம்புதண்டை அன்னமின்னிடைகுலுங்க
ரதியுமேமதிமயங்க ரஞ்சிதகணவன்முன்னே
மதியொளிகிருபாங்கன்னி மாதுமேவருகின்றாளே.

கிருபர்-தரு.

மதனரதியெனவே அதனசுந்திரமுள்ள
மாதுகிருபாங்கன்னி வந்தாள்-நல்ல

வரமதுபெருகிய பரமமரைக்காண
மாதுகிருபாங்கன்னி வந்தாள்
வதனந்தளதளென்ன வர்ணச்சரிகைமின்ன
வனமுருமயிலென கனமணிபணிகளும்
இனமணிபெருகொளி பரமரைக்காண (மத)

கும்பஸ்த்தனங்கள்மீது செம்பொற்பணிகுலுங்க
கோதைசிகாமணி வந்தாள் இக
குவலயந்துதிசெயும் தவமணியானகோதை
இன்பமுகமுஞ்சந்திர வின்பமபெருகிடவே
ஈசரும்மனமது கூசவும்மிகதுதி
பேசவுந்தேவர்கள் ஆசையதாக (மத)

தங்கச்சரிகைச்சேலை கங்கணகடகமின்ன
தண்டைக்கொலுசு கொஞ்சவே-நல்ல
தாரணிமெச்சியேவாரணி நற்பதம்-தண்டை
பொங்கமாயீசன்பாதம் கண்காணாயோகசாலி
பொற்புமிகுத்திடும் கற்புசவுந்தரி
சொற்பெருமழகிய தற்பரியென்ன (மத)

சிந்தைமகிழ்ந்துசரத்து தவமுனிபெற்ற
செல்விசிரோன்மணி வந்தாள்
இந்தஜெகமதிலனைவரும் புகழ்பெரும்மாது-செல்
சந்தோஷமாகதுரோணச் சாரிமனங்களிக்க
தன்னையழைத்திட உன்னிதமறியவே
பொன்னிறமாகிய கன்னியர்சூழ (மத)

கிருபி-வசனம்.

வாரும் தாதிமார்களே எனது பிராணேசருடைய திருவடி கமலங்களுக்கு சரணம் செய்துக் கொள்ளுவோம் வாரும் தாதி மார்களே.

கிருபி தரு.

சரணமையனேயெந்தன் பிராணநாதனே
சர்வலோலனேயெந்தன் வரிசையாளனே
தரைமேவிய இறைவாயெனை
வாகூறியதுரை செய்குவீர் (சர)

துரோணர்-தரு.

வண்ணமேவியமண்ணில் பெண்ணிலழகிய
மங்கைநயகிசெல்வம் ஓங்கிவாழ்குவாய்

மதியேமதன் ரதியேயிவர்
இதவாய்ப்பசி யதைதீர்த்திடும் (வண்)

கிருபி-தரு.

கொண்டல்வண்ணனேநீல கண்டதேவனே
குணத்தையறிவேனேயென்னால் தணித்திடப்பசியை

குத்தங்கண்டுமே யெத்திடாமலே
மெத்தசோபமும் வைத்தாலெப்படி (கொ)

துரோணர்-தரு.

ஜெகமெலாம்வணங்கும் பெண்ணேபெருமையுள்ளவர்
தெரிந்துக்கொண்டுமேமனம் அறிந்துகின்றுமே

செப்பும்வசனமும் தப்புமல்லவே
அப்பன்மனதுபோல் ஒப்பிநடந்திடும் (ஜெ)

துரோணர்-விருத்தம்.

பக்ஷமென்பாரியாளே பாலசந்யாசிசொல்லும்
இஷ்டத்தின்படியேஅன்னம் ஈந்துமேயனுப்பிவைக்க
கஷ்டமும்அடையவேண்டாம் கடுகியேபூசைசெய்து
தக்ஷணம்வருவேன்பெண்ணே சந்தோஷம்பெருகுவாயே.

வசனம்.

கேளும் பிராணநாயகி பெரியோராகிய சந்யாசியாருடைய இஷ்டப்படிக்கு விரோதம் செய்யாமல் சாதம்படைத்து அனுப்பிவையும் நான்தடாகத்திற் சென்று ஸ்தானபான செபதபம் செய்துக் கொண்டு அதிக சீக்கிரம் வருகுறேன் பெண்ணே பிராண நாயகி.

கிருபி-விருத்தம்.

நாயகன்போனபின்பு நங்கையும்மனமகிழ்ந்து
காயுடன்கறிகள்வேண கச்சாயம்ருசிவர்க்கங்கள்
தாயிலும்அன்பாய்செய்து சந்யாசிபதம்வணங்கி
வாயினைக்கரத்தால்மூடி வந்தனம்புரிந்துசொல்வாள்

கிருபி-தரு.

எழுந்துவாருமையனே போஜனஞ்செய்ய
எழுந்துவாரும் ஐயனே
எழுந்துவாருமையா விழுந்துநான்தெண்டம்செய்தேன்

எந்தன்கிரகமதில் வந்துபுசித்திருக்க
சிந்தைபொருத்திருந்த விந்தைசந்யாசியே (எழு)

சந்யாசி-தரு.

உந்தன்கணவனெங்கையோ சம்பூரணவதியே
உந்தன்கணவ னெங்கையோ
உந்தன்கணவனெங்கே எந்தனுக்கின்பம்சொல்லி

உள்ளேபுகுந்துமே மெள்ளவேஉனைவிட்டு
கள்ளன்போனவழி விள்ளச்சொல்லுவாய்மானே (உந்)

கிருபி-தரு.

காலபூசைநடத்தவே நதிக்கேகினரையா
காலபூசை நடத்தவே
காலப்பூசைக்குப்போக சாலஞ்செய்யாமலே

கட்டளையிட்டனர் திட்டமாயுனக்குமே
சட்டமாயன்னமும் இட்டிடுமென்று (கா)

சந்யாசி-தரு.

ஆனாலும்நல்லதாகட்டும் பசிமீறியேவந்தேன்
ஆனாலும்நல்ல தாகட்டும்
ஆனாலும்நல்லதென்று நானேபூசைமுடித்து

ஆசனந்தன்னிலே போசனம்செய்யவே
நேசமாய்வந்திட பாசம்கொண்டேனே (ஆ)

கிருபி கந்தார்த்தம்.

ஆசனமளித்தேன் அரும்புனலாடி
நேசமாஇலையும் நிலத்தினிலமைத்து
வாசனைக்கரிகள் வகைக்கொருவிதமாய்
போஜனமெடுத்துநான் புசித்திடவே
பிரியமாகவேவந்தேனே சந்யாசியானே

பரிவுமுன்மேல் உகந்தேனே
உரியகுணமில்லாமல் ஒதிங்கியிருப்பதென்ன

ஓதியஆசனமீதில் அமர்ந்திடும்
போதவேகாய்கரி சாதமளித்திட (புரிய)

சந்யாசி கந்தார்த்தம்.

இப்படிஅமுதீந்திடமனது ஒப்புவதுண்டோகேளும் உருதியைக்
செப்பியளமாதேவுன் சேலையைக்களைந்து நிற்பவளாகி

தரு.

நிருவாணிபிக்ஷதந்திடும் மனதுண்டானல்
வருவேன்போஜனங் கொண்டிட
பருவமுகவதனி பாவைசிரோன்மணியே

பக்ஷமாய்வந்துமே பிக்ஷணைசெய்யவே
இஷ்டமாயருந்தியே தக்ஷணம்போவேன் (நிரு)

கிருபி-கந்தார்த்தம்.

அய்யோஈதென்ன அன்னீதமோத
மெய்யோடுகைகால் மிகவேநடுங்க
பொய்யானவின்பம் பொருளாசையற்று
ஐயோ நடக்கை

தரு.

செய்யென்றுசொல்வதேதையா சந்யாசியாரே
கைகொண்டிடவும் யேதையா
தையல்யெப்படிவந்து தருவதெப்படிசாதம்

தருபதிமெச்சிய பெரியவரிப்படி
நிறைமனதாகவே உரைசெய்யலாமோ (செய்)

சந்யாசி கந்தார்த்தம்.

பெண்டாசைகொண்ட பெரும்பாவியல்ல
கண்டாயோவின்பக் கடலைக்கடந்து
அண்டாததூரிய ஆதித்தன்மீது
உண்டான சோதி.

தரு.

உண்மைதெரிந்துநானுமே சந்யாசியாகி
வண்மையறிய வந்தேனே
கண்மணிதுரோணாச்சாரி காதலியாணபெண்ணே

கண்ணேயுன துகலை வண்ணமகற்றியே
திண்ணமுதளித்திட உண்ணுவேனடி (உண்)

கிருபி-தரு.

என்னவிகடம்பேசுதீர் பெரியோரேவருவீர்
ராஜபோஜனம்தருவேன் என்னவிகடம்பேசுதீர்
பொன்னாரம்பூண்ட பெண்கள்மணியெங்குமிப்படி

பூண்டஆடைகள்தன்னை நீண்டிக்களைந்துவைத்து
ஆண்டவர்க்குசாதம் வேண்டிப்படைப்பதுண்டோ (எ)

சன்யாசி-தரு.

மதிவாடிப்பேசலாகுமோ சேலைகளைந்துயெதிர்வந்து
சாதமளித்திடவே உண்ணுவேனனேமதி
இதுவேவிரதமாக எண்ணிடநடந்ததுண்டு

எப்படிவுன்மனம் ஒப்புவதரிந்துமே
செய்யும்பதிலெனக்கு இப்பவேநடப்பேன் (மதி)

கிருபி-தரு.

பெண்ணாகப்பிறந்தவர்கள் சாண்சீலைமுழச்சீலை
இல்லாமல்வருவதோ பெண்ணாகப்பிறந்த
எண்ணுங்குறிமறைத்து இருப்பதுவேமானம்

இழுக்கமில்லாமலே வழக்கந்தனையேவிட்டு
ஒழுக்கம்தப்பிநடக்க செழிக்குமோமனது (பெ)

சந்யாசி-தரு.

நிர்வாணிபிக்ஷைகூஷதந்திட அமுதெடுப்பேன்வரங்கொடுப்பேன்
மனம்வொப்பிநடக்காவிட்டால் நிர்வாணி
ஒருவாரம்மாதம்ஆண்டு உண்ணாதுறங்கிடாமல்

உண்டிதுவருவது பெண்டுநீதடுத்திட
சண்டையிடுவதில்லை விண்டிதோபோவேன் (நிர்)

கிருபி-விருத்தம்.

மந்தருங்கணவனில்லை மறுத்திடவாதையல்லோ
பூந்திருமனையிற்பூண்ட பொற்கலைதன்னைநீக்கி
கூந்தலைமேனியெங்கும் குழையவேவிரித்துசுத்தி
சாந்தமாங்கிருபியய்யர் தனக்கமுதளிக்கின்றாளே.

கிருபி-தரு.

உச்சிதகணவனும் மெச்சும்சந்யாசிக்காக
அவரிச்சையின்படிசாதம் தந்தனுப்புமென்றுபோக
இவர்நிர்வாணிபிக்ஷைக்ஷயும் தந்தனுப்புமென்றுகூற
நாமும்பரிவில்லாதபோது பாதினள்அதையெல்லாமீறி
ஆடைகளைந்துமேகூந்தலை சுத்தியின்பமாய்தந்தேன்
நல்லவாடைகள்வீசவே சாதம்படைக்கவேவந்தேனே
அன்னங்கரிகாய்கள் பருப்புதயிர்நெய்யும்விண்டேனே
நான்அன்பாகவுண்ணுங்குரு நாதாவென்றுதெண்டமிட்டேன்

சந்யாசி-விருத்தம்.

நிறமுள்ளஅளகத்தாலே நேரிழைசரீரந்தன்னை
மறவுசெய்துபசரிக்க வாய்வைகொண்டதைதவிர்க்க
விரைவாகயன்னமீய்ந்து வீரியம்பெருகிவீழ
பரமரும்மகிழ்ச்சியாகி பக்ஷமாயுரைக்கின்றாரே.

வசனம்.

இப்படி கிருபியானவள் தன் கூந்தலினால் சரீரத்தை மறைத்து சாதம்வட்டிக்கப் பரமசிவமானவர் வாய்வுதேவனைநினைக்க அதிககாற்றுண்டாகி கூந்தலை விலக்க அப்போது பரமசிவம் சொல்வது,

சந்யாசி-தரு.

என்னசுந்திரம்மறையவள் என்னுடன்னிதம்
கன்னல்மதனரதி மின்னற்கொடிபோலும்
என்னெதிரேநின்று அன்னம்படைப்பவள்
பூந்துளிர்மேனியாள் கூந்தலைசுற்றியே
காய்ந்தசுவைகரிகாய் சாய்ந்தன்னமிட்டவள்
நாடியேமாருதி சாடியகூந்தலை
சூடிப்பிரிக்கவும் ஓடிவொளித்தவள் (எ)

பச்சைப்பசுந்தோளும் கச்சணிமாதவள்
மெச்சுவுமையாளென்று இச்சைப்பெருகிட (எ)

சந்யாசி-விருத்தம்.

அரியநற்குணமும்ரூபி அன்னமின்னடையாள்மேன்மை
உரியவள்யருந்ததிக்கு உயர்ந்தகற்புடையாளென்றும்
தெரியயிந்திரியமீறி தெரிக்கவும்சாதமீது
சரியிவட்கில்லையென்று சார்ந்தனன்கயிலைதாமே.

வசனம்.

ஆ ஆ அரிதாகிய மேன்மையும் நற்குணமும் அன்னநடையும் மின்னலிடையும் அலங்கிற்த ரூபலாவண்ணியமும் பதிவிருதா தத்துவமும் அருந்ததிக்கு மேலானகற்பும் உமையவளும் இணையல்லவென்றுஎண்ணினர்கிருபிகாணப்பட்டுஅந்தபுறம்ஓடி ஒளிக்கவும் பரமசிவத்துக்கு ஆசை வுண்டாகி இந்திரியபார்வை பட்டு சாதத்தில் தெரிவிக்க பரமசிவன்மனது மகிழ்ந்து அப்போதே மாய்கையாகிகயிலாசம்போய்விட்டார். கிருபியானவள் முன்போல் ஆடைபூண்டு சொல்வது.

கிருபி-கந்தார்த்தம்,

எந்தனைமனஞ்சோதிக்க எண்ணியேசாதம்வேண்டி
வந்தவர்காணேமென்று மங்கையும்நாணமுற்று
முந்தியேஆடைபூண்டு மெள்ளவேயெட்டிபார்க்க
அந்தசந்யாசி போனார்.

தரு.

அரியேனனம்மாயாதொன்றுமே தெரியேனம்மா
அரியும்அயனும்இந்திரர் அவரெனனைசோதிக்க
தெரியசந்யாசியாய்பரிவாய் வந்தவரென்றும் (அ)

நாரிபாகந்தானேநானிட்ட சாதத்தில்
வீரியம்விழுந்திடவிதம் கண்டேன்யாதொன்றும் (அ)

மெத்தயிருண்டமேகம்பின்னி மறையக்கண்டேன்
சற்றுமறியேகான்சந்யாசி மாயத்தை (அ)

என்னமாயம்மாயமெப்படி போனரோ (அ)

வர்னக்கணவனின்னம் வராதஜாலமேனோ (அ)

துரோணர்-கந்தார்த்தம்.

அரியமால்யீசனென்று அரிவையுந்தயங்கும்போது
சரியானதுரோணருந்தான் ஸ்நானபானங்கள்செய்து
பரிவாகமனையைச்சேர்ந்து பாலசந்யாசியாரை.
தெரியாமல் மனங்கலங்கி.

தரு.

சேதியென்னடிமானே சந்யாசிபோன
நீதிசொல்லடி தேனே
ஆதிமூலமேயென்றுஅவரை மிகத்துதித்து
பாதம்பணிந்துஅன்னம்பகர்ந்தாயே யவர்போன(சே)

கிருபி-விருத்தம்.

பேசவும்பிராணநாதா பெரியவர்நடத்தைசொல்ல
கூச்சமாயிருக்குதையோ கொண்டமுதளிக்கும்போது
நேசமாயவருமென்னை நிர்வாணிபிக்ஷைகேழ்க்க
பாசமாயளிக்கும்போது பதறியேமாய்கையானர்

வசனம்.

கேளும் பிராணேசா அவர்நடத்தையை என்னென்றுசொல்வது எனக்குகூச்சமாகயிருக்கிறது நான்சமையல்செய்து அமுதளிக்கும்போது அவர் மாய்கையாய் போய்விட்டார் எனது பிராணநாயகா.

துரோணர்-தரு.

அப்படிமனம்சோதிக்க வந்தவர்யாரோ
அறிந்துச்சொல்வேன் கேளடி
இப்படிசெய்வாருண்டோஇதுவே புதுமையாகும்
ஈசன்மாலிந்திரன் தேவர்வந்தாரோ
கோசறபுத்தியைக் கொண்டறியேனே (அப்)
தேவர்கெந்திருவர்களோ தபமிகுந்த
சீரானமுனிவர் களோ
ஆரென்றாலுமென்ன அன்புதனைசோதித்து
ஆசையாகவந்து காக்ஷிதராமலே
நேசமாகவுருகொண்டு காரமலே

வந்தவிதமறிந்திட சந்யாசியாக
உந்தன்மனந் தெரிந்திட
சந்தோஷமாகவந்து சாதம்புசித்திடாமல்
சற்பனைசெய்துமே மாயமதாகவே
கற்புநிறைந்தவள் யென்றுமேபோக (அப்)

உச்சிதந்தன்னைக்கண்டேனே உந்தனைநானே
மெச்சிமகிழ்ந்துக் கொண்டேனே
பச்சைப்பசுங்கிளியே பஞ்சரத்தினக்கண்ணே
பாவைய்யென்னிட பாக்கியமிதுதானோ
தேவியேநீமனங் கூசுவதேனோ (அப்)

துரோணர்-விருத்தம்.

வாசவன்முனிவர்தேவர் மாலயன்தானோவென்று
யோசித்துவேகந்தன்னைக் கொண்டுநான்பார்க்கும்போது
ஈசனென்றறிந்தேன்பெண்ணே யிந்திரியங்கலந்திருந்த
போசனந்தனைப்புசித்தால் புத்திரன்கிடைக்குந்தானே.

வசனம்.

பெண்ணே பிராணதேவி இந்திர தேவர்கள் முனியீஸ்வரர்கள் சித்தர் கந்தருவர் ஈசன்மாலயன் யெவர்களோ யோசனா விவேகமென்னும் ஞானதிருஷ்டியினால் அறியும்போது சாக்ஷாதி பரமசிவன்தானே நமது அன்புசோதிக்க வந்தவராகும் அவரது வீரியங்கலந்த சாதத்தை நீபுசித்ததே உண்டானால் நல்லபுத்திரன் கிடைக்குமடி பெண்ணே.

கிருபி-தரு.

அருமைகண்ணாளா அழகியதோளா
அறியாமல்சிவனென்று குறைசெய்தேன்சுவாமி
தருமமோவுனக்கு சகிக்குமோயெனக்கு
சாதந்தனைபுசிக்க என்னாசெய்வேன்பாவி
ஜலமதுசூடிய குலமழுவாளியன்
பெருகியவீரியம் அகலவேகணவனே (அரு)

துரோணர்-தரு.

முகச்சந்திரவதியே முனிசுதன்ரதியே
மொழியுஞ்சந்ததியில்லாக் குறைதீரும்பெண்ணே

செகமெங்குந்துதிக்க செல்வன்வந்துதிக்க
செய்தபுண்ணியவச மறியேனே

சிற்றிடையாளேநீ குற்றமெண்ணமலே
வைத்தசாதங்கொள்ளும் ரத்தினவதியே (முக)

கிருபி-தரு.

தேடரிதானசிவன் வந்துபோன
தீவினைக்கென்னசெய் வேன்-மணவாளாசுவாமி
ஆடரவணியும் அவரடிபணியும்
அன்பனேயின்பஞ்சொல்லும் நலமாமோ

அள்ளுமோயென்கரம் கொள்ளுமோஎன்னுடல்
வள்ளலேசொல்வதும் உள்ளதுதானே (தட)

துரோணர்-தரு.

அன்னமேவாடிநீ என்னடிபோடி
அய்யுருவுபட்டாலே அதினலேபெண்ணே
உன்னிதஅரிது உகந்ததோபெரிது
உனக்குப்புத்திகள்யினி சொல்வேனேபெண்ணே

உடந்தையானசிவன் கடந்துமேபோகவும்
முடிந்துதென்றொருவிதம் நடந்துக்கொள்வாயே (அ)

கிருபி-விருத்தம்.

பிரியமுடன்கணவனுமே உரைக்கும்போது
பெட்டைபரிதனக்களிக்க சாதந்தன்னை
நெறியுடையயிந்திரியம் பழுதுராமல்
நேரானஅவ்வேளை மூர்த்தந்தன்னில்
பரிவுடையவிலாப்புறத்தைக் கிழித்துக்கொண்டு
பாலகனும்அழகுடனே பிறக்கும்போது
அரிவுடையகிருபியதைக் கண்டுவோடி
ஆசையுடன்யெடுத்துநல முரைக்கின்றாளே

கிருபி-தரு.

என்னசுந்திரம்பாருங்கள் செழித்தக்குதிரை
விலாப்புரத்தைக் கிழித்துவந்த
தேதுசுந்திரம் பாருங்கள்
என்னசுந்திரம்பாரும் பொன்னபரணம்போலும்

எனக்குக்கிடைத்ததே இதுவெகுபாக்கியம்
மினிக்கிசீராட்டவும் வெகுவிதசிலாக்கியம் (என்)

மாணிக்கதீபம்போலவே என்பிள்ளைகலிதீரவே
வன்னல்வந்தருளிய மாணிக்கதீபம்போலவே
ஆணிப்பொன்பஞ்சரத்தினம் அதுவும்மிதற்க்கிணையோ

அன்னம்தனைப்புசிக்க அசிங்கிதப்பட்டேனே
மன்னன்மொழியகற்றி மதியுங்கெட்டேனே (என்

பாக்கியம்பெற்றெடுக்கவே நல்லபாசமில்லாமல்மதி
மோசம்போனே பாக்கியம்பெற்றெடுக்க
வேதன்அமைப்புதரனே விமலன்தயவிதுவோ

மெய்யனேயிந்தசுகம் யாருக்குக்கிடைக்கும்
அய்யனேநன்மையை உலகெலாம்படைக்கும் (என்)

எப்படியென்றுசொல்லுவேன் இந்தபாலன்பிறந்து
வந்தகோலமும்காலமும் எப்படியென்றுசொல்வேன்
ஒப்புள்ளமன்மதனும் ஒளிவும்அழகைக்கண்டு

உன்னிதபாலகனை உகந்தெடுத்தேனே
சந்நிதிகணவன்கை நான்கொடுத்தேனே (என்)

கிருபி-வசனம்.

சரணம் சரணம் பிராணேசா பரமசிவத்துக்கு படைத்த அற்புதமான சாதத்தைப் பெட்டைக் குதிரைக்கு அளித்தேன் அதின் விலாப்புரத்தைக் கிழித்துக்கொண்டு வெளியில் வந்த சுந்திரமான மைந்தனைப் பாரும் பிராணேசா.

துரோணர்-விருத்தம்.

பரமருங்களிக்கவந்த பைங்கிளிமாதேயீசன்
வரமருளாலேயிந்த மைந்தனுங்கிடைக்கப்பெற்றோம்
சரசசல்லாபி அஸ்வத்தாமனே நாமமாகும்
வரிசையாய்ச்செல்வன் தன்னைவளர்த்துநீவருகுவாயே

வசனம்,

நமது பக்தியறியவந்த பரமசிவனுக்கு குமாரகனை அஸ்வத்தினிடமாகப் பிறந்தபடியினால் அஸ்வத்தாமனென்று நாமதேயம்அளித்தேன் நமக்குப் புத்திரனில்லாதபடியினால் மகா செல்வமாகவளர்த்துவாரும் பெண்ணே அப்படிவளர்த்துவரும்

போது பாலில்லாமல் குழந்தையானது பரதவித்திருக்க கிருபா ங்கன்னியானவள் கணவனைப்பார்த்துச் சொல்வது.

கிருபி - தரு

ஆசைநாயகாயிந்த அருமையாகியசுதனைவளர்க்க
ஆசைநாயகாநேசமாகவே விலைப்பால்புகட்ட
நிலைக்குமோநிதம் இளைக்குதேபிள்ளை (ஆ)

துரோணர் - தரு.

தேசமெச்சியயெந்தன் தேவியேயிதுஎன்னபாவமோதேசம்
மாசிலாமணிமைந்தனுக் காகவே
வாட்டங்கொண்டாலினி நாட்டமுண்டோவேறே (தே)

கிருபி - தரு.

பாவியானனேஒரு பசுவைவாங்குவீர்-சிசுவைவளர்க்க
நாவசைந்திடநா டசையுமென-பாவியா
நல்லபழமொழி வல்லவாயில்லையோ-பாவியா

துரோணர் - தரு.

தேவியாளேநீ தெரிந்துச்சொல்லவேஅறிந்துபார்க்குறேன்
தாவியென்மனம் தயங்குறேனடி
தங்கமேகைப்பொருள் யெங்கேயிருக்குது

கிருபி - வசனம்.

கேளும் பிராணேசா கைப்பொருள் இல்லாத காலமாக யிருந்தாலும் உனக்கிந்த உலகத்தில் அனேகம் மாணுக்கர்கள் இல்லையோ அவர்கள் இடத்திலாவது ஒரு கறவல் பசுவாங்கி வரலாகாதா சுவாமி.

துரோணர் - விருத்தம்.

சொல்லவேஅதின்மேல்புத்தி துடரவேநினைப்புண்டாகி
நல்லபாஞ்சாலன்பாதி நாடதுதராவிட்டாலும்
வல்லவனிடமேசென்றால் மகிழ்ந்தொருபசுகொடானே
செல்லுவோம்அவனைக்காண சீக்கிரமாய்வருகுவாயே.

வசனம்.

பிராணநாயகி நீ எடுத்துக் காட்டின போது அதின் மேல் எனக்கு நினைவு வந்தது பாஞ்சாலராஜனுக்கும் எனக்கும் பால சினேகிதம் அக்கினிகோத்திர முனிவரிடத்திலிருந்து வில்வித்

தைபரிகைஷ செய்துவருகையில் என்னால் அநேகவித்தை யுணர்ந்து இளவரசு பட்டத்திற்கு போகிற காலத்தில் எனக்குபாதி நாடளிப்பதாகச் சொல்லி யிருக்குறன் அநுதரா விட்டாலும் ஒருபசுவாகிலுந் தரமாட்டாளே சீக்கிரமாகப் பாஞ்சாலபுரிக்கிப்போகலாம் வாரும் பெண்ணே பிராணநாயகி.

பொது-வசனம்.

இவ்விதம் துரோணுச்சாரி யானவர் பாஞ்சாலனைக்காணும் படிக்கு பாஞ்சாலதேசம் நாடிவருகயில் பாஞ்சாலராஜன் சபாவாகிய கொலுவில் வருகிறுர்.

பாஞ்சாலன்-விருத்தம்.

தங்கமாமகுடம்பூண்டு தரளவெண்குடைபிடிக்க
மங்களமாதராட வரிசைமந்திரிகள்சூழ
நங்கையர்கவுரிவீச நான்மறையோர்கள்பாட
பொங்கமாம்புகழ்பாஞ்சால பூபதிவருகின்றுரே.

பாஞ்சாலன்-தரு.

ராஜன்திருவுலவும் தேசம்புகழ்பாஞ்சால
ராஜன்கொலுவதாகினுன் மணிமகுடமிலங்கிட-ராஜன்
நேசமாகியமதிமந்திரிகள் ஆனைசேனை
திதிமிகப்பரவிய ரதமுடன்பரிகளும்
பதறியேவருகவும் அதிரவேபூமி (ராச)
சிட்டமாகவேசந்திர வட்டக்குடைசுவிக்க
தேசமன்னவர்வணங்கவே எதிர்கண்டுவணங்கியே-தே
சட்டமணிமார்பினில் கட்டும்வடமசைய
தருபதியிவரென பெருகொளிபரவிய
நறுமலர்சூடிய அரிவயர்சூழ (ரா)
சல்லரிபூரிகைபேரி மல்லரிடமரம்மீறி
சகலவாத்தியம்பாடவே இந்தவுலகம்கிடுகிடென்ன-சக
சொல்லரிய மன்மதனை வெல்லுந்திரமுள்ளவன்
சுந்திரம்பெருகிட கந்தமும்மலரணி
சந்தனஞ்சாந்து சவ்வாதுகள்வீசவே (ரா)
வீரவெண்டயங்கொஞ்ச சூரதீரர்களஞ்ச
வில்லுங்கரமிலங்கவே வெகுஆயுதசரவணை-வில்

கேளும் பிராணேசா! கைப்பொருள் இல்லாத காலமாக யிருந்தாலும் உனக்கிந்த உலகத்தில் அனேகம் மாணுக்கர்கள் இல்லையோ அவர்கள் இடத்திலாவது ஒருகறவல் பசுவாங்கிவர லாகாதா சுவாமி.

துரோணர்-விருத்தம்.

சொல்லவே அதின்மேல்புத்தி துடரவேநினைப்புண்டாகி
நல்லபாஞ்சாலன்பாதிநாட துதாரவிட்டாலும்
வல்லவநிடமேசென்ருல் மகிழ்ந்தொருபசுகொடானே
சொல்லுவோம்அவனைக்காண சீக்கிரமாய்வருகுவாயே.

வசனம்.

பிராணநாயகி நீ எடுத்துக் காட்டினபோது அதின் மேல் எனக்கு நினைவுவந்தது பாஞ்சாலராசனுக்கும் எனக்கும் பால சினேகிதம் அக்கினிகோத்திர முனிவரிடத்திலிருந்து வில்வித்தை பரிபாஷை செய்து வருகையில் என்ஞல அநேகவித்தை யுணர்ந்து இளவரசுபட்டத்திற்கு போகிரகாலத்தில் எனக்குப் பாதிநாடளிப்பதாகச் சொல்லி யிருக்கிறுன் அது தாவிட்டாலும் ஒரு பசுவாகிலும் தரமாட்டானே சீக்கிரமாகப் பாஞ்சால புரிக்கிப் போகலாம் வாரும்பெண்ணே பிராணநாயகி.

பொது-வசனம்.

இவ்விதம் துரோணுச்சாரியானவர் பாஞ்சாலனைக் காணும் படிக்கு பாஞ்சாலதேசம் நாடிவருகையில் பாஞ்சாலராஜன்சபா வாகிய கொலுவில் வருகிறுர்.

துரோணர்-தரு.

தாரணிகெடிபெற்ற சண்டப்ரசண்டனென்ன
தவரில்லாமாதருங் கவுரிகள்வீசவே
பகைவர்கள்மிகுத்திடும் எவர்களுமஞ்ச-(ராஜன்)

பாஞ்சாலன்-விருத்தம்.

திறமுள்ளவேதம்வாழ்க திசைமன்னர்செங்கோல்வாழ்க
அறம்நெறிநீதிவாழ்க அந்தணர்குலமும்வாழ்க
சுரர்முனிவோரும்வாழ்க தொல்லுலகெங்கும்வாழ்க
வரமருள்பெருகுமீசன் மலரடிக்கடியேன்போற்றி.

வசனம்.

கேளும் மந்திரிமார்களே ஆதிமூர்த்தியாகிய ஸ்ரீ பரமசிவத்தை வணங்கி கொலுவாகினேம் இந்தபாஞ்சாலபுரிக்ஷேமம்பொருந்தி யிருக்கின்றதா சொல்லும் மந்திரிமார்களே.

வசனம்,

இப்படி பாஞ்சாலராஜன் கொலுவாகயிருக்கையில் துரோணச்சாரியார் யேதென்றுச் சொல்வது.

துரோணர்-கந்தார்த்தம்,

அன்னமேதேனேமானே ஆசிர்மந்தன்னேவிட்டு
மன்னவன்வாழ்பாஞ்சாலன் மாநகர்வந்தடைந்தோம்
இன்னகர்தனிலேநீயும் யிவ்விடத்திருப்பாயானும்.
நன்னிதிதரும் பாஞ்சாலன்.

தரு.

ராஜனேக்கண்டுவருவேன் அடிமயிலெனுங்குயிலே
ராஜன்சமுகம்வந்தேன் நேசன்யெனதுசிஷன்
பேசாதிருப்பதென்ன பாசமறியவேண்டி (ரா)

பாஞ்சாலன்-விருத்தம்.

ஆதியில்நமக்குவித்தை அளித்திடும்பாசத்தாலே
பாதிநாடளிப்பேனென்று பக்ஷமாயுரைத்துவந்த
சேதியைஉறுதியாக சிந்தைவைத்தவிடம்வந்தார்
ஓதியமுனிவன்தன்னே உருட்டிவிட்டோட்டுவேனே.

வசனம்.

ஆதியில் கல்விச்சாலேயில் இஷ்டனாகவும் வித்தை ஓதிவைத்தகுருவாகவும் மிகுந்த இஷ்டத்தினாலே எனக்குப் பட்டமானபின்பு நீர்வந்தால் பாதிராச்சியந் தருகிறேனென்றேன் அதனால் பாதிராச்சியம் பெற்றுக்கொள்ள ஆசையோடுவருகின்ற துரோணரை முகங்காட்டி உருட்டி மிரட்டி சொற்பிரட்டி துரத்தும்படி ஆலோசித்திருக்கிறேன் மந்திரிமார்களே.

துராணர்-தரு.

ராஜனேயிருவரும் நேசமுடனிருந்த
நலத்தையும்இதற்குள்ளே மறந்தீரோ

பாசமுடனேவர பேசாமலிருந்திட
பாவத்தையறியாமல் இருந்ீரோ
தேசராஜருக்கிந்த தீவினையடுக்காது
தெரியயெனதுமுகம் பாருங்கெம்பீரனே

சீலனுகியபால சினேகிதா
லோலனேவரும் மூலமறிகுவாய் (ரா)

பாஞ்சாலன்-தரு.

அந்தணமுனிவனே எந்தவூரடாநீயும்
அறிந்தவன்போல் பேசவந்தாயோ
குந்தகமில்லாமல் உந்தனுடனேயானும்
கூடிக்குலாவமொழி தந்தாயோ
சந்தேகமில்லாமல் இந்தசபையில்வந்து
தனக்குள்ளேஅறியாமல் எனக்குத்தெரியுமென்று

தந்திரத்துடன் வந்துபேசியே
மந்திரத்தையும் சிந்தைவாட்டுவேன் (அந்த)

துரோணர்-தரு.

பார்த்திபா அக்கினி கோத்திரரிடத்திலே
பரிவாய்வித்தைக் கற்றுக்கொண்டோமோ
தோத்திரப்பக்தனைய் என்னிடத்திலும்வித்தை
சூக்ஷமறிந்துக் கொண்டுநின்றுயே
க்ஷாத்திரமாமொழி ஏமாத்திப்பேசவேண்டாம்
தருவேன்அரசுபாதி வருவாயென்றெனக்கோதி

தம்பிசொன்னதை நம்பிவந்தேனே
இன்பமாகவே தெம்புசொல்குவாய்

பாஞ்சாலன்-தரு.

அதிவிதமாகியமதி மந்திரிமார்களே
அறிந்தசினேகிதன் யென்றுனே
இதவாகவில்வித்தை மிதமாகப்போதித்த
குருவென்றுமே மேன்மைகொண்டேனே
இதைவிடதாயாதி பாகங்கேழ்க்கவந்தால்
எப்படியிருக்குது செப்புவீரதைக்கண்டு

இன்னமிப்படி சொன்னவன்சபை
தன்னிலிருப்பது யென்னகாரணம் (அதி)

துரோணர்-விருத்தம்.

அட்டியில்லாக்காவலரே நீங்கள்யென்னை
நெட்டியேதள்ளவந்தீர் நில்லுங்கள்மனந்துணிந்து
வெட்டியேபேசும்மன்னா விற்குருநீரேயென்று
கெட்டியாய்சொன்னவார்த்தைக் கிடமுண்டோஅறிவிப்பாயே

வசனம்.

கேளுங்கள் காவலாளிகளே சற்றுவதுயோசியாமல் என்னை நெட்டித்தள்ள வந்தீர்களே நில்லுங்கள் கேளும் மகாராசனே நீரேயெனக்கு விற்குருவென்றும் நான் உனக்கு பாதிராச்சியந் தருவே னென்றும் சொன்னது உண்டா இல்லயா அதற்கு ஒரு சமாதானம் சொல்லும் மகாராசனே.

பாஞ்சாலன்-தரு.

பங்கும்பங்காளியல்லவே நாடுபாதிதருவேனென்றுசொல்லவே
எங்கேகற்றுக்கொண்டாய் இந்ததிருவெடுக்க
ஏதுக்குவிடச்சொன்னாய் சூதுக்காராபோம்போம்(பங்)

துரோணர்-தரு.

பிரியஞ்சொன்னயெந்தன் மீதிலும்மிப்போ
பரிவுயில்லாவிட்டப் போதிலும்
சரியாகும்என்னிட தாயில்லாப்பிள்ளைக்கி
ஒருப்சுவாகிலும் உகந்துதருவீர்மன்னா(பிரி)

பாஞ்சாலன்-தரு.

பங்காளியாய்வழக்காடியே அந்தபடுவழக்கைவிட்டுநாடியே
அங்கமோஉனக்கிது யாசகனானென்று
அருன்மயாய்ப்பசுகேழ்க்க தருவதில்லை தள்ளும்(பங்)

துரோணர்-தரு.

இப்படிசொல்வதும்நீதியோமன்னா எதிரிஉனக்குநான்வாதியோ
அப்படிநினைப்பது அரசுக்கழகல்ல
அளித்திடபசுஒன்று களித்திடசுகமுண்டு (இ)

பாஞ்சாலன்-வசனம்.

சினேகிதனென்றும் குருவென்றும் தாயாதியென்றும் படி வழக்கு செய்யாமல் முன்னமே கேட்டால் ஒருபசுவல்ல இரண்டுபசு தருவேன் இப்படி இவரை இன்னம் பேசவிடாமல் சபையைவிட்டு ஒட்டுங்கள் மந்திரிகளே.

துரோணர்-விருத்தம்.

வல்லவனாகச்சொன்ன வார்த்தையைமறித்துதள்ளி [தேன்
சொல்லியேஉன்னைக்கொல்வேன் துஷ்டனேமனம்பொருத்
கல்விகற்றவனாலுன்னைகட்டி பங்கம்செய்யாவிட்டால
வில்லிதுவில்லுமல்லாவிற்குருவல்ல கண்டாய்.

வசனம்.

கேளும் மகாராசனே சொற்பிரட்டி யென்னை சபையை விட்டுத் தள்ளச்சொன்ன உன்னை என் கைபாணத்தினால் யிப்போதே கொல்லுவேன் நீ சிஷனென்று மனம் பொருத்தேன் இனி என் வித்தையை உன்னைப் போலொத்த அரசருக்கு கற்பித்து அவனாலே உன்னை தேற்காலில் கட்டிக் கொண்டு வரச் செய்து பூமி மன்னர் கூடிய சபையில் உன்னைப் பங்கப்படுத்தாவிட்டால் என்கையிலிருப்பது வில்லு மல்ல எனது பேர் துரோணாச்சாரியுமல்ல நல்லதாகட்டும் ஒய் பாஞ்சாலமகாராசனே இப்படிதுரோணர் சபதமிட்டிருக்க கிருபி பேசுதென்றுச்சொல்வது.

கிருபி-விருத்தம்.

பருவமதானமன்னன் பாதிநாடளிப்பேனென்று
தருமொழியின்பங்கொண்ட சார்ந்தொருபசுவில்லாமல்
வருவதுவருத்தமேதோ வந்திந்தபங்கமாகி
திருமுகம்வாட்டமொன்றுந் தெரிகிலேன்என்னசெய்வேன்

கிருபி-தரு.

அரசன்சமுகம்கணவன் போனதக்ஷணத்திலே
மர்மமாகித்திரும்பிய தென்னமாயமோ
ஆசையுள்ளராசனென்றும் அன்பனென்றுமே
நேசமாகப்போனதென்ன நீதியறியேன்
தங்கமுடியரசர்சூழும் சபையிலென்னமோ
சங்கையாகவாரதென்ன சற்றுமறியேன்

பட்டணத்துராசபேட்டி பார்த்திடாமலே
நட்டமுகமாய்வாரதை நானறிகிலேன்

கிருபி-வசனம்.

கேளும் எனது பிராணேசா தாங்கள் போய் வந்த சங்கதி யென்ன சொல்லும் பிராணேசா.

துரோணர்-ஜம்பை-தரு.

பாஞ்சாலன்முன்புசொன்ன பாதிபங்குக்குவந்தேனென்று
வாஞ்சையில்லாமல்சொல்ல வந்துமதிகுலைந்தேன்

கிருபி-தரு-ஜம்பை.

அத்தியருளாளன்போலே அவன்நம்மைஉண்டுபண்ண
கர்த்தனவன் தானேஅதனல் வாடிகலகப்படலாமா

துரோணர்-தரு.

பக்ஷமுள்ளதேவிஅடி பைங்கிளியேரஞ்சிதமே
கஷ்டகாலமவந்துமனங் கலங்கவிதிவசமோ

கிருபி-தரு.

சாற்றுமொழியைக்கேளும் எந்தன் தமையன்குருபுதல்வர்
நாற்றைந்துபேருக்குங்கல்வி தருமிடந்தாண்டிவாழ்ந்திடுவோம்

கிருபி-வசனம்.

கேளும் பிராணநாயகா அஸ்தினபுரியில் இருக்கும் குருபுத்திரரான நூற்றைந்து பேருக்கும் என் தமயனாகிய கிருபாச்சாரி வித்தை போதிக்கிறார் அவரிடம் சென்று நாம் சுகப்படுவோம் வாரும் பிராணநாயகா.

துரோணர்-வசனம்.

அப்படியே செய்வோம் வாரும்பெண்ணே பிராணநாயகி.

பொது-வசனம்.

இவ்விதமாக அஸ்தினபுரியில் கிருபாச்சாரி இடம்வில்வித்தை கற்றுவருகின்ற துரியவாள் தொண்ணூற்தொன்பதுபேரும் பாண்டவாள் ஐந்துபேரும் விடியற்காலத்தில் பந்து விளையாடும்படியாக சபைக்கு வருகிறார்.

துரியன்-விருத்தம்.

சரிகைகட்டாரிபாங்குதொடுத்தசல்லடமுங்கச்சை
சரிகையும்மணிபதித்த சர்வபூஷணங்கள்மின்ன
துரியவன்தம்பிமாரும் துணிந்துபந்தடிக்கவேண்டி
அறியவேபாண்டுமைந்தர் அழகுடன்வருகின்றாரே.

துரியன்-தரு.

ராஜகுமாரர்கள்வந்தார் நல்லகுருகுலவம்மிச
ராஜகுமாரர்கள் வந்தார்
ராஜன்துரியவர்கள் மாசில்லாப்பாண்டவர்கள்

நாடியேபந்துகள் ஆடவேவேகமாய்
கூடிகளித்திட வேடிக்கையாக (ரா)

முத்துசுட்டியுந்தொங்கலாட நல்லஒளிமிகும்பரவிய
ரத்தினத்தாவடமாலை யாட
பத்துபத்துஐவரும் பரஞ்சுடராகத்திர்த்து

பாலசமுத்திரம் சீலகிரணவடி
வோலமதாகவே ஞாலமுமஞ்ச (ரா)

தண்டைவெண்டயம்கீதமிஞ்ச அதிவீரபராக்கிரமம்
யெண்டிசைவேந்த ரெல்லாம்அஞ்ச
கண்டசரங்களாட கடகம்பளபளென்ன

கரமதிலழகிய திறமுள்ளவாளியும்
பரவியிலங்கிட புரவலர்சூழ (ரா)

கொரடிகூட்டத்தைவிட்டுநீங்கி நவமணிகளழுத்திய
இரடியேபந்துக்கொட்டி தாங்கி
திராடாவசனங்கூர நீதிப்பிறிதாபமுடன்

நிந்தையில்லாமலே சிந்தைகளித்திட
வந்துமேகூடினார் பந்துகள்ஆட (ரா)

துரியன்-விருத்தம்.

தருமபூபதியேபீமா தனஞ்செயாநகுலதேவா
ஒருமையாய்நீங்களெல்லாம் ஒருமிக்கவந்துநில்லும்
பெருமையாய்நாங்கள்நூறு பேருமேஎதிர்த்துநின்றோம்
அருமையாய்ஓர்பந்தாட்டம் ஆடவேவருகுவீரே.

வசனம்.

கேளும் பாண்டவர்களே நீங்கள் ஐந்துபேரும் ஒருபுறத்திலும் நாங்கள் நூறுபேரும் மற்றொருபுறத்திலிருக்குரோம் வர்ணபந்தெடுத்து கொட்டி அடித்து சற்றுநேரம் பந்து விளையாடுவோம் அண்ணாவே.

தர்மர்-வசனம்.

அப்படியே நல்லது தம்பி துரியோதனா.

தர்மர்-தரு.

பந்தெடுத்தேன் துரியா முதலாட்டம்-பந்தெடுத்தேன்
பந்தொன்றுவருகுது பதறாமல்பிடியுங்கள்
இந்தகோட்டியைகாட்டி இழுத்துவீசியேவிட்டேன் (பந்)

துரியன்-தரு.

வந்தபந்தையுமெடுத்தேன் பஞ்சவர்களே-வந்த
வந்தபந்தையும்வாங்கி வாட்டிடகோட்டியை
எந்தன்சமர்த்தாலே இதோவிடுத்தேன்பாராய் (வ)

தர்மர்-தரு.

விட்டபந்தைபிடிக்க பீமசேனா-விட்டப்
எட்டாமலோடியே சட்டமாய்விழுந்துதே
விட்டேனிதோபாராய் விழுந்தபந்தெடுத்துமே (வி)

பீமன்-விருத்தம்.

துரியபூபதியேஅண்ணா சொல்லுவேன்நானும்பந்தை
எறியவேஅதைப்பிடித்தால் என்விழும்கிணத்தில்பந்து
அறியலாம்நீங்கள்தானே அதையெடுத்திடவும்நீதி
நெறியாகயிதையெடுத்து நீங்களும்தருகுவீரே.

வசனம்.

கேளும் துரியோதனா நான்விட்டபந்தை நீங்கள்பிடித்தால் அதுகிணற்றில் விழுமா அதைநீங்கள்தானே எடுக்க வேண்டியதென்று வழக்காடி இருக்கும்போது துரோணரும் அவர்தேவியும் அவ்வழியாக வருவது.

துரோணர்-தரு.

அன்னநடையழகிபெண்ணே அஸ்தினாபுரிநகர்காணுபார்

கிருபி-தரு.

வண்ணமேனிஅழகாயினி மனதுசந்தோஷமாய்வாரேனிதோ

துரோணர்-தரு.

சாலையும்சோலைகளும்நல்ல சாதிவ்வருணமுள்ளவிதிகண்டு

கிருபி-தரு.

சோலைகுயில்மயிலும்கிளி சொல்லுக்குகந்திடும்நாடிதுவே

துரோணர்-தரு.

மாணிக்கதீபம்போலேவெகு மைந்தரைப்பாருமேசந்திரமே

கிருபி-தரு.

ஆணிப்பொன்னாபரணம்பூண்ட அவர்களோகுருமைந்தர்
[கண்டருளும்

துரோணர்-தரு.

ஆழக்கிணத்தருகில் ஆரப்பாரீங்களெல்லாம்
சூழயிருப்பதென்ன சண்டைசூழயிருப்பதென்னமோ

பிள்ளைகள்-தரு.

ஆசையாய்க்கேழ்க்குமையா அஸ்தினபுரிமைந்தர்நாங்களே
சந்திரகுலராஜர்மைந்தர் நாங்களே

துரோணர்-தரு.

தர்மபுத்திரர்களே தனுர்வேதம்ஓதிவைத்த
குருசிகாமணியோரே தங்களுக்கப்பா-குருசிகாமணி

பிள்ளைகள்-தரு.

விந்தைசற்றுவந்தமைந்தர் கிருபாச்சாரி
சந்திரகுருவாகும் எங்களுக்கெல்லாம்-சந்திரகுருவா

துரோணர்-தரு.

இந்தகிணத்தருகில்வந்த சச்சரவென்ன
மைந்தர்களேசொல்லுங்கள் எனக்கறிய-மைந்தர்களே

பிள்ளைகள்-தரு.

தந்தபந்துமுடுக்கி இந்தகிணத்தில்விழ
நொந்துசச்சரவாகிறோம் இருவருக்குள்-நொந்துசச்சர

துரோணர்-வசனம்.

கேளுங்கள் பிள்ளைகளே இந்த பந்தையெடுக்கும்படியானவி த்தையை யாரும் உங்களுக்கு கற்றுக்கொடுக்கவில்லையா நல்லது யிருக்கட்டும் ஒருபிடி சுப்பல் கொண்டு வாருங்கள் பிள்ளைகளே.

பிள்ளைகள்-வசனம்.

அப்படியே கொண்டுவந்தோமையா சுவாமி.

துரோணர்-வசனம்.

இவ்விதமாக துரோணாச்சாரியார் பிள்ளைகளுக்கு சொல்லி விட்டு வில்லைவாங்கிமந்திர உபதேசம்செய்து பந்தையெடுப்பது.

துரோணர்-கந்தார்த்தம்.

இப்படிமைந்தர்கூற யின்பம்கொண்டிங்குவந்தேன்
கைப்பிடிவில்லைவாங்கி கடுகியேநாணியேற்றி
செப்பிடஅந்தவில்லு சிவ்வென்றுகிணத்தில்பாய
சுப்பல் ஒன்றைவைத்து.

தரு.

தொடுத்துவிட்டேனே ஒன்றின்மேலொன்றாய்
பிடித்து விட்டேனே
தொடுத்தசுப்பலதை பிடித்துசுப்பலும்கிட்டி
அடுத்துபிடித்துவாற எடுத்துபந்தையும்தாராய்-தொ

பொது-வசனம்.

இப்படியாக விட்டபந்தை பிடிக்க சுப்பல்ஒட்டி கரையேறி வந்தவுடனே அதை வெளியில் வாங்கி பந்தை கொடுத்து விளை யாடச்சொன்னபோது அதை வாங்கி அர்ச்சுனன் முன்போல வே கிணத்தில் விழும்படியாய் வீசுவது.

அர்ச்சுனன்-தரு.

வீசிவிட்டேனே பந்தைவீசிவிட்டேனே
வீசினேன்பதறாமல் ஆசையாய்கிணத்தில்விழ
தூசிபோலகிணத்திலேசா வீசவேவிழுந்ததைப்பார் வீசி

துரியோதிரன்-தரு.

போடலாமோபந்தை விசையாய்போடலாமோ
போடலாமோகிணற்றில் ஆடலாமோவிழுமட்டி
ஓடிவாடாநீயெடுக்க வாடினால்விடுவதுண்டோ போ

அர்ச்சுனன் தரு.

விட்டதேண்டா பந்தைபிடிக்காமல்விட்டதேண்டா
விட்டுபிடிக்காமல் நெட்டுடன்நானெடுக்க
கட்டும்வார்த்தையாடியென்னை திட்டுவதென்னடாநீங்கள் விட்

துரியன்-தரு.

விழவிடலாமோவிஜயாபந்தை விழவிடலாமோ
விழவேணுமென்றுவீசி ஆழமாங்கிணத்தில்விட்டு
தாழ்வுசெய்தவனேஉன்னை சூழவந்துபற்றினேமோவிழ

அர்ச்சுனன்-கந்தார்த்தம்.

பந்தையும்விடுத்தா யென்று பலருமேகூடியென்னை
தொந்தரவுகள்செய்யவேண்டாம் சுருக்கினிலேடுத்துதாறேன்
விந்தைவிலேவாங்கிசுப்பல் விடஒட்டிவரவேமந்திறம்
தந்துமேயிவரைப் போலே

தரு.

சரசரன்றெடுத்தேன் சுப்பலேக்கொண்டேன்
சரசரன்ருேட்டியே வரவரகிட்டியே
தந்திடநானிதோ பந்தையெடுத்தேனே சர

துரோணர்-வசனம்.

வாருமப்பா நீதானு அர்ச்சுனனென்பவன் வுனக்கு வித்தையைகர்ப்பித்த வரலாறு சொல்லுமப்பா அர்ச்சுனு.

அர்ச்சுனன்-கவி

பராபரனும்பரமசிவனுகவந்து
பந்தெடுக்கமந்திறத்தைச்சிறித்து
உதடசைய அக்ஷசறத்தைஅதனுல்கண்டு
உண்மையிதுநானெடுத்தேன் உன்தாள்போற்றி

துரோணர் விருத்தம்.

இதையமதுகளித்துயிவனுலேஇங்கே
இட்டதொருசபதமதைமுடிப்பேன்
வதனமுகமைந்தருக்குவிடையளித்து
மனைவியுடன்மைத்துனன்வருகின்றுரே.

அர்ச்சுனன்-வசனம்.

தாங்கள் பந்தை யெடுக்க மந்திரம் உச்சரிக்கிற போது உதடு அசைகின்ற சைகையினால் இன்ன " அக்ஷரமென்று சூட்டி அதனாலே யெடுத்தேன் குருநாதரே.

துரோணர்-வசனம்.

அப்போது அர்ச்சுனன் சொன்ன வசனத்தை கேட்டு மனங்களித்து இவனால் நமது சபதம் ஜெயித்து கீர்த்திப் பெறுவோமென்று பிள்ளையை அனுப்பிதானும் தன்தேவியுமாக தன் மைத்துனன் கிருபாச்சாரியிடம் சேர்ந்து களித்து யிருக்க பிள்ளைகளும் வீடு சென்று யிருக்க அன்று மைத்தாநாள் வீஷ்மாச்சாரி கொலுவுக்கு வருவது.

விஷ்மச்சாரி-விருத்தம்.

அகிலமும்புகழ்கெம்பீறன் அழகுமன்மதனுமென்ன
பகலவனெனவெகாந்திபணிகளும் அலங்கறித்து
புகலவேமேலாமென்று பூமிபூபதிகளான
சகலரும்பணியும் வீஷ்மாச்சாரியும்வருகின்றாரே

விஷ்மாச்சாரியர்-தரு.

சங்கரன்செஞ்சடைமேவும் கங்கைசுதன்விஷ்மாச்சாரி
சாரியாய்கொலுவதாகினார் நவமணிதருபெருகொளி
சூரியன்போல கொலுவாகினார்

சிங்காரதீரகெம்பீரன் திகழுமணிஉதாரன்
தேசதேசபல ராஜர்வணங்கிட
ஆஜராகமலர் வாசம்நெருங்கிட சங்

ஆலவட்டமாதர்போக அரிவையர்நடனமாட
அணியணியாய் சேனைசூழவே
கரிபரியும்ரதமுடன் 'அணியணியாய்சேனைசூழவே
மேலும்வட்டங்குடைதன்ன விந்தைசந்திரஆரமின்ன

விண்டலரனைவரும் கண்டதிசயித்திட
தண்டையும்வெண்டயம் அண்டியொலித்திட சங்

வெற்றிபேரிகைமுரசு துத்தாரிடமாரமடங்க
விருதுவாத்தியம்பாடவே நல்லஓசைகள்மிஞ்சியே

விருதுவாத்தியம் பாடவே
அஸ்த்தினுபுரத்தையாளும் அரசர்க்கரசனை

அரிவைசிகாமணி நறுமலர்சூடி
பெருமையாய்காவலர் வருகவேகூடி சங்

வட்டவில்லுத்தானிலங்க கட்டியக்கலைதுலங்க
மகரகுண்டலமாடவே இருசெவியில்அலங்கிர்த
மகரகுண்டல மாடவே
கட்டழகன் தந்தைதன்னை கிட்டியிளவயதில்

காசினிஅஞ்சியே மாசில்லாதீரன்
வாசனைபரிமளம் வீசியதீரன் சங்

பொது-வசனம்.

இவ்விதமாக வீஷ்மர்கொலுவில் இருக்கும்போது திருதராட்டிரன் கொலுவுக்கு வருவது.

திருதராட்டிரன்-தரு.

சஞ்சயமாமுனியென்னடா சமையத்தில்
சபையில்இறைச்சலாய் இருப்பது

சஞ்சயன்-வசனம்.

ஐயனே உன்பிள்ளைகளும் தம்பி பிள்ளைகள் நூற்றைந்து பேரும் வருகுறார்கள்.

திருதராஷ்டிரன்-வசனம்.

அப்படியா வந்தால் வரட்டும் அப்போது பிள்ளைகள்வந்து சொல்வது.

பிள்ளைகள்-தரு.

ஐயாவேதுரோணச்சாரிவந்தார் ஓய்யாராஞ்சிதமாருடனே
தங்கநிறமுடைய அய்யா எங்கள்குருவுக்குமைத்துனராம்
கிணற்றில்விழுந்தபந்தை க்ஷணத்திலெடுத்தனர்மந்திரத்தால்
அவரைக்குருவாக்கிவைத்தால் தவறுமல்வில்வித்தைபெற்றிடு
[வோம்

பிள்ளைகள்-வசனம்.

கேளும் பாட்டனரே ஐயா தந்தையே எங்கள்குருவுக்குமைத்துனராகிய துரோணச்சாரி வந்திருக்கிறார் அவரைக் குருவாக வைத்தால் நல்லது தந்தையே.

திருதராஷ்டிரன்-வசனம்.

அப்படியே நல்லது ஏவலாளிகளே கிருபாச்சாரியுடனே எங்கள் குருவுக்கு மைத்துனராகிய துரோணுச்சாரி வந்திருக்கிறார் அவர்மைத்துனரையும் அழைத்து வாருங்கள்.

கிருபர்-துரோணர்-வருவது.

பன்னியவேதசாஸ்திரம் பலவகைவித்தையெல்லாம்
உன்னியசிறப்படைந்து உலகெலாந்துதிக்கவந்த
மின்னியவதனமுள்ள வீஷ்மரைக்காணவேண்டி
துன்னியகிருபாச்சாரி துரோணரும்வருகின்றாரே.

துரோணர் தரு.

அந்தணர்குலத்தில்வந்த அருமையானகிருபாச்சாரி
விந்தையுள்ளதுரோணுச்சாரி வந்துமேவினார்
முத்துக்குல்லாதான்துலங்க மோகனபதக்கந்துன்ன
சித்திரக்களபம்வீச சீருடன்வந்தார்
பூங்காவிவேஷ்டிபூண்டு பூமிமன்னந்தான்வணங்க
பாங்காகவேநடந்து பரிவுடன்வந்தார்
உன்னிதஅகரஞ்சாலை வன்னியகுலகிருஷ்ணசுவாமி
பன்னுந்தமிழ்தான்விளங்க பரிவுடன்வாரூர் அந்

வீஷ்மர்-விருத்தம்.

தங்கமாமறைவல்லோனே துரோணருன்பாதம்போற்றி
மங்களமாகராஜவரிசையும் தாங்கள்பெற்று
எங்களிலொருவராகி இருந்திடமனம்பூரித்தோம்
உங்களிஷ்டத்தை ஒன்றும்ஒளியாமல்பகருவீரே.

வசனம்.

கேளும் குருவாகிய கிருபாச்சாரியே துரோணுச்சாரியே நீங்கள் பிர்ம்மகுலத்தோராகவும் தவசிரேஷ்ட சிகாமணியாகவும் சகாயமாக யெங்கள் ஒப்பந்தம் ஆரகேயூரகடக கங்கண முதலானதும் ராஜபூஷண வரிசைபூண்டு விருதணிந்து ஆலோசனை கர்த்தனாகவும்இருந்து வரும்படி எண்ணமாக யிருக்கிறோம் உங்கள் எண்ணம்எப்படியிருப்பது சொல்லும் பெரியோர்களே.

துரோணர்-வசனம்.

கேளும் வீஷ்மாச்சாரியே வலியவந்த இலக்ஷ்க்ஷமியை இகழ்ந்துதள்ளுவாரோ அப்படியேநல்லதையா வீஷ்மாச்சாரியே.

வீஷ்மர்-வசனம்

நீங்கள் இந்த பிள்ளைகளுக்கு வில்வித்தையை சாதனப்படுத் ய்வாரும் துரோணாச்சாரியாரே.

துரோணர்-தரு.

ராஜமைந்தரேவாருங்கள் பலஆயுதவித்தை
நாணுவிதத்தைப் பாருங்கள்
பாசமானசிலம்பம் பகருங்கெதாயுதமும்
நேசமானவித்தையை நீங்களறிந்துக்கொள்ள ரா

பிள்ளைகள்-தரு.

அறிந்ததனுவையெடுக்க சிலம்பமோதி
அஸ்திரந்தன்னை விடுக்க
தெரிந்துதெளியவைக்கும் தேசிகநாதரை
பிரிந்துதழைக்கப்பாணம் பெருமையுடன்கற்பிக்க அ

துரோணர்-தரு.

கெந்துப்பாய்ந்துக்குதிக்கவே கெதாயுதமேந்தி
காசினியோர் மதிக்கவே
வந்துவந்துசுழன்று வலமிடமாகவே
சந்துவிடாமல்கட்டி தாடவும்தடுக்கவே கெந்

பிள்ளைகள்-தரு.

தடுத்துப்போராட்டம்செய்யவே பலயாயுதவித்தை
தன்னையறிந்து உய்யவே
எடுத்துச்சொல்லியேகாட்ட எல்லாமறிந்திடவே
அடுத்துப்பாதம்வணங்கி அறிந்தோமேவெகுவித்தை தடு

துரோணர்-விருத்தம்.

விஜையனேசொல்லக்கேளும் விடுத்திடப்பாணம்நான்கு
திசையிலும்பரவிதைக்கும் திறமானவித்தையொன்று
வகையாவுனக்களித்தேன் வளமானயெனக்குனக்கும்
அசைவிலாயெந்தனுசான் அவர்க்குதான்தெரியுமப்பா.

வசனம்.

கேளும் விஜையபாலா ஒருபாணம் விட்டால் நான்குதிசை யிலும் பரவிப்பாயும் அறிதானவித்தையும் உபதேசமும் உனக்க ளித்தேன் இந்த வித்தையானது அக்கினிகோத்திர முனிவருக்

கும் உனக்கும் எனக்கும் தெரியுமேயன்றி மற்றொருவருக்குந் தெரியாதப்பா அர்ச்சுனா.

பொது-வசனம்.

இப்படியாகயிவர்கள் யிருக்கிறபோது துரோணாச்சாரியைக் காணும்படியாய் ஏகலைவனென்னும் வேடுவன் வருவது.

வேடுவன்-விருத்தம்.

வச்சிரமணிகள்மின்ன வரிசிலைக்கரத்தில்யேந்தி
உச்சிதசிலம்பஞ்செய்யும் உகந்திடுங்குருவைநாடி
கச்சையும்வரிந்துகட்டி கடலெலாஞ்சஞ்சரிக்கும்
மெச்சும்யேகலைவனென்னும் வேடுவன்வருகின்றானே.

வேடுவன்-வருகிற-தரு.

ஏகலைவவேடுவன்வந்தான் நல்லநயகுணசுந்திரன்
ஏகலைவவேடுவன் வந்தான் ஏக

ஏகலைவவேடுவனும்யின்பமுடன் துரோணாச்சாரி
நாகரீகபாதங்கண்டு நற்பொருளுணரவேண்டி

நாடியேகுருவினை தேடியேகண்டு
கோடிகோடியாய்மலர் போடுவோமென்று ஏக

தட்டிச்சல்லடமுங்கச்சை தான்வரிந்துசுங்குமிட்டு
பட்டுகுல்லாதானும்பூண்டுபல்லொளிபளபளென்ன

பற்குணன்குருவையும் நற்குணமொடுகாண
இட்சணங்கண்டுமே புஷ்பமுஞ்சூடுவேன் ஏக

கும்பல்பன்றிமான்கரடி கொடும்புலிசிதறிடவே
அம்புவில்லுங்கைபிடித்து அடவியில்வழியைவிட்டு

அரசர்கள்கூடிய சரசவிலோசனே
துருசுடன்கண்டுமே வரிசையான்பெறுவேன் ஏக

மெத்தவேமனமகிழ்ந்து வேடிக்கைவினோதமாக
அஸ்தினாபுரியைக்கண்டு அருமுனிபாதம்வணங்க

ஐயரைப்போற்றியான் மெய்யருவித்தயை
ஒய்யாரநாதனை மெய்யுடன்காணுவேன் ஏக

ஏகலவன்-கவி.

சொற்பொருள்யின்பம்நீதி துலங்கியபுகழுங்கீர்த்தி
நற்பொருளாய்த்தரிந்த நலமுள்ளகுருவேபோற்றி

பற்பலர்காணும்பாதா பகரும்வில்வித்தையெல்லாம்
கற்பிக்கஅடியேன்மீது கடாக்ஷம்வைத்துரைசெய்வீரே.

வசனம்.

வேதத்தின் வித்துவசிரோன்மணியே தேவரீர் இந்த குரு புத்திரர்களுக்கு கற்பிக்கும் வித்தைகளை அடியேனுக்கும் கொஞ்சம் கற்பிக்கவேண்டுமையா சுவாமி.

துரோணர்-தரு.

உத்தமவேடுவனே சற்றுநேரமாவது
ஒழிவெங்கேயிருக்குது ஓதஉனக்குமந்திரம் உத்

வேடுவன்-தரு.

ஆசைகொண்டுமேவந்தேன் மோசம்செய்யவும்வேண்டாம்
அடியிணைக்கேசரணம் குருநாதா சுவாமி ஆசை

துரோணர் தரு,

போற்றிதுதிக்கவேண்டாம் நூத்தைந்துபேருடனே
பிரியம்வைத்துனக்கோத யிடமேதோ போற்

வேடுவன்-தரு.

எந்தவிதமாவது உந்தன்வித்தையைக்கற்று
இன்பங்கொள்ளுவேன்பாரும் குருநாதா எந்த

வேடுவன் வசனம்.

கேளுமையாசுவாமி எவ்விதமாவது உமதுவித்தையை கிரகித்து உம்மிடத்தில் நான்பரீக்ஷிக்கிறேனென்று இருப்பிடம் சென்று கெறடிக்கூடம் வகுத்து துரோணாச்சாரியைப்போலே உருவம்செய்து மேடையின்மீது வைத்து கையில் ஒரு பிரம்பு கொடுத்து எதிர்நின்றுவேடுவன்வித்தையைக்கற்றுக்கொள்வது.

வேடுவன்-கவி.

வெல்லம்அவல்கடலை பொரியெள்ளுருண்டை
விதம்விதமாய்கதலி பலாக்கனியுந்தேங்காய்
நெல்லரிசிதக்ஷிணை தாம்பூலம்வைத்து
நைவேத்தியம் ஐங்கரனூர்பூசைசெய்து
சொல்லரியஐயர்குரு துரோணர்பாதம்
தோத்தரித்துசுற்றிவந்து நமஸ்கரித்து

வில்லுடனே ஆயுதமும் பிடித்தெடுத்து
விநாயகர்க்குக்குட்டிவித்வத துவக்கினானே.

வேடுவன் - தரு.

செல்வவிநாயகா தூபதீபங்கொண்டுகாட்டினேன்
கல்விதருங்குருபாதத்திலேயின்பம் நாட்டினேன்
சிலையைவளைத்துமே நாணேரிட்டுபாணம்பூட்டினேனே
தலமிசைபுகழ்பெற்ற பாணத்தைபூட்டியேமீட்டினேனே
லக்காபிடித்துக்குறி மாறிபோகாமல்கண்டிட்டேனே
மிக்கப்பிரம்பெடுத்து நானேஅடித்துமேகொண்டிட்டேனே
சுத்திசெய்துகுருபத்திமற வாமல்வந்திட்டேனே
கத்திகேடையம்முதல் வித்தையெல்லாம்வரமகிழ்ந்திட்டேனே

வேடுவன் - கவி.

படைத்தவன் விதியினாலும் பத்தியினாலும்துரோணர்
இடத்தினிலிருந்தவித்தை எதுவுண்டோஅதுகளெல்லாம்
கிடைத்ததுலகுவில்வந்து கிராதவன்குலத்தோநல்ல
நடத்தையோடிருக்கப்பார்த்தன் நல்வனம்வருகின்றானே.

வசனம்.

பிர்மதேவன் கற்பனையினாலும் பூர்வ புண்ணியத்தினாலும் இனியில்லாத குருபக்தி விஸ்வாசத்தினாலும் நாளுக்குநாளாக துரோணரிட மிருந்தவித்தை யெல்லாம் கிராதகுலயேகலைவனுக்கு கிடைத்து நன்னடக்கையோடு யிருக்கின்றான். அந்தவனைத் தைநாடி அர்ச்சுனன் வேட்டையாடவருவது.

அர்ச்சுனன் - தரு.

வேட்டையாடநடந்தானே நல்லவிஜையனும்புஜபல
வதிசையவரஞ்ச வேட்டையாடநடந்தாரே
வேட்டையாடவந்துவனம் நீட்டிதனுபாணம்பூட்டி
விண்டலறதிசெய மண்டலந்துதிசெய்ய
வீரமுங்காட்டியே கூரம்பும்மீட்டியே வேட்

அதிர்ந்துப்பன்றிகளோடவே அதலகுதலப்படமதகரிதன்னை
எரிந்துப்பாணத்தால் சாட்வே
சதைத்துமிருகமெல்லாம் வதைத்துக்கொண்டலறவே
தாக்கியேசாடவே நோக்கியேமீறவே
தடுத்ததைசாடவே விடுத்துமேபாணம் வேட்

கதறிமான்பன்றிகூட்டமும் நல்லகதரிடபுதரிட
சிதறியொதுங்கிட கடிகிபோகிறனுட்டமும்
கிருடிதுடர்ந்துபத்தி கிருகிறெனவேசுத்தி
கிழவேசாய்த்திட சூழவேமாய்த்திட
கெடிபெறஅதிர்ந்திட வெடியுமுழங்கிட வேட்

வீறிட்டலறயானைகள் கரம்விட்டிடகொட்டிட
பட்டிடமிருகம் வெகுண்டுப்போகவேமான்களும்
நேரிட்டோடவேசிங்கம் நிலைகெட்டோடவேவானம்
நிற்பபதுதப்பியே அற்புதமாகவே
நீடியகுருதீப மேடையுங்காணவும் வேட்

அர்ச்சுனன்-வசனம்.

இப்படி வேட்டையாடி வருகிறபோது அர்ச்சுனனுடைய வேட்டைநாயானது திகைதப்பி வருகையில் துரோணாச்சாரி மேடையைக்கண்டுஅதின்மீதுஜலம் பரிசஞ்செய்யஅதைவேடன் கண்டு வேட்டைநாயை வேடுவன் பாணத்தினல் தாக்குவது.

வேடுவன்-கந்தார்த்தம்.

குரிகியேசுணங்கன்வந்து குருநாதன்மேடைதனனில்
பெரிகியேநீரைவிட்டு பிழைசெய்யக்கண்டுகோபம்
வருகவேவில்லைவாங்கி வளைத்துநாற்புறமுந்தைத்து
உருகியே நாயுங்கத்தி.

தரு.

ஓடவேபாணம்விட்டேனே கடுங்கோபமதாக
ஓடவேபாணம் விட்டேனே
ஓடவேபாணமும் சாடவும்அதுவழி
கேடவும்மகிபர்கள் நாடவுப்வேண்டி ஓட

வேடுவன்-வசனம்.

இப்படி பாணம்பட்டுநாலு பக்கத்திலும் மறைந்து பாணத்துடனே வந்து விசையனைக்காண அவர் கோபித்துச் சொல்வது.

அர்ச்சுனன்-தரு.

நாயுமிப்படிநொந்துவந்திடக் கண்டனே
நடுங்கவேதேவரும்கோபமாய் சுணங்கங்கொண்டனே

97237

பாயவந்திடும்பாணத்தை வாங்கினேன்
காயமாறவகைசெய்து ஓங்கினேன் நாயு

அண்டரெண்டமும்நடுநடுங்க சரம்பூட்டுவேன்
அடியும்அதனைநான்கண்டு அமோகமாய்மீட்டுவேன்

சண்டாளகவழி நாயுமேகாட்ட
கண்டபோதவனை தன்னுயிர்வாட்டவும் நாயு

யேவியபாணமும்நாலு திசையும்வந்துதாக்கவே
எவர்கள்போதித்தார் என்று அவனுயிர் தாக்கவே

மேவியபாணமும் தாக்குறேன்நொடிக்குள்
ஆவியையழித்துமே கீர்த்திவாங்குவேன் நாயு

அமரர்நடுங்கிய ருக்ஷதகோலாகாலனே
அவனியையாளவும் வந்திடஇவனென்னுபாலனே

நிமையிலறிந்திட வந்திடக்கண்டேன்
யமனுமஞ்சவே கோபமுங்கொண்டேன் நாயு

அர்ச்சுனன்-தரு-வண்ணம்.

ஆரடாயிந்தசுவானத்தின் மீதிலே
அம்புதொடுத் தவன்
கூறடாயிதுசெய்த குற்றமும்
கொல்லவந்தேதிப்போ நல்லதவனையும் ஆர

வேடுவன்-தரு-வண்ணம்.

ஓடியேவந்துஎன்குரு மேடையில்
ஓங்கியேஅதின்மேல் நீரைவிட்டது
வாடியேதங்கள்நாய் என்றறியாமல்
வைத்தம்புமீட்டினேன் புத்திவரும்படி ஓடி

அர்ச்சுனன்-தரு.

வேடதீரனேஉன்குரு ஆரடா
வினவியெந்தனுக் கதையுமுரைத்திடும்
காடெல்லாம்சஞ்சரிக்கும் நீயடா
கற்றுக்கொண்டவுந்தன் வித்தையறிவேண்டா வே

வேடுவன்-தரு.

கோபம்செய்வதும் தர்மமிதல்லவே
சுவாமிகுற்றம் பொறுத்தருளும்

தீபம்போல்வந்தஉங்கள் குருநாதன்
சிந்தையரியவேயெந்தன் குருவாகும் கோ

வேடுவன்-வசனம்.

சரணம் சரணம் ராஜபாலகாதங்கள் குருசுவாமியினிடத்தில் அடியேன் வந்து யெனக்கு வில்வித்தை கற்பியு மென்றேன் எனக்கு வேலையொழியாதென்ருர் நான் அவரைப்போல் உருவம் அமைத்து எதிர்நின்று வணங்கிக் கற்றுக்கொண்டேனையா சுவாமி.

அர்ச்சுனன் வசனம்.

அப்படியானல் நான் போப்வருகிறேனப்பாவேடுவனே,

அர்ச்சுனன்-கவி.

வருமனுநீதிதேர்ந்த ம்ரைகுலதுரோணச்சாரி
தருமசாஸ்த்திறமரிந்தும் தனக்குள்ளகபடமார்க்கம்
ஒருவிதம்கூலிவித்தை உகந்துவேடனுக்களித்த
குருவுமேகுருவோயென்று குணப்பேதமாகினேனே.

வசனம்.

ஐயையோ தெய்வமே எல்லாந்தெரிந்தவர் வேடனுக்குயிவ்விதம்செய்யென்று மந்திரங்கூரி எனக்கு ரகசியமாக கற்யித்த ஒருபாணம்விட நான்குதிசையும் பற்றிப்பாயா நின்ற அரிதான வித்தைகளை யெல்லாம் இந்த வேடனுக்கு கற்பித்திருக்கின்ற குருவும் ஒருகுருவல்லவென்றும் பக்திவிஸ்வாசத்தை நீக்கிவரலாகினேன் தெய்வமேஇப்படி வீடுசேர்ந்து அர்ச்சுனன்குருவைமதிக்காமல் இருக்க குருவானவர் விசனப்படுவது.

துரோணர்-கவி.

பாரியமகுடவேந்தன் பாஞ்சாலராஜன்முன்னே
கூரியபகைமுடிக்கும் கோமனேவிஜையனென்று
தேரியமனங்களித்து தெருவழியாகவந்தேன்
மாரியேஎன்மேலின்பம் வருவதைஅரிகிலேனே.

துரோணர்-தரு.

மன்னன்பாஞ்சாலராஜன் முன்னேசபையரிய ஆதிமூலமே
சொன்னசபுதம்கிரீடி தன்னல்முடியுமென்று ஆதிமூலமே
அதிகசந்தோஷமாய் அரிதானபொருளெல்லாம் ஆதிமூலமே

கதிர்மணிகிரீடிக்கு காண்பித்துவைத்தேனே ஆதிமூலமே
அருமையானயென்னை அடிபணிந்திருந்தானே ஆதிமூலமே
குருபத்திதனைவிட குரையென்னசெய்தேனே ஆதிமூலமே
இப்படிஒருக்காலும் யிருந்தவனல்லவே ஆதிமூலமே
தப்பிதம்வரச்செய்யத் தனஞ்செயனல்லவே ஆதிமூலமே

துரோணர்-வசனம்.

இவ்விதமாகவருத்த மடைந்து அர்ச்சுனனை தனியாக நிறுத்திதுரோணாச்சாரி சொல்வது.

துரோணர்-தரு-தர்க்கம்.

அப்பாவிஜையபூபனே நான்என்னகுரைசெய்தேனே
செப்புவாய் சூரதீரனே
இப்படிமதியாமல் இருந்துவந்ததில்லையே
இன்பமில்லாமலே தென்புகுலேந்துநீர்
இருந்தகுருபத்தியை மறந்திடலாமோ அப்பா

அர்ச்சுனன்-தரு.

அரியகுலத்தைநத்தியே தனக்குவேடுவன் தனக்கு
கற்பிக்கலாமோ வித்தையை
சற்பனையரிந்துநான் தயக்கமிதுவேகொண்டு
சாரியாஉமக்குமே மீறியேநடக்கவும்
தள்ளினேன்யின்பமும் உள்ளமும்வாடி அரி

துரோணர்-தரு.

ஐயையோயெந்தன்பாவமோ நான்அப்படிசெய்தேனென்று
அதினாலேவந்த கோபமா
செய்யாதகாரியத்தை செய்தேனென்றுமக்கு
செப்பியதுரோகியை இப்பவேகாண்பியும்
சீவனைவாங்குவேன் யாவருங்காணவே ஐய

அர்ச்சுனன்-தரு.

வேட்டைநாயதுபோகவே உந்தன்மேடயில்நீரைவிட
வாட்டமாகியே நோகவே
பூட்டியபாணத்தைவேடன் பொங்கிவிடவேதைத்து
பொன்னிறசுணங்கனும் என்னிடம்வந்திட
போகவிட்டுமேவேடன் சாகசமரிந்தேன் வேட்

துரோணர்-கவி.

அரிந்ததும்வினவவுண்மை அதற்கேற்றதந்திரங்கள்
தெரிந்ததுஉனக்குநன்ருய் தெரிந்திடவேணுமிப்போ
எரிந்திடபாணம்வில்லும் யேந்தியேதுரோணச்சாரி
பரிந்துமேவேடன்பக்கல் பயணப்பட்டேகுவோமே.

வசனம்.

கேளும் அர்ச்சுன உனக்குச்சொல்லியது உண்மையானல் நான்அவனுக்கு தந்திரமிட்டு கற்பனைசெய்த எத்தெல்லாம் தெரிந்ததும் தெரியும்படி ஆயுதபாணியாகி அவனிடம் ஜனுதியாகப் போவோம் வாரும் அர்ச்சுன.

துரோணர்–தரு-இருவரும்.

சட்டமணிமாலைமின்ன சந்திரஆரமபளபளென்ன
சுட்டமுகன்வில்விஜையன் கடிகியேநடந்தான்
விற்குருவும்தானடக்க வேடுவன்வனத்தைநாடி
தற்கமானசேதிகாண தனஞ்செயன்நடந்தான்
நாடுனகர்தன்னைவிட்டு நல்லதனுதண்டமேந்தி
வேடுவன்வனம்புகுந்துமே வேகமாய்நடந்தார்
வேகமாய்நடைநடந்து விற்குருமேடையுமுள்ள
ஏகலைவன் தன்னைக்கண்டு இருவரும்நடந்தார்

வேடுவன் கந்தார்த்தம்'

மின்னியமேகங்கண்டு விளையாடும்மயிலைப்போலும்
என்னிருதயங்களிக்க இதுகாலந்தபமீடேற
பன்னியமழுமானேந்தும் பராபரப்பொருளாய்வந்த
பொன்னிறபாதத்திற்கு.

தரு.

பூசைகள்புரிவேனே ஜலம்மருவுகள்கொண்டு-பூசை
பூசனைபுரிவேனே புனல்கொண்டடிதுலக்கி
வாசமலர்கள்சூடி வலம்வந்துதெண்டனிட்டு

வேடுவன் வசனம்.

சரணம் சரணம் தங்களிருவருக்கும் தீர்க்கவந்தனம்சுவாமி களே

துரோணர்-கவி.

வந்தடிபணிந்தவேடா வாழிநீநோன்பிருந்த
அந்திடம்வந்திருந்து ஆசையாயெனக்குவித்தை
தந்திடுமென்றுசொன்ன ததுமுதலுனக்குவித்தை
வந்ததுயின்னதென்று வகுத்துரைசெய்குவாயே.

வசனம்.

கேளும் ஏகலைவனே முன்னால்நீ நம்மைக்கண்டு வித்தை போதியு மென்று கேட்டநாள் முதலாக உனக்கு இந்தவித்தை வந்த விதத்தை ஒன்றும் ஒளியாமல் சொல்லுமப்பாவேடுவனே.

வேடன் வசனம்.

கேளுமையா குருநாதா தாங்கள்எனக்கு வில்வித்தை கற்பிக்க இவ்விடத்தில் ஒழிவில்லையென்று கண்டித்து அனுப்பஞன் வந்து இந்த கெறடிக்கூடம் வகுத்து உம்மை குருவாகவே மண்ணிஞல்அமைத்து வைத்து உன்திருபக்திபுரிந்து கற்பனைசெய்துக்கொண்டேன் இதோஉம்சமுடைய பாதசாக்ஷியாக உண்மையாகுமையா குருநாதரே.

துரோணர்-வசனம்.

அப்படியே நல்லது உன்வித்தையை பரிக்ஷைசெய்யவேண்டும் இந்தஅர்ச்சுனனுடனே விளையாடாமல் யுத்தியம் செய்பார்க்கலாம் வேடுவனே.

வேடுவன்-தரு.

ராஜவிஜையபூபனே தனுவெடுத்து சறந்தொடுத்து
இதோவிடுக்குறேன்பாரிதோ முடுக்குரேன்மந்திரம் ராஜ
தேசமதிக்கும்செயவிசைய வந்தனம்செய்தேன்

தீறனேவுன்னிரு பாதமேதொழுது
மீரியபாணமும விட்டிடுவேனே ராஜ

அர்ச்சுனன்-தரு.

வேடதீறனேநில்லடா சிலைவளைத்துமனங்களித்து
விடுகிறேன்பாணங்கள் அடுக்கடுக்காகவே வேட
தேடரிதானவித்தை தெரிந்ததெல்லாமெனக்கு

செவ்வையாய்க்காணவும் ஒவ்வியேமனதுடன்
சிவ்வெனபாணமுங் கவ்விடச்செய்குவேன் வே

வேடுவன்-தரு.

சங்கோபசங்கமாகவே எங்கும்நடுங்கமனமொடுங்க
இதோநிறையவேபாணம் வருகுதுபாரும் சங்

சிங்காரமானகுரு தேசிகன்களிக்கவே
தேறியேவரவிடும் வீரியசரமழை
மாரியதாகவே மீறியனேகமாய் சங்

அர்ச்சுனன்-தரு.

வருகும்சரத்தைமாற்றிட சரமீட்டதிறங்காட்ட
நீயும்பயந்திடஎனக்குமே ஜெயந்தரவேண்டி வரு

காரார்காலத்துமழைபோல் தாரையெனவேயாதினம்
கடிகியேநானிந்த அடியினில்யேகிவில்
கெடிபெருங்குருவுமே துடியிவனென்ன வருகு

வேடுவன்-விருத்தம்.

வரும்மதிநீதிதேர்ந்த மதிகுலத்தரசேகேளாய்
கெருவியாமிவனும்அற்ப கிராதவக்குலத்தில்வந்தோன்
குருவிலாதவனேயென்று கொஞ்சமாய்நினைக்கவேண்டாம்
ஒருசரம்எடுத்தால்நூறு உறுதியாய்வருகும்பாராய்.

வசனம்:

நீதிமார்க்கமறிந்த மதிகுலத்துராஜனே இவன் அற்பகுலத்தில்வந்த கர்வியென்றும்இவனோ குருவில்லாதவித்தையயுடையவனென்று என்னைக் கொஞ்சமாய் நினைக்கவேண்டாம் தாங்கள் ஒருபாணம் எடுத்தால் பதில் நூறுபாணம் எடுக்கவருமென்றும் அறிந்துநடவும் மகாராஜனே.

அர்ச்சுனன்-தரு.

வாடாவேடனேதிராணிபலத்தால் யெதிர்நில்லடா
மட்டில்லாதவலிமைபேசுவ தென்னசொல்லடா
ஈடோயெனக்குநீ விள்ளடா
இப்படிநீமதங் கொள்ளாதே
எங்கும்நிறையசரம் பொங்கிவருகுதிதோ

வேடன்-தரு.

பாராயென்னிடசவுரிய தனுசுபலம்காட்டவே
பரமனும்மெச்சவே அளவில்லாதசரமீட்டவே

தீராவுன்மனம் துடிக்காதே
தேடிவந்துபுகழ் படிக்காதே
திடத்துடன்சரங்களை தடுத்தேனேபாராய் பா

அர்ச்சுனன்-தரு.

ஏதடாவுன்னிடசவுரிய திறங்கண்டேனே
ஈடில்லாதசரம் மீட்டினேன்பாரடா துண்டனே
வாதுகள்செய்யவும் முடியாதே
வந்துஎதிர்த்துமே மடியாதே
மட்டில்லாதசரம் விட்டேன் அமோகமாய் ஏத

வேடன்-தரு.

ஓயாச்சரங்களைமீட்டினேன் கண்டுக்கொள்ளவே
ஓதியவித்தையும்என்னிட வித்தையுங்விள்ளவே
மாயாசரங்களைத தொடுத்தேனே
மண்டலங்நிறையவே விடுத்தேனே
வல்லமையறிந்துமே சொல்லவும்போமோ ஓயா

துரோணர்-விருத்தம்.

அண்டர்நாயகனுமெச்ச அமர்செய்யுந்திறமையெல்லாம்
கண்டுநான் வுனக்குயேக வில்லியனென்றநாமம்
கொண்டுநீர்சுகிப்பாயின்னம்குற்றமற்றவனே நாங்கள்
அண்டியதேசப்போக அனுப்புவாய் அனுப்புவாயே.

வசனம்,

தேவநாயகன் மெச்சுப்படி நீங்களிருவரும் செய்தவில்சாமார்த்தியங்களைக்கண்டு மனமகிழ்ந்தேன் அப்பா வேடவனே இனிஉனக்கு ஏகலைவனென்று சொல்வதை மாற்றிஏகவில்லியனென்றும் நாமதேயம்தந்தேன் எங்களுக்கு விடைதந்தனுப்பும் வேடவனே:

வேடன்-தரு.

தூய்யகுருவேஇந்தக் காட்டில்வந்து
சும்மாபோகலாகுமோ வீட்டை
வீட்டுக்குப்போகலாகுமோ விரும்பிகுருதக்ஷணை
காட்டுக்குள்தருவதைக் கைக்கொள்ளும்பெரிதாக தூய்

துரோணர்-தரு.

ஏகவில்லிபா இங்கேவடா என்னுதருவாயிங்கேநீபோடா
போடாவேடுவர்கையில் பொருளென்னுமிருக்குமோ
வாடாமனதுடனேவந்தென்னு தரப்போராய் ஏக

வேடன்-தரு.

ஏதைக்கேட்டபோதிலும்தாரேன்!இன்பவுறுதிதன்னைப்பாரேன்
பாரும்குருநாதாபக்ஷம் வைத்தடியன்மேல்
கூறியமுறைப்படிகூசாமல் தருகிறேன் ஏதை

துரோணர்-தரு.

வலக்கைப்பெருவிரலைத் தந்தால் நம்மைவாடி நீமனமிகநொந்தாய்
நொந்திடும்என்மனம்நோகும் நோகும்அப்பா
வந்திடமனதுண்டோ தடையில்லாமல்போக வல

வேடுவன்-சுந்தார்த்தம்.

இஷ்டமாவிரலைக்கேட்ட வென்குருநாதாபோற்றி
சட்டமாய்தருவதற்கு சற்றுநானஞ்சுவேனே
வெட்டினேன்விரலைத்துண்டாய்மிகமனங்களிப்படைந்தேன்
தட்டினில் வெடுத்துவைத்து.

தரு.

தந்திடவந்தேன்யிதோ வகுரு தக்ஷிணைபாக தந்
தந்தேதனேமறைகுல வேந்தனேசுபகரா
சுந்திரதிருவடி வந்தனமடியவன் தந்தி

துரோணர்-சுந்தார்த்தம்.

என்னுலும்தேவராலும் இயம்புதற்கரியமேன்மை
முன்னுலேவுதங்கனென்று மொழியவுமறிந்திருப்பேன்
இன்னுளில்வுன்னைக்கண்டேன் ஏகவில்லிபனேவாழி.
தன்னுலே மனங்களித்தேன்.

தரு.

சம்ப்ரமுடனேயேகுவோம் நிலைபெற்றிடுமன்பனே
சம்ப்ரமாகயேகுவோம் யின்பமதாகவே
உம்பரும்மெச்சியே அன்பனைவிட்டு சம்ப்

பொது-வசனம்.

இப்படியாக இருவரும் காடுவிட்டு வீடுசேர்ந்து முன்போலவே கெரடிக்கூடத்தில் வித்தையோதிவருங்காலத்தில் துரியோதிஞதிகள் வீஷ்மருடன் சொல்வது.

துரியன்-தரு.

நீதிக்கதிபதியேநாங்கள் நேசமுள்ளமனம்கூசிவந்தோம்
போதிக்குமெங்களையர் புத்திவேருகியேபத்தியுடன்
பாண்டவர்க்குவித்தைநன்ருய் பாலிக்குரூர்வித்தைஆலிங்கணம்
வேண்டாவெறுப்புடனே சோரவிட்டாரெங்களைதான்
இஷ்டந்தனையகற்றிவீணய் ஏசுகுரூர்மெத்தபேசுகுரூர்
பக்ஷம்ஐவர்மீதுவைத்து பாசமுடனின்பம்பேசிடவும்
கண்டோமவர்கருத்தை காதகமுமனப்பேதகமும்
உண்டானவாத்தியிடம்போக உள்ளமில்லைமொழிதள்ளு-நீதி

வீஷ்மர்-விருத்தம்.

சொல்லரிதானமைந்தா சுருதிகளெல்லாந்தேர்ந்த
நல்லறிவுடைஅய்யர் நடத்தியேயொன்றிடிக்கி
புல்லறிவானனல்ல புரிந்துமேவித்தையோத
வில்லறிதானவற்கு விளம்புவேன்யேகுவீரே.

வசனம்.

வாருங்கள் பிள்ளைகளே வேதமுதலான பலதத்துவங்களை அறிந்த ஆசாரியர் ஒன்றை இடிக்கி ஒன்றை நடத்திவருவாரா வில்லாசாரியரானவர்க்கு பேதாபேதகம் நேரிடாமல் கல்வியோதிடும்படி திட்டஞ்செய்வேன் சிலம்பக்கூடத்திற்கு நடவுங்கள் நானும்வருகிறேன் துரோணாச்சாரியாரைக் காணவேணும் போய்வருவோம் வாருங்கள் சிறுவர்களே.

வீஷ்மர்-தரு.

மறைகுலசீலா மகிழ்ந்திடும்லோலா
மலரடிக்கேசரணம் குருநாதா
வந்துமேதுரியவர் உந்தன்மீதுவெகு
நிந்தைகள்கூறவும் வந்தேனன் அய்யா மறை

துரோணர்-தரு.

சந்தணன்சுதஞ தாழ்வில்லாவதஞ
தழைத்தோங்குவாய் குணசீலா

தப்பிதம்செய்வதை யிப்படியென்றுமே
ஒப்பவும்வுன்மனம் செப்புவதேதனே சந்த

வீஷ்மர்-தரு.

பஞ்சவர்மீதுபரிவு கொண்டதும்யேது
பாரபக்ஷமாயோதி வரலாமோவித்தை
பார்த்துமேஅதனையும் நூற்றுவர்வாடியே
மாற்றியயின்பமும் சாற்றவுங்கண்டேன் (பஞ்)

துரோணர்-தரு

மதிகுலமிருக்க வரும்வித்தைப்பெருக்க
வஞ்சகம்செய்யமனந் துணிவேனோ
வம்பருக்கல்லவோ ரொம்பவும்சொல்வது
அம்புவிவணங்கிய சம்பரமலோலா (மதி)

துரோணர்—வசனம்

கேளும் மகாராசனே இன்றுதானுஅவாள்புத்தியை சோதிக்குறேன் அதை அறிந்துப்பாரும் மகாருசனே.

துரோணர்-வசனம்.

வாரும் புத்திரர்களே தடாகத்திற்குச் சென்று ஸ்நானம் செய்யவேண்டும் அப்பாவிஜைய பூபா நமது கிரகத்து மாடத்தில்எண்ணையும் அறைப்பும் வட்டியில் யிருக்கின்றது நீ அதை எடுத்துவரும்போது பூமியில் வைக்காமல் நம்மிடம் கொண்டு வந்து தாரும் போய்வாரும் அர்ச்சுனு.

வசனம்.

இப்படி விஜையனை அனுப்பிவிட்டு அப்பாதுரியனே இந்த ஆலவிருக்ஷத்தைப்பாரும் இதனடியில் சக்கறம்போட்டு பீஜாக்ஷரத்தை ஸ்த்தாபித்தேன் அந்தமந்திரமும் உனக்குப்போதித்தேன்இந்த சக்கறத்தின்மேல் நின்று அந்த மந்திறத்தை தியானித்து மந்திரபாணம் எடுத்து இந்த ஆலிலையில் தாக்குமப்பா துரியோதனு.

துரியன் கந்தார்த்தம்.

சக்கறந்தன்னில் நின்று தனுவாங்கி பாணம் பூட்டி
தக்கவே உபதேசித்த தனியான மந்திறத்தை
மிக்கவே உச்சரித்து விருக்ஷத்தின் இலையைப்பற்றி
பக்குவமுடனே மீட்டி.

தரு.

பதியிதுபாறுய்இலக்குஇல புதையிதநேறு
பதியும்ரத்தினமாகபார்க்கும் இலேகளெல்லாம்
அதிகமகிக்ஷியாய்அனேவரும் பாற்கவே

துரோணர் வசனம்.

வாருங்கள் பிள்ளைகளே துரியோதினன் விட்ட ஒருபாண மான துபட்டுஇலக்கு ஒரு தவாரமாகக்கண்டீரே அப்பால்நட வுங்கள் சிறுவர்களே

அர்ச்சுனன்-கந்தார்த்தம்

வந்தனுன் அறைப்புப்யென்னே வட்டிலேக்கையிலேந்தி
இந்த ஆலடியில்வந்து இருக்குஞ் சக்கரமுங்கண்டு
அந்தஅக்ஷக்ஷரத்தைதசேர்த்து அதிசயந்தனேயறிந்து
விந்தைசின்னத்தைவீசி.

தரு

வில்வளேத்துபாணமீட்டினேன் இலக்கொருரந்தரம்
சொல்லுமுன்போலாக நாட்டினேன்
வில்வளேத்துபாணமீட்ட விசியகிண்ணம்வரவே
நல்லமனதாகப்பறறி நடந்தேன்தடாகம்நாடி. வில்

அர்ச்சுனன்-வகனம்.

இப்படி அர்ச்சுனன் தன்புத்தியினுல் சக்கரத்தில்இருக்கும் அக்ஷரத்தை சேர்த்து கிண்ணத்தை ஆகாயத்தில் வீசி அது வருமுன்னே சக்கரத்தில் நின்று ஒருபாணம்விட்டு முன்போல வே இலக்கு ஒருதுவாரம்செய்து நெருங்கிவருங் கிண்ணத்தை தான்பிடித்துக்கொண்டு வந்து குருவிடம்சேர்ப்பிக்ககுருநாதன் ஸ்நானம் செய்வதுகாண்க.

துரோணர்-வசனம்.

அப்பாதுரியோதன எண்ணே யிடத்தெரியுமா எனக்குத் தெரியாதையா அப்பா அர்ச்சுன உன்னுல் முடியுமா ஆகும் உட்காருமையா குருநாதா.

அர்ச்சுனன்-தரு.

எண்ணேவைக்குரார்பாரீர் விற்குருவுக்குமே
பற்குணபாலன் எண்ணேவைக்குரார்பாரீர்

எண்ணை வைக்குறார்பாரும் விண்ணோரதிசெயிக்க
வண்ணம்பெறவேகண்ணும் நின்னுதள தளவென்று எண்ணை

தத்திதத்தியேழையை சுத்திதலையில்மொத்தி
பத்தியாகவேகுத்தி பளபளவெனமளமளமளவென்
தோளும்முதுகுந்தட்டி சொல்லும்யெண்ணையைக்கொட்டி எண

தாளம்சத்தமும்மீறி தடதடவெனபடபடவென
சிதரிஎண்ணெதரிக்க சித்தமிகக்களிக்க
அதிரசத்தங்கள்மீறி அவடவாகவேபடபடப்பாகவே ஏன்

துரோணர்-விருத்தம்.

எண்ணையுமிட்டுக்கொண்டேன் யெடுக்கவே அறைப்புத்தீத்தி
கண்ணையுமூடிக்கொண்டு காலினல்தடவிக்கொண்டு
தண்ணீரில்யிறங்கிமெள்ள ஸ்நானமும்செய்யவென்றால்
பண்ணுவேன்முதலையென்கால் பத்தினதறிந்திட்டேனே

துரோணர்-தரு.

அதலகுதலப்பட்டு பிள்ளைகளா
முதலைமடுவுக்குள்ளே பிள்ளைகளா
இழுக்கட்டுமென்றிருக்க பிள்ளைகளா
என்னபிழைசெய்தேனோ பிள்ளைகளா
மோசங்கள்வந்ததடா பிள்ளைகளா
முழுக்கிட்டுநான்தவிக்க பிள்ளைகளா
முதலைமடுவுக்குள்ளே பிள்ளைகளா
இழுக்கட்டுமென்தவிக்க பிள்ளைகளா
என்னபிழைசெய்தேனோ பிள்ளைகளா
நூற்றைந்துபேரிருக்க பிள்ளைகளா
நொந்துநான்தவிக்க பிள்ளைகளா
பார்த்திங்கிருக்கலாமோ பிள்ளைகளா
பாவிமடியுறேண்டா பிள்ளைகளா
ஓடிஓடிவாங்களடா பிள்ளைகளா
ஓசையிட்டேஅழைக்க பிள்ளைகளா
நாடாமலிருந்தசத்தம் பிள்ளைகளா
காட்டமேதோஅறியேன் பிள்ளைகளா
நானென்னசெய்வேனடா பிள்ளைகளா

துரியன்-கந்தார்த்தம்.

அடாஅப்பாதம்பிமாரே ஐயரைமுதலைப்பற்றி
விடாமலேயிழுக்குதென்று வெகுநேரமாக்கூவி
படாதபாடாகிமெத்த பரதவித்திடவுங்கண்டேன்
கெடாமலேகார்க்கவந்து.

தரு.

கல்லுங்கட்டியும்எடுங்கள் முதலைமீது
நில்லாமல்ஓங்கி விடுங்கள்
எல்லோருங்கூடினல் எப்படியும்ஐயர்பிழைப்பார்
சல்லாபமாகவந்து சாகத்துணியவாமோ கல்

அர்ச்சுனன்-தரு.

கூடியேநீங்களும் கூவியசத்தமுங்கண்டனே
வாடியேனுனுமே மனதுதியக்கமுங்கொண்டேனே
ஓடியேநீங்களும் கல்லைஎடுக்கவும்
வாடியஅய்யரை முதலையிழுக்கவும் கூடி

கவ்வியமுதலையைக் கல்லால்விலக்குவதாரடா
செவ்வையதாகவே அப்பால்நின்றுபாரடா
விருவிருவென்றுமே பாணமெடுப்பேன்
சகலருங்காணவே சரமதுவிடுப்பேன் கூடிய

விற்குருநாதனே அஞ்சவும் வேண்டாம்தேறுவீர்
பற்குணன்நான்வந்தேன் தங்களுக்கின்பம்சாறவே
நற்கணைபூட்டினேன் எங்குமதிக்கவும்
சொற்கமும்சேரவே முதலைஇறக்கவும் கூடிய

ஆறுமலேகுருகாலுங்தெரியுது வாருங்கோள்
காறுவையடாறுக்கிழித்தெரிந்தநான் பாருங்கள்
சராசரங்களும் நடுங்கிவாடவும்
தாராதரங்களும் தேய்ந்துசாடவும் கூடிய

துரோணர்-விருத்தம்.

முந்தியகஜேந்திறன்முன் ஆதிமூலமென்றழைக்கமாயன்
வந்துமேஆதரித்த வகைபோலும்விஜையாநீயும்
பிந்தியகருவைக்கீறி பிழைக்கவேஎனைரக்ஷித்த
உந்தனைதெய்வமாக உள்ளம்வைத்தேகுவோமே.

வசனம்.

கேளுமப்பா அர்ச்சுன ஆதிமூலமென்று கூப்பிட்டதக்ஷ ணம் வந்துகராவைப் பிளந்து கஜேந்திரனென்னும் ஆனையை இரக்ஷித்த ஸ்ரீமன் நாராயண மூர்த்தியைப்போல் இன்னாளில் எனது காலைப்பற்றிய முதலையைசங்கரித்து எனக்கு உயிர்தந்த உன்னை அந்தபகவானென்று உள்ளத்தில்வைத்தேன் இனிவீட் டுக்குப் போகலாம் வாருமப்பா அர்ச்சுன.

துரோணர்-தரு.

வருசநதியைவிட்டு உருகஆலிலையெல்லாம்
மருகணைவிட்டி ருக்குதேயிதென்னமாயம்
மருகணைவிட் டிருக்குதே வரு

அர்ச்சுனன்-தரு.

முந்திக்கணைதொடுத்த விந்தைசக்கரங்கண்டு
வந்துக்கணைதொடுத்தேனே ஆலிலைமீது
வந்துக்கணை தொடுத்தேனே முந்

துரோணர்-தரு.

தொடுத்தபோதுதாழ எடுத்தகிண்ணத்தைவைத்து
நடத்தினதறியேனே குருவார்த்தயைத்தள்ளி
நடத்தினதறி யேனே தொ

அர்ச்சுனன்-தரு.

விண்டலம்எழும்பிட வீசிக்கிண்ணத்தைவிட்டு
கொண்டனேயிதே பாணம் வருங்கிண்ணமும்பத்தி
கொண்டனே இதோபாணம் விண்

துரோணர் வசனம்.

கேளும்துரியோதன நான் உனக்கு இந்த வித்தையைக்காண்பித் தேன் அர்ச்சுனன் தன்னுத்தியினால் சக்கரத்து அக்ஷரத்தைக் கண்டு யெண்ணைக்கிண்ணத்தையும் யென்சொற்படி தாழவையா மல் வரும்போது பாணமீட்டினே னென்றும் இபபவும் அந்த விதமாக காண்பித்தான் அப்பா துரியோதன உனக்கு காண்பித் த வித்தையை முன்போலும் காண்பியுந்துரியோதன.

துரோணர்-வசனம்.

என்னடாபேசாமல் ஆலமரத்தோடு நீ ஒருமரமாக நிற்பதென்னடா

துரியன்-வசனம்.

மறந்துபோய்விட்டேன் சுவாமி.உன்னிடத்தில் இவ்வளவு கவனமிருக்கிறபோது என்னிடத்தில் மனவஞ்சக மிருக்கிறதென்று பெரியவரிடத்தில் யெப்படி சொல்லலாம் நல்லது வாருங்கள் இப்படி வீடுசேர்ந்து வீஷ்மாச்சாரியாரைக் கண்டு துரோணர் சொல்லுவது.

வசனம்.

கேளும் மகாராஜனே தடாகத்துக்குப் போகிறவழியில் துரியோதினனுக்கு பீஜாக்ஷர மந்திரம் போதித்தேன் சக்கரமிட்டு அக்ஷரம்போட்டுகாண்பித்தேன் அதின்மேல்நின்று ஒருபாணம் விடும்படிசெய்தேன் ஆலிலையெல்லாம் ஒரு துவாரமாக்கி விட்டது அதைக்கடந்து தடாகம் போனோம் பின்னாலே எண்ணை கிண்ணம்அறைப்பு எடுத்துவந்த அர்ச்சுனன் ஆலிலை துவாறமாக்கி யிருப்பதையும் பிள்ளைகள் காலடியும் பார்த்து சக்கரத்தையுங் கண்டு சொற்படி கிண்ணத்தை தாழவையாமல் உயரவீசி சக்கர மந்திரத்தைக்கண்டு அதில் நின்றுபாணமிட்டு முன்னே இலைக்கொரு துவாரமிட்டு நெருங்கிய கிண்ணத்தையும் பத்திக்கொண்டுவந்து எனக்கு எண்ணைஸ்நானம் செய்து வைக்கும்போது அந்தநதியிலிருந்தமுதலை என்காலைப்பற்றியிழுக்க நான் கூச்சலிட்டது துரியவாள் கண்டு தலைக்கொருகல்லுங் கட்டியும் எடுத்து என்னை அடிக்க அர்ச்சுனன் கண்டு ஓடிவந்து ஒரு பாணத்தினாலே முதலையை சங்கரித்துவிட ஆலிலையைப்பார்த்துஇதைஆரிப்படி மருகணை எய்தவனென்று கேழ்க்க அர்ச்சுனன் நான்விட்டதென்று மறுபடியும் முன்விட்டபாவனையை காண்பித்தான் துரியனை உனக்கு கற்பித்ததை காண்பியும் என்றேன் எனக்கு மறந்து போய்விட்டதென்றான் என் சோதனையிப்படி யிருக்கிறது தாங்கள் பிள்ளைகள் புத்தியை அறிந்துப்பார்த்தால் தெரிந்துக் கொள்ளலாம் மகாராஜசனே.

திருதராட்டிரன் விருத்தம்.

பிள்ளைகள்வருந்திச்சொல்லும் பெரும்பிழையுடையவாத்தி
கள்ளமில்லாமல்வந்து கருதியப்படியே நாமும்

உள்ளத்தில் ஒன்றுகண்டு உரைசெய்யும் சிறுவர் கூர்மை
தெள்ளவே காண்போம் நாமும் மிக மனங்களிக்கத்தானே.

வசனம்.

கேளும்தந்தையானவீஷ்மரேபிள்ளைகள்சொல்லுவதையாறு
லே பிழைசெய்யும் வார்த்தையாக காண்கிறது வாத்தியார்சொ
ல்லுவதைபார்த்தால் பிள்ளைகள்மேல் குற்றம்யிருப்பதுபஞ்ச
வர்கள்புத்தியும் துரியவாள்புத்தியும் கண்டரியும்படி என்னதந்
திறம் செய்யலாம் தந்தையே.

வீஷ்மர்-வசனம்.

கேளுங்குமாரகா பஞ்சவர்கையில் நான்குபணமும் துரிய
வாள்கையில் நான்குபணமுந்தந்து தனியேவிட்டு இந்தநான்கு
பணத்திற்குவீடு நிறைந்தபண்டம் வாங்கிவையுமென்றால் எதை
வாங்கிவைப்பார்களோ அதினாலே பிள்ளைகள் விவேகத்தைக்
கண்டரியலாம் குமாரகா.

திருதராட்டிரன்-வசனம்.

இதுவே நல்லயோசனை அப்படியே பிள்ளைகளை திட்டஞ்
செய்யுந் தந்தயே.

வீஷ்மர்-வசனம்.

ஆரடா காவலாளிகளே பிள்ளைகளை அழைத்துவாருங்கள்
காவலரே வந்தார்களையா சுவாமி அப்பா பஞ்சவர்களே இந்த
நான்கு பணத்தை கொண்டு வடவண்டவீதியில்குடி யில்லாவீ
டிருப்பது அந்தவீடுநிறைந்த பண்டங்கள் வாங்கி வையுங்கள்
பொழுது சென்றவுடன் பார்க்க வருவோம் போய்வாருங்கள்.
துரியவாள் வந்தார்களா வந்திருக்கிறோம் தாத்தாவே அப்பா
யென் குமாரர்களே இந்தநான்கு பணத்தைக்கொண்டு தென்
னண்டைவீதியில் பின்னமில்லாத வீடுசேர்ந்து வீடுநிரைந்தபண்
டம் வாங்கிவையுங்கள் சூரியன் அஸ்தமானவுடன் பார்க்கவரு
வோம் போய் வாருங்கள்.

தருமர்-தரு.

மதகரிவிமாமகிழ்ந்திடுங்காமா மலிந்தபண்டங்கள்
என்னஅரி வாயோ

வல்லவாபாரிய இல்லறம்நிறயவே
நல்லறிவாளனே சொல்லியேவாங்க (மத)

வீமன்-தரு.

ராஜகெம்பீரயோசித்துப் பாரய்
நான்குபணத்தைக்கொண்டு பொருள்வாங்க

நாடியஉலகெலாம் ஓடியேதேடவே
வீடுநிரைந்திட தேடுவதரிது (ரச)

தருமர்-தரு.

கண்டுமேவாங்க கருத்தில்லேதேங்க
கையிலாகமல்விட்டு விடலாமோ

காரியமரிந்துமே கூடுவாய்பண்டமும்
தேரியகொள்ளவும் நேரிதுவென்று (கண்)

வீமன்-தரு.

எதைவாங்கினும் இசைந்தொருகாலம்
இல்லறமுழுதுமே நிரையாது அண்ண

யேத்திடுந்தீபமும் மாத்தியேவிடலாம்
தோத்தியபண்டமுய் சாத்தவுமுண்டு (எ)

தருமர்-விருத்தம்.

தம்பினன்நினைத்தேனந்த சங்கதியுரைத்தாய்நீயும்
இன்பர்ஓர்பணத்தைக்கொண்டு இரைவற்கும்சமையல்செய்யும்
தென்பாய்தாம்பூலம்புஷ்பம் செவ்வையாசனத்தைதேடும்
சம்ப்ரமதீபவேலே சகாதேவாஉன்னுதாமே.

வசனம்.

வாருந்தம்பி வீமசேனா நான்நினைத்தப்படி நீ அரிந்துசொன்னய் மகாசந்தோஷமாகினேன் இந்தஒருபணம் இதைக்கொண்டு இருவருக்கும் சமையல்செய்து வையும் அர்ச்சுனாஇந்தஒருபணத்திற்கு புஷ்பம் தாம்பூலம் சந்தணம் களப கஸ்த்தூரி அத்தர் புனுகுசவ்வாது வெட்டிவேர் வாங்கிவையும் நகுலா இந்த ஒருபணத்திற்கு பாய்திண்டு தலேக்காணி மெத்தைவாங்கிவையும் சகாதேவாயிந்த ஒருபணத்துக்கும் யெண்ணே அகல் குலோப்பு ரந்தல்சிமிளி வீடு நான்குபக்கமும் விளக்கேற்றிவையுங்கள் தம்பிமார்களே.

சூரியன்-தரு.

என்னுபண்டங்கண்டுவாங்கலாம் வீடுநிரைய-என்னு
என்னுபண்டம்வாங்கினாலும் இந்தநாலுபணத்தாலே

எப்படிவீடிது சொற்பமும் அல்லவே
கொப்பெனநிறையவும் செப்பினதரியேன் (என்)

தேங்காய்மாங்காய்கதலி செங்கீரைவெங்காயத்தாளும்
பாங்கானபண்டமெல்லாம் பாதிக்கிபாதிரொம்பாது

பத்தியாய்பார்க்கவும் புத்திவேறுகுது
சித்தம்வேறுகுதே உத்ததையரிய (என்)

இன்பமானபண்டமெல்லாம் எண்ணிப்பார்க்கும்போது
தம்பிமாரேயிந்தவீடு றம்பும்வகையரியோம்

தரைதனில்மலிவது வறகுவைக்கல்விட
குரையறவாங்கினல் நிரையும்பேருண்டோ (என்)

திட்டப்படிபணத்துக்கு எட்டுகெட்டானுலும்வக்கல்
கட்டுகட்டாய்க்கொண்டுவந்து கட்டமெல்லாம்போட்டடையும்

கண்டியிதையரிந்து கொண்டதும்விண்டதும்
அண்டருக்கரிதிது கொண்டுரைசெய்யவும் (என்)

வசனம்.

கேளும் தம்பிமார்களே நமதுபுத்தியும் யுத்தியும் யோசனை யும் சீக்கிறம்நமக்குப் புரிந்ததுபோல ஆருக்கும்தெரியப் போகுது அந்தபாண்டவர்களுக்கும் தெரியப்போறதா பணம்னுக்கும் வறகுவைக்கலேவாங்கி வீடுநிறைய அடைத்து வைத்தோம் ஒன்றும்அறியாத வரைப்போலே பதனமாக யிருங்கள் தம்பி மார்களே.

பொது-வசனம்.

இப்படி பேசிக்கொண்டிருக்கிறபோது சூரியன்அஸ்தமான பிறகு பாட்டனுருகிய வீஷ்மாச்சாரியும் திருதராட்டிறனும் பாண்டவாளிடம் வருகிறபோது அவர்க்ள் எதிர்க்கொண்டு வந்து சொல்வது

தருமர்-வசனம்.

சருணமையா பாட்டனுரே பெரியதந்தையே தாங்களிருவருக்கும் தீர்கவந்தனம் இருவரும்போஜனம் செய்யஎழுந்

திருமையா அப்படியே போஜனம் செய்தோம் பாண்டவர்களே இந்தபாயில் உட்க்காருங்கள் தாம்பூலம் அருந்துங்கள் சந்தணம் பூசிக் கொள்ளுங்கள் பூமாலே ஆறம்போட்டுக் கொள்ளுங்கள் மகாசந்தோஷம் பிள்ளேகளே வீடுநிரைந்தப் பண்ட மெங்கே தாங்கள் தந்தபணத்தில் சாப்பாடு புஷ்ப்பம் சந்தணம் தாம் பூலம் பாய் இந்தமூன்றுபணமும் தங்கள்சிலவு ஒருபணத்தினல் வீடு நிறையச் செய்திருக்கிரோம் அது என்னவென்றுல் இதோ தீபத்தின் வேடிக்கயை பாருமையா சுவாமி.

வீஷ்மர்-வசனம்.

சரி சரிஉங்கள்புத்தி சாலிதனத்திற்குரொம்பவும் மெச்சிக் கொண்டோம் நீங்கள் நமது வீடுசேருங்கோள் பாண்டவர்களே நாங்கள் திரியோதினுதிகளிடம் சென்று பார்த்துவருகுரோம் அப்பா திரியோதனு வீடுநிறைந்தபண்டம் !என்னவாங்கிவைத் தீர்கள் அய்யா வறகுவைக்கலே வாங்கிவீடுநிறம்பஅடைத்துவை த்திருக்குரோமையா தாத்தாவே தந்தையே.

திருதராஷ்டிரன்-தரு.

முட்டாளுபிள்ளேயைப்பெற்று ;கெட்டேனேயென்னுசெய்வேன்
முகத்தின்முன்னில்லாதடா படுபாவி
வஞ்சகமில்லாதநல்ல பஞ்சபாண்டவரைப்போலே
வல்லமையில்லாதபாவி அடாதோஷி
பேரும்பெருகிடவே நூருபிள்ளேயைப்பெற்று
பேச்சிக்கிடமாக்கிவைத்த குருத்துரோகி
வருகுவைக்கலேவீடு நிரையஅடைத்துவைக்க
மதிகெட்டுப்போனதென்னு நிற்மூடா முட்

திருதராஷ்டிரன்-விருத்தம்.

பஞ்சவர்புத்திசாலி பார்த்தீரோதந்தையாரே
வஞ்சகம்கபடுஞ்சூதும் வாதுக்குமிவரைப்பெற்றேன்
கொஞ்சமும்மதியில்லாமல் குருவைநிந்தித்துவந்த
மிஞ்சியமைந்தர்சொல்லே விரும்பவெண்ணுதுசொன்னேன்.

வசனம்.

கேளும்தந்தையே பாண்டவாளுடைய புத்தியும் அரிவும் மேன்மையும் இவர்களுக்குவருமா ஒருக்காலம் வறமாட்டாது வஞ்சகம்கபடம் சூதுவாதுக்கும் இந்த நூறுபிள்ளேகளேப்பெற்

றேன் பெரும்பாவியாகினேன் கொஞ்சமாவது புத்தியில்லாமல் குருவைநிந்தித்துவந்த மடையப்பிள்ளைகள் வார்த்தையை இனி ஒருக்காலும் நம்பக்கூடாது கெறடிக்கூடத்துக்குக்குப் போகச் சொல்லும் தந்தையே.

### பொது-வசனம்.

இப்படி கெறடிக்கூடத்தில் இருந்து வில்வித்தைக்கற்றுதேர்ந்தபின்பு வீஷ்மரும் திருதராஷ்டிறனும் யோசித்து மனமகிழ்ச்சியடைந்து பிள்ளைகள் கற்பித்திருக்கும் வித்தைகளை பரிசோதிக்கும்படி யோசித்து அன்பத்தாரு தேசத்தரசர்களும் வரும்படி செய்து சபைகூடியிருக்க கர்னன் வருவது.

### கர்னன்-விருத்தம்.

மதியெனும்வதனகுந்தி மருவியபகுதிமைந்தன்
எதிரில்லாவல்லதீரன் யிலகியபணிகள்மின்ன
அதிவிதசிலைவாளேந்தி அரசன்தன்பாகனுனேன்
சுதனெனுங்களிக்குங்கர்ணன் நலமுடன்வருகின்றானே.

### கர்னன்-தரு.

வதனசுந்திரகர்னன்வந்தேன் வேடிக்கையாக
வதனசுந்திரகர்ணன் வாரேன்

வதனசுந்திரகர்ன்னதீரனும் வாகுவலயமும்பளபளென்றிட
மதனராசனைதோற்கடித்திடும்வண்ணமிகுத்திடும்மனதிலழகிய()

நெத்திசுட்டியும்நிகநிகவென்றிட நெடியகறமதுகடககங்கணம்
ரத்தினப்பணிதளதளென்றிட ராசராசரும்மனதுகளித்திட-வத

தட்டிச்சல்லடம்சுங்குகள் தண்டையரமணிவெண்டயங்களும்
வெட்டிநடக்கவும்கலகலென்றிடு இளமைப்பருவமும்தகதகன்ன

வில்லும்முப்புரிநூலுமிலங்கிட .வீறதனுவுடன்பாறவாளியும்
எல்லை எங்குமேகெடிமிகுத்திட இறவிமைந்தனும்துரிதமாகவே

### கர்னன்-வசனம்.

கேளும் காவலனே பாண்டவரும் துரியோதினதிகளும் பரிக்ஷிக்கும் வித்தையைப் பார்க்கும்படி பூங்கா வனத்திற்கு வந்தோம் வழிவிடும் இப்படி வரும்போது குரு புத்திறரை சிங்காரித்து வறச்செய்ய வீஷ்மர் சொல்வது.

வீஷ்மர்-வசனம்.

அப்பா துரியோதனா இதுயுத்தகளமல்ல சந்தோஷமாய் நீயும் வீமனும் எதிர்த்து உயித்தியம் செய்யும் பார்ப்போம் துரியோதனா.

துரியோதனன்-தரு.

எடுத்தானே துரியனும் கதைகரத்தில்
இன்பமானபெரியோரைத் தான்வணங்கி-தட்டி
அடுத்தானேவீமனைக்கிட்டி அதிறவேபூமியும்தோள்களைத்
அடிக்கவேவீமனை மடிக்கவேசுழண்டுமே
அடிக்கவேதன்மனம் இடுக்களாகவும் (எடு)

வீமன்-தரு.

வீமசேனனும்வெகுண்டுமீரியே வீறமானசபையோரைவணங்கி
ஏமருசன்கைதண்டமும் யேந்தியே
யேந்தியதண்டமும் சுழண்டுமீரியே
எட்டியிருவரும் தட்டிவிலக்கியே
கொட்டிநகைத்துமே மட்டியிட்டெழுந்து (வீம)

துரியன்-தரு.

வரிசையாகவேமாரியடிக்கடி வாங்கிதெண்டமும்
ஓங்கிவீசியே அரசர்மெச்சவே
குதித்துவந்தனே அடக்கு வேநடாநொடிக்குள்உந்தனே
அனைத்தயும்மன்னர்கள் தனித்துமேகாணவே
மனத்தில்வஞ்சகம் நினைத்திடாமலே (வரி)

வீமன்-தரு.

வந்தேனுனிதோவலயிடமாகவே மாறிமாறியேசாரியதாக
தந்தேனே அடிக்கடிஒறடி தடுத்துமேகடுத்துமீறவே
தக்கவேமனமது திக்குகளஞ்ச
மிக்கவும்மீறியே பக்குவமெண்ணி (வந்)

வீமன்-விருத்தம்.

ஒப்பிலாவீமசேனன் உயுத்தியகெதையினாலே
இப்பவேமடியச்செய்தால் யிலகியபெரியோரெல்லாம்
தப்பிதேபட்டதென்று சாதிப்பார்பழிசொல்லாமல்
தப்பாமல்யிவனைக்கொல்ல தன்மனந் துணிந்திட்டானே.

வசனம்.

இந்த ஆயுதப் பரிக்ஷைக்குப்போகும் போதே வீமனைக் கொன்று விட்டால் யேதோ தப்பிப் பட்டதென்று பெரியோர்கள் யெண்ணிபழிசொல்லமாட்டார்கள் ஆதலால் வீமனைக்கொல்லும்படி மனம்உருதிகொண்டு வந்து எதிர்த்தேன் பாருங்கள் சபையோர்களே

வீமன் - தரு.

காறியமறியா வீறியத்துரியா
கடைக்கண்சிவந்து கோபம்பெறலாமோ

ச. கற்றவித்தையைக் காட்டுவதேதனோ
மெத்த மெத்தவனு நாட்டுவதேதனோ காரி

துரியன் - தரு.

என்னடாவீமா பின்னிடலாமோ
எனக்குமுனக்கு முன்னால் பகையேதுதம்பி
யேங்கிடாதே அடிமெள்ளவேகாட்டும்
தாங்கிடாமலடி வந்துமேகூட்டும் என்ன

வீமன் - தரு.

வஞ்சகம் பெருக்க நெஞ்சமும்பொருக்க
மகிழ்ந்துப்பேசுவ தெல்லாமரியேனோ

ச. வையிரியம்வைத்துமே சிந்தையும்நாட
உயிர்நிலை தன்னிலே வந்துமேசாட வ

துரியன் - தரு.

தண்டமும் எடுக்க அண்டமும் நடுக்க
தத்திக்குதித்து வறரினையா
சாரிபாகவலம்வந்துமே வீசவே
வீரியப்படைமன்னருங் கூசவே தண்

வீமன் கந்தார்த்தம்.

பத்தியா யின்பங்கூரிபதைத்திடுந் துணிவாய்வந்துசத்தியே சுழண்டுமீரி தண்டமும்வாங்கிவீசி வெற்றிசெய்மிகவே கொண்ட விருப்பமுங்கண்டரிந்து சுத்தி முன்சிங்கம் போலே.

தரு.

அடிக்குறேன்பாரும் உந்தனையிப்போ
மடிக்குரேன் வாரும்

யிடிக்குறல்காட்டியே யெகரிதண்டம்வாங்கி
துடிக்கப்பலருங்கண்டு தாள்பறந்திடஓங்கி அ

துரியன் கந்தார்த்தம்.

கதாயுதம்பரிகைஷசெய்யும் காலத்தில்திறமிகுத்து
அதாகுதம்செய்யவந்த அன்பிலாவீமஜேனு
சதாசிவன்அயன்மால்தேவர் சகலரும்மனம்பிற்மிக்க
உதாசினங்கொண்டு தண்டம்.

தரு.

ஓங்கியேசாட சபையோரெல்லாம் தேங்கியேவாட
வாங்கிச்சுழண்டுமீரி மறலிவந்தணுகவே
யேங்கிரீற்விழும்படி யெகரிவந்தடித்தேனே ஓங்

பொது-வசனம்.

இப்படி யிருவரும் மண்டியிட்டு ஜாடுகிறபோது இதஎன்ன விபரீதமென்று துரோணர் மைந்தரான அஸ்வத்தாமன் யிருவர் நடுவில்நின்று வெகுநீதியை எடுத்துக்காட்டி தடுத்தபிறகுதுரோணர் அர்ச்சுனனைப்பார்த்து அப்பா அர்ச்சுனு உன்னுடைய வீற சாதுரியத்தை காட்டும்அர்ச்சுனு.

அர்ச்சுனன்-தரு.

விசையன்வில்லெடுத்தேனே இந்த
அண்டபகிறெண்டம் நடுங்கவே
விற்குருநாதனைப் பணிந்தேனே
திசையெங்கும்நடுங்கவே சீராய்நாணியைப்பூட்டி

சித்திரவிச்சித்திற பாணமெடுத்தேன்
சத்துருபயங்கற ளுகவிடுத்தேன் விசை

கெஜமென்னும் ஆஸ்திறமெடுத்தேன்
அதிவீறரைஅதம்செய்யும் கேசரிஅஸ்திரம்தொடுத்தேன்
அசுரஅஸ்திரத்தைவிட்டு அதற்குவயிரியான

அந்தகெந்தற்வ அஸ்திரமெடுத்தேன்
மந்திறமோதியே விட்டுதடுத்தேன் விசை

நாகஅஸ்திறம் தொட்டேனே
மிகசீறிகிளம்பியவீரியம்போக கருடாஅஸ்திறவிட்டேனே
யேகமாயிருள்காட்டி இறவிஅஸ்த்திறமீட்டி

யேற்றிஅக்கினி அஸ்திரமீட்டினேன்
மாற்றவேவருணஸ்திற மீட்டினேன் விசை
தடுத்தொருநூறுபாணமாய் விட
சங்கோபசங்கமாய் எங்கும்நிறயவே
சதகோடிகோடி யாகவே
நினைத்தவிதமறிய நிமலன்மனங்களிக்க
நீநிலத்திலெவற் சொல்லவுமெவறென
மானிலத்தினில் வல்லவநிவனென விசை

சபையோர்-விருத்தம்.

திரிலோகந்தன்னிலுள்ள திருமூர்த்திதேவரெல்லாம்
அரிதான வில்வாளி அர்ச்சுனன்இவன்வித்தைக்கு
சரியானபேர்களிந்த தறணியிலெவருமில்லை
விரிகடலுலகில்மன்னர் மெச்சினோம்மெச்சினோமே,

வசனம்.

ஆஆ! இந்த திரிலோகத்திலுள்ள தேவர்கள் முதலான பேறும் அரிதாகிய வில்வித்தயையுடைய அர்ச்சுனனுக்கு சரியான பேரில்லையென்று இந்தசபையிலுள்ள மன்னமண்டலீக ரெல்லாம் இந்தஅர்ச்சுனனை மெச்சினோம் சபாஷ் கெட்டிக் காறன் அப்போது கர்ணன்சொல்வது.

விருத்தம்.

அந்தணர்முனிவர்மற்ற அறசரும்விஜையபூபா
உந்தனைப்பெரிதாய்மெச்ச உக்கிரகோபங்கொண்டு
வந்துமேவில்வளைத்து மழைமாரியாகபாணம
சிந்தவேவிடுத்துஎன்னை ஜெயம்பெறத்துணிகுவாயே

வசனம்.

அந்தணர் முனிவர்மன்னர் மண்டலீகறும் அர்ச்சுனா உனக்கு யீடாக இந்த திரிலோகத்திலு மில்லைஎன்று மெச்சிக்கொள்ளவேநான் கோபங்கொண்டுமேகதாரையைப்போலேபாணமீட்டினேன் நீ என்னை ஜெயிக்கத்திறமிருந்தால் யெதிர்த்துவாரும் அர்ச்சுனா.

அர்ச்சுனன்-தரு.

நானேக்ஷத்திரியநாகுமே கர்ன்னனேநீயும்
றதப்பாகன்மைந்த நாகுமே
தானய்வந்தெதிர்த்தாலும்சமர்புரிய யல்லவேமேலும்

சமுத்துப்பேசியே துள்ளாதேநீ
மெத்தவேமதங் கொள்ளாதே
சதிர்பெருஞ்சபைதனில் பதரிடலாகுமோ நானே

கர்னன்-தரு.

வல்லமைசெலுத்திடவே எதிர்த்திடாமல்
மன்னர்கள் மதித்திடவே
நல்லகுலத்தோனென்றுமே புகழ்ந்துயென்னை
றதப்பாகன்மைந்த னென்றுமே

நாடியிப்படி பேசாதே-வெகு
மேட்டியென்றுமே வீசாதே
நன்மையோகுலமது வண்மையைப்பேச வல்

அர்ச்சுனன்-தரு.

வில்லறங்கேத்திசெய்யவே எங்களுக்குள்ளே
வேடிக்கைப்பாணம் உய்யவே
நல்லமதிதானுகூறடா சமர்
கொள்ளநாடியழைத்த தாறடா

நடுக்கமேமனங் கொண்டாலே-அது
அடுக்குமோகோபம் விண்டாலே
நறுக்கவும்வல்லமை உருக்கமுண்டாமே வில்

கர்னன்-தரு.

சாதிக்குலத்தைநண்ணியே பங்கப்படுத்த
சமயமிதுவென் றெண்ணியே
நீதியறிந்துதெரிலேன் எனக்குநீயும்
நிகரில்லையென்று கூரியே

நிற்பதேதுநீ விடுவேனே
சொற்பணத்திலும்பயப் படுவேனே
நீட்டியேதனுபூட்டினேன் பாரும் சாதி

அர்ச்சுனன்-விருத்தம்.

சொல்லியகற்றுயிந்த துரைமக்களெல்லாங்கூடி
எல்லையிலெவருங்காண எங்களுக்குள்ளவிதத்தை
வில்லறங்கேற்றிசெய்ய வேடிக்கைப்பற்றிடாமல்
வல்லமைகாட்டவந்த விதத்தைநான் அறிகுவேனே.

வசனம்.

அடாவாடா கர்ணு நாங்கள் நூற்றிஐந்துபேறும் எங்களுக்குள்ளபலமன்னறும்அறியவில்லை அரங்கேற்றஞ்செய்யுமிடத்தில் நீயோரதகன்மைந்தனாகயிருந்தும வேடிக்கைப்பாறுமல் பதட்டமாக விற்சாதுரியத்தைக்காட்டி எதிர்த்துவந்தாய் உன்புத்தியை யின்னதென்று அரிகிலேனடா கர்ணு

கர்னன்-தரு.

சாதிமுறையைசபையில்பேசவே ஒவியசையதீரனே
நீதியாகுமோஎதிர்க்க வருகுவாய்

அர்ச்சுனன்-தரு.

எதிர்த்துவந்தனே சிலையைவளைத்துமேஅடகர்னதீரா
மடிக்கபாணம்சபையில் அடாகர்னதீரனே

கர்னன்-தரு.

விடுத்தக்கணையைத்தடுத்துமீரியே ஒவிசைபூபா
மீட்டிசறங்களால்விலக்கிவந்தனே ஒவிசையபூபா

அர்ச்சுனன்-தரு.

வந்தசறங்கள் தன்னைதடுத்துமே ஒகர்ணுதீரனே
மடிக்கபாணம்நொடிக்குள்யேவினேன் ஒகர்ணுதீரனே

கர்னன்-கந்தார்த்தம்.

திடத்துடன்விசையாவுந்தன் திருமுகமண்டலத்தை
எடுத்துமேஅதற்குபூசை இக்ஷணம்செய்யவேண்டி
தடுத்துமேவில்லைவாங்கி சறமாரிபோலேபாணம்
தொடுத்துமே தேவர்நாட.

தரு.

சூறங்கொண்டேகின உந்தனைக்கொல்ல
வீரங்கொண் டேனே

சூறமாகவேவீரர் வாடியே
ஆறபாறமதாய் அதிர்ந்திட சூரங்

அர்ச்சுனன்-கந்தார்த்தம்.

நிந்தைகளுரைத்தகற்ணு நிலமைசேற்பெரியோர்என்னை
இந்தவேளையில்தடுக்க யிசைந்தாலும்ஒருக்காலென்னை

உன்தலைதன்னையிப்போ உருட்டாமல்போவேனாகில்
எந்தன்பேர் விசையநல்ல

த-ரு.

யேமனும்ஓட உந்தனையிந்த
பூமியும்நாட
யேமன்மாலயன் அமறறஞ்சிட
அமையும்பாணமும் நிமையிவஞ்சிட யேம

வசனம்.

இப்படி அர்ச்சுனருசனும் கர்னருசனும் உலகம் பிறளியப்பட சமற்செய்வதில்பெரியோர் அரிந்துகுருமைந்தனை அஸ்வத்தாமன் தடுத்து விலக்கச்செய்ய வீஷ்மாச்சாரி கோபித்துசொல்வது காண்க.

வீஷ்மர்-விருத்தம்.

சபையிலுள்ளவரேமைந்தர் தனுவறங்கேற்றிசெய்தால்
சுபமிதுவென்றிருக்கசொல்லுந் தேற்பாகன்மைந்தன்
விபரீதம்விளைக்கயெண்ணி விசையனையிகழ்ந்துசொன்ன
அபமிதுசபையோற்கெல்லாம் அடுக்குமோ அரிகிலேனே

வசனம்

கேளும் சபையோர்களே பிள்ளைகள் வில்லறங்கேற்றி செய்தால் யிதுசுபகறமென்று யாவரும் பார்த்திருக்க கர்னன் றதிகன்மைந்தனாகயிருந்தும் தான் சும்மாயிருமல் குலாச்சாறத்தைக் குறித்துப்பாருமல் தன்திறமையைக்காட்டி யெதிர்த்து அர்ச்சுனனுடைய திருமுகமண்டலத்தை அறங்கபூசைபுரியுறேனென்று எப்படிக்குச்சொல்லலாம் இதுயாவறுக்கும் யெப்படியிருப்பது சபையோர்களே அப்போது அஸ்வத்தாமன் சொல்லுவது.

பரத்துவாசர்-வசனம்.

சபையிலே சாதியைக்குரித்து இழிவுபேசலாகுமா ஆண்சாதி னெண்சாதி இரண்டேதவிறவேறுண்டோ அதாவது எந்த குலத்திலே பிறந்தாலும் வித்தைபுத்தி நன்னடக்கையினாலும் கீழ்மக்களாயினும்மேன்மக்களாவதென்றும்நீதியரியாயோ இந்த கர்னனை ஜாதியீனமாகச் சொன்னபடியினல் உனக்கு சரியான ராஜவரிசை செய்து அறசில்லாத அங்க தேசத்தை இந்தகர்னனுக்கு திருமுடி சூட்டிவையும் வீஷ்மரே.

வீஷ்மர்-கந்தார்த்தம்.

தவமுனிபறத்துவாசர் பகர்ந்திடும்மொழியைக்கேட்டு
தவஙிலாகற்னன் தன்னை தறணிமன்னவறுெப்பாக
நவமணிபதித்திழைத்த ராசபூஷணங்களீந்து
அவனிமன்னவருங் காண.

தரு.

அணிமுடி தரித்தாரே கற்னனுக்கன்பாய்
மணிமுடி தரித் தாறே
அணிமுடிசூட்டினூர் அங்கபூபதியென்ன
துணிவான துரியனூர் தோழனென்றுமதிக்க அ

வசனம்.

கர்னனுக்கு அங்கதேசத்தை முடிசூட்டிவைத்து வீஷ்மர் மகிழ்ந்து துரோணரைப் பார்த்துச் சொல்வது.

வீஷ்மர்-தரு.

வில்லறங்கேற்றிசெய்யவே வெகுசீருள்ள துரோணச்சாரி
மிகவும்மனம் மகிழ்ந்தேனே
சொல்திரமானசாஸ்திரம் திலங்கும்தனூர்வேதங்கள்
துஷ்டசங்காறனே இஷ்டம்வைத்தருளிய
பக்ஷமாகவேகுருதக்ஷிணை பெருவீர் வில்

துரோணா-தரு.

வெகுமதிதந்திடவே கூரியவீஷ்மாச்சாரியேகேளும்
வேண்டாம்இதுகள் யெனக்கு
தகுமானவெகுமதி தாணுண்டுஅரியாமல்
தட்டுதட்டாகவே யிட்டுவெகுமதி
கிட்டியேநீங்கள்தற முட்டவுமுண்டு வெகு

வீஷ்மர்-தரு.

வேண்டியவிதமென்னமோ நீசொல்லியவிதமது
நல்லதுமுடிப்பேன் வேந்தறரியக்கூருவீர்
கூண்டுமனதில்வைத்து கூறவேண்டியதில்லை
கொப்பெனவிபறமா செப்புவீர்அரிய
யிப்பவேதருகுறேன் ஒப்பிலாப்பாதா வேண்

துரோணர்-தரு.

எந்தன் மன துகோரிக்கை யீடேறவந்தேனே-வீரியதீராஎந்தன்
எந்தன் மனது கோரிக்கை
அந்தவண்ணமுடிய அடுத்தேன்யிவ்விடம்வந்து
அரியவேசொல்குரேன் பிரியவேசபைதனில்
வரிசிலேயேந்திய நெரிமுரைமன்னா எந்

துரோணர்-விருத்தம்.

முந்தியதுருபதேயன் மொழிந்தசொற்பிறட்டினாலே
வந்தனன்சபுதம்கூரி மைந்தனும்அவரைவென்று
விந்தைதேற்காலில்கட்டி தேவரீர்சபையைநாடி
எந்தன்முன்கொண்டுவந்தால் யீடிலாப்பொருளதாமே.

வசனம்,

பாஞ்சாலன் என்னிடம் அனேகம் வித்தைகளைக் கற்றுக் கொண்டு பாதிராச்சியம் தருகுறேனென்று சொல்லினன் நான் ஒருபொருளை வேண்டிக்கேழ்க்க என்னை அவமரியாதிசெய்தான் அதினாலே என்வித்தையை ஒருஅரசனுக்கு கற்பித்துஅவனாலே உன்னை தேர்காலில்கட்டிவந்து பங்கம் செய்வேனென்று சபுதங் கூரிவந்தேன் அதை நிரைவேற்றி வைப்பதே ஒப்புள்ள வெகு மதியாகும் வீஷ்மரே.

வீஷ்மர்-வசனம்.

அப்பாமைந்தர்களே ஐயர்சொன்னபடி நடத்த ஆர்போ வீரர்கள் சொல்லுங்கள் பிள்ளைகளே.

துரியன்-விருத்தம்

பாரியமகுடமன்னர் பகைவரும்நடுநடுங்க
சாரியாயானுமேகிச்சமர் செய்துதுருபன்தன்னை
கூரியபடியேகட்டிக் கொண்டுமேயெவரும்மெச்ச
வீரியஞ்செலுத்திவைப்பேன் விடைகொடுத்தனுப்புவீரே,

வசனம்.

நான்பாஞ்சாலனை ஜெயம்பெற்று உமது கோரிக்கைமுடிக் குறேன் பாஞ்சாலனை எனது தேற்காலில் கட்டி வருகுரேன் பெரியோர்களே அப்படியே போய்வாரும் துரியோதனா.

துரியன்-தரு.

சதுரங்கச்சேனைகள் கூட்டி
தடையன்றிரதமதிலே புலிகளைப்பூட்டி
அதிரவேநடைபேரிமீட்டி நல்ல
அழகானரதமதில் அரவத்துவஜம்நாட்டி
சிங்காரபலபணிகள் மின்ன நல்ல
திசையெங்கும்புகழ்பெற்ற காமனிவனென்ன
திங்கள்குலந்தன்னில் வந்ததீறன் நல்ல
சிலேயேந்திவருங்கால ரணரங்கசூரன்
வாளுடனேகேடயம் எடுத்தான்
வளைதடியுஞ்சக்கரமும் வல்லயம்பிடித்தான்
தாளமுருகுமணிபணிகள் கொஞ்சநல்ல
தாரணியுங்கிடுகிடென சேனைகளுமிஞ்ச
அஸ்த்தினபுரிவிட்டு நடந்தான்நல்ல
அடவிகளும்நாடுகளும் வெகுவழிதொடர்ந்தான்
விஸ்த்தாரபாஞ்சாலதேசம் கண்டு
வெத்திபெறவந்தேனே துரியமகாராஜன்(தன)

பொது-வசனம்.

இப்படி துரியன் பாஞ்சாலதேசம் வந்து இராணபேறி போட தூதர்கள் ஒடி பாஞ்சாலனுக்குச்சொல்லி பாஞ்சாலன் சொல்வது.

பாஞ்சாலன்-விருத்தம்.

துரியவர்எதிர்த்தத்தாறென்று தூதுவர்கூறக்கேட்டு
எரியில்நெய்கவிழ்ந்தாப்போலும் இனியில்லாக்கோபங்கொண்டு
வரிசிலேபலவுந்தாங்கி வளமானதேவர்சூழ
சரியானரதத்தில்யேறி சமர்செய்யத்துடங்கினரே.

பாஞ்சாலன்-தரு.

துரியனேஎனக்குநீசரியோஅடாதுசந்தொடுத்திடுவதும்நெரியே
அறியாதவானவர்சதமோ நீயும்
அருஞ்சமர்விளைக்கவும் பதமோ

அம்பாலுனதுபடை தம்பிரதமழிய
அட்டியில்லாச்சறங்களை விட்டேன்அனேகமாக (துரி)

துரியன்-தரு.

வெல்லவும்உனக்கென்ன தீரமோஎன்னை
வெற்றிசெய்யவுமென்ன உரமோ
எல்லையில் அரசர்கள்வாட வந்து
எதிர்த்தப்படைகள் முறிந்தோட

எண்ணுப்படையுடைய வண்ணமுமழிந்திடவே
எத்தியிந்தபாணத்தாலேவெற்றிசெய்யத்தீரமுண்டு (வெ)

பாஞ்சாலன்-தரு.

வலியவந்தெதிர்ப்பதும்மதியோ இப்போ
மாண்டுமடிந்திட விதியோ
புலியைப்பூனைவந்து வெல்லுமேயிங்கே
பொங்கிக்குதித்திடவும் போகுமோ
பொன்னுவிறைத்தமணி பின்னிஅசைந்திடவும்
புத்தியிலறிந்திடுவாய் மெத்தவும்பொருத்தேனென்று (வ)

துரியன்-தரு

வில்லாச்சாரியார்க்கிடர் நினைக்கநாங்கள்
மீறிவந்தோமேஉன்னைத் துணிக்க
சொல்லாதும்சொல்லவும் பலமோ
துணிந்துமறித்திடவும் நலமோ

சூராளனதுபலம் பாராய்நிமைப்பொழுதில்
துள்ளியதலைசிதறத் தள்ளவும்சரமெடுத்தேன் (வில்)

பாஞ்சாலன்-விருத்தம்.

அறியாதசிறுவரெல்லாம் அந்தணன்சபதந்தன்னை
சரியாகச்செலுத்தவேண்டி சமர்செய்யத்துணிந்துவந்தீர்
தெரியாமலெனதுவீரம் சிவனைமடிக்கவேண்டி
மரியாதையாகஓடி வல்லுயிர்பிழைத்திடீரே

வசனம்.

அடாசிறுவர்களேதுரோணர் என்னிடம் சபதம் கூறிப்போனார் அதுசபதம்முடிக்க என்சவுரியமறியாமல் வந்தீர்கள் வேண்டாம் மரியாதையுடனே உயிர்தப்பிஓடிப்போய் விடுங்கள் திரியோதனாதிகளே.

துரியன்-தரு.

துருபதேயனேஉன்னிட வுரியங் காணவே
தொடுத்தேனேசரம் உன்னிடபடைகளும்ஓடவே
குருமொழிதவறிய பாதகனே
கூறியவாககுமுடிக்க மீறியெதிர்த்துவந்தேன் (து)

பாஞ்சாலன்-தரு.

வீரமாகவேநீவிடுங்கணைகளை வாட்டினேன்
விண்டலமஞ்சவே அனேகசரங்களைமீட்டினேன்
தீரமாகவந்தப் படைகளும்பொடிபட
சின்னபின்னமாயடித்தேன் மன்னர்மன்னவரஞ்ச (வீ)

துரியன்-தரு.

விற்குருமகிழ்ந்திடவந்தேனே சவுரியமாகவே
மேவியவுந்தனைகட்டியே நான்கொண்டுபோகவே
நற்கணைபலவிதம் நானுமேயேவினேன்
நாடிசெயபேரிகை சாடிமுழங்கிடவே (வி)

பாஞ்சாலன்-தரு.

ரதகஜதுரகபதாதியை துச்சமாய்தாக்கினேன்
நாடியேதேர்பரிகொடியுடன்வல்லவிணைபோக்கினேன்
அதிரதர்சேனையும் தம்பிமார்ஓடவும்
அத்தர்சித்தர் தேவரஞ்ச
வெற்றிசெய்ய போறேனிதோ (ரத)

துரியன்-விருத்தம்.

வடிவானதுருபதேயன் வரவிடும்கரத்தினாலே
மடிபடதமயன் தம்பி மார்களும்பின்னிட்டோட
கொடிகுடரதம்தூளாக கொற்றவன் துரியனோடி
படிபுகழ்கிருபர்துரோணர் பாட்டனுக்குறைசெய்வாரே.

துரியோதனன்-தரு.

அருமறைமுனியேஎந்தன் ஐயாவேஎன்னசெய்வேன்
தருமொழிதன்னாலேநாங்கள் சமர்செய்யவேநடந்தோம்
சொல்லியபாஞ்சாலதேசம் சுந்தரவல்லவனே
வெல்லும்படியேஎதிர்த்துநாங்கள்வீரங்கள்காட்டவேசாரியதாய்
சோமகன் தன்னுடனேசேனை சூழவேவந்தெதிர்த்து
ஏமனும்அஞ்சிடவேசண்டை என்னுடன்செய்யவேமன்னவனும்

கண்டுபயமெடுத்துநாங்கள் கைகால்நடுங்கிபுரங்கொடுத்து
உண்டுஉயிர்பிழைத்துவந்தோம் ஓதஎளிதல்லசேதிஎல்லாம்

அர்ச்சுனன் விருத்தம்.

அரியசபைதானரிய ஐயாஎந்தன்
ஆசரியர்சப்தமதுதான் முடிக்கபோன
பெரியதந்தைமைந்தர்களும் குருதுரோகிக்கு
பின்னிடைந்துவந்தவிதம் தன்னைகேட்டு
எரியில்நெய்யைகவிழ்த்ததுப்போல் மனதுபொங்கி
எழுந்தனிதோ குருசப்தம்தனைமுடித்து
விரியமடலோடவனை கட்டிக்கொண்டு
வருகுவேன்விடைதருகுவீர் ஒருநொடிக்குள்தானே.

வசனம்.

கேளும்பாட்டனாரே துருபதேயனை குருதுரோகிக்குமுன் எனது பெரியதந்தை மைந்தர்கள் சென்று அபஜெயம் அடைந்துவந்தபடியினால் அக்கினியில் நெய்யை கவிழ்த்தது போலும் கோபமீறி எழுந்தேன் யெனக்குவிடைதந்தால் யென்குருவின் சபதப்படிகட்டிக் கொண்டுவருகுறேன் தாத்தாவே அப்படியே போய்வாருமப்பா அர்ச்சுனா.

அர்ச்சுனன்-தரு.

சண்டைசெய்யவேநடந்தான் அர்ச்சுனராசன்
சதுரங்கசேனைசூழவேநடந்தான் சதுரங்கசேனைசூழ
தண்டைகிண்கிணிகொஞ்ச தனுசுந்தண்டமும்பாலா
தாவியப்படை தேறணிகளும்
மேவியப்படை வீறாஞ்சவே (சண்)
ராயபேரிகைபாடவே அர்ச்சுனராசன்
நமரிசின்னங்கள் ஊதவே
காயுஞ்சூரியனென்ன காஃதிப்பளபளென்ன
கண்டதேசமும் தேசமும்விட்டுமே
கொண்டுகுருமொழி தன்னைதொட்டுமே (சண்)
மணிச்சித்திரரதமேறிய காண்டீபதீரன்
மண்டலத்தவர்கள் வாடவே
அணிமுத்துமணிமாலை ஆரஞ்சரப்பளிகள்

ஆடைப்பரிமள கந்தம்வீசவே
நாடிதுருபதன் மனதுகூசவே (சண்)

பம்பைமுரசுகொட்டவே விசையதீரன்
பாஞ்சாலன் தன்னைக் கட்டவே
அம்புவியரசரும் அமரர்கள்முனிவரும்

ஆதிமாயவனென்று கூறவும்
நீதிவல்லவனென்று தேறவும் (சண்)

அர்ச்சுனன்-விருத்தம்.

பந்தமாய்புகழ்படைத்த பாஞ்சாலதேசத்திற்கு
வேந்தனேகுருவை அண்டி வித்தையுமுணர்ந்தபின்பு
சாந்தமாம்ஆசைக்கூறி சமையத்தில்ஆரோவென்று
கோந்தலுமாந்தல்செய்த குருத்துரோகிவுனேக்கண்டேனே

வசனம்.

கேளும் பாஞ்சாலமகாராசனே நீயே விற்குருவை அண்டி அவராலே சிலவித்தையைக்கற்றுக்கொண்டு மிகுந்த ஆசையைக்காட்டி, வருங்காலத்தில் முகமறியாதவனைப் போல் யேளிதம் செய்தகுருத்துரோகி உன்னைக்கண்டேன் எதிர்த்து வாரும் பாஞ்சாலராசனே.

பாஞ்சாலன்—தரு.

நாடிவந்திடும்விசையனே உன்னிடாணுவதிராணியையாணுவங்காண
கோடிகோடியாய்பாணமீட்டினேன் குத்தகமென்றுமேசிங்லதயுகந்தேன்

ஓடிப்போகவும்விடுவனோ உந்தனை
ஒருசமம்வருகுது திறமையைக்காண (நாடி)

அர்ச்சுனன்—தரு.

வாவிடுஞ்சரங்களைதடுத்துமீறவும் வல்லமைக்காணவேவில்லைஎடுத்தேன்
சரசரவென்றுமேனுனேறிட்டுமே சந்தித்தொருகணைவந்திடவிடுத்தேன்
கரகலமேந்தியேவில்லையும் வாட்டி
கட்டவும்வந்தனே அட்டிகளுண்டோ(வள)

பாஞ்சாலன்-தரு.

முந்தியேவந்திடும்துரியனவர்களும் முடிகியபலபடைதிடமதுமாரி
பிந்தியேவந்துமேநொந்தது கண்டுமே பேசவும்வந்தாயோரோஷமுமீறி

சந்திரகந்தற்வபாண மீட்டினேன்
சலமதுபொங்கிட தலமதுபொடிபட(முந்)

அர்ச்சுனன்-தரு.

எளிதமாகவேயெந்தனைநீயுமே எண்ணிளமனமதுகுண்ணியேவாட
வாளெறிபாவியஅஸ்த்திறமீட்டினேன் வந்திடும்அஸ்த்திரமதுந்தனைசாட
கோளறிபோலவேகெற்சனை யாகவே
கொடியசரங்களைநொடியினில் யேவினேன்(எளி)

பாஞ்சாலன்-விருத்தம்.

பரியாசமாகவந்துபார்த்தனே யென்னைக்கட்டி
சரியாகநடப்பேனென்று சமுத்துகள்பேசவேண்டாம்
அரியாதபிள்ளைநீயும் அமர்செய்யவந்தெதிர்த்தாய்
தெரியாமல்மடியவேண்டாம் ஜீவனோடேகுவாயே

வசனம்.

கேளும் அர்ச்சுனனென்னைக்கட்டிக் கொண்டு போகுறேனென்று பேசவேண்டாம் நீயோ சிறுபிள்ளை எதிர்த்துமடியாமல் உயிர் தப்பிநடவும் அர்ச்சுனா.

அர்ச்சுனன்-தரு.

எந்தனையேளிதமுறைக்க பாஞ்சாலனே
விந்தைகள் யெங்குமே மறைக்க
ஆந்திரத்தேவர்களஞ்ச சந்திறமுகபாணமீட்டி
ஆடவும்கபந்தம்நின்று ஓடவும்படைசிதறி
வாடவும்நடுநடுங்க சாடவும்யிடைவிடாமல்(எந்)

பாஞ்சாலன்-தரு.

விட்டசறந்தன்னைமடிக்க வினசயாஉன்னை
வட்டவில்லைதுண்டாய் ஒடிக்க
சட்டமானதேர்பரியும் சாரதிபொடிபொடியாய்
தாகவும்மனங்கலங்கி ,வேகவும்படைகளெல்லாம்
நோகவும்விருதழிந்து போகவும்தாருமாறாக(விட)

அர்ச்சுனன்-தரு.

கோடிசதகோடியாகவே சரமெடுத்தேன்
வாடியப்படைகள் நோகவே
ஆடியப்பம்பரம்போலே ரதந்திருப்ப

மூடவேஎனதுகொடிநாடவே உலகமெங்கும்
காட்டவேஎனதுவீரம் வாட்டவும்சின்னபின்னமாய் (கோ)

பாஞ்சாலன்-தரு.

அம்பெடுத்தேதன்உன்னைவாட்டவே ஜெயபேரிகை
கொம்புசங்கந்தானும் மீட்டவே
தெம்பழியஉன்னைக்கண்டு உம்பருமமனங்கலங்க
தேறவும்செயமங்களம் கூறவும்எனதுபடை
மாறவும்வருஞ்சரங்கள் ஆரபாரங்கொண்டெழும்பி (அ)

அர்ச்சுனன்-கந்தார்த்தம்

குருபாதம்தன்னைவணங்கி வில்லைப்பூட்டி
கோடானகோடிசரந் தன்னைமீட்டி
ஒருபானத்தால்கொடையும் கொடியும்விழ
உருவியதேர்பரியும் வல்லவனும்சாய
மறுபாணத்தால்அழிய கவசக்கிரீடம்
வரிசிலையும்மெய்ப்பணிக ளெல்லாம்போக்கி
திருவானவிற்குதையா விழுத்துயெந்தன் (கு)

தரு.

தேற்காலில்கட்டிவைத்தேனே பஞ்சாலன்தன்னை
திட்டமாகவெற்றி பெற்றேனே
பார்க்காமல்குருவென்று பாசம்விட்டகற்றிய
பஞ்சபாதகனும் சஞ்சலமிகுத்திடும்
வஞ்சமில்லாக்குரு நெஞ்சமகிழ்ந்திட (தேற்)

பாஞ்சாலன்-விருத்தம்.

என்னநான்செய்வேனையோ இலகியவேந்தரெல்லாம்
மன்னவனிவனேயென்றுமதிக்க யிவ்வுலகையாண்டு
மின்னியமுடிவேரெந்தன் விருதுகளுடனழித்து
சின்னவன்பிடித்துக்கட்ட சிவனேநீவிதித்திட்டாயோ

பாஞ்சாலன்-தரு.

ஐயோநானென்னசெய்வேன் அரசர்க்கரசனுகி
அவதிக்குள்ளாகினேனே சங்கரனே
கையுமிறுக்கிரத்தம் கசியக்கொடிகம்பத்தில்
கட்டுண்டுவாடலானேன் ஓதெய்வமே

அந்தணர் துரோணருக்கு அவனியில்பேர்பாதி
அளிப்பேனென்றுஉண்மைசொல்லி ஓ தெய்வமே
வந்திடநான்பிரட்ட மனதுதுணியவைத்து
வாடித்தவிக்கவைத்தாய் ஓ தெய்வமே
பகருமுனிவர்கேட்ட பசுவாகிலுந்தராத
பாதகமிதுதானே ஓ தெய்வமே
புகலுங்குருசபதம் புரந்தரன்சுதனாலே
பொருந்தமுடித்துவைத்தாய் ஓ தெய்வமே
மண்டலமரியவேமாறுப் பங்கமடைந்தேன்
வையகமாள்வதுண்டோ ஓ தெய்வமே
கண்டார்யெனைநகைக்க கருத்திலெண்ணியகுரு
கண்காணவாடலாச்சே ஓ தெய்வமே

அர்ச்சுனன்-கவி.

புலம்பிடஅறசன்தேறை புகைஎனநடத்திக்கொண்டு
சிலம்பகூடத்துட்க்கொண்டு சேர்த்துமேபடியிறக்கி
குலம்பெருங்குருவேதாங்கள் கூரியபடிமுடித்தேன்
நலம்பெருந்திருவடிக்கு நான்கோடிசருணமையா.

வசனம்.

இப்படிபாஞ்சாலன் பிறலாபித்துக்கொண்டுபோக அர்ச்சுனன் தேறைமுடிக்கி துரோணச்சாரியிடம் கொண்டுபோய்விடபோது துரோணச்சாரியானவர் அர்ச்சுனனைப் பார்த்து சந்தோஷித்து சொல்வதுகாண்க.

துரோணர்-தரு.

தரும்பொருளானசெல்வமே நவமணியெனும்பாலா
அணிமுடிமேலாய் தரித்துகொண்டுவாழ்குவாய்
பெரும்பொருளானசெல்வம் பேரும்பிறபல்லியமாகி
பின்னிடாமல்சமர் கடந்திடும்படி
மன்னர்மன்னனாக வறமதுதந்தேன் (தரு)
சத்தியநெரியுங்குரு பத்தியுமில்லாதயிந்த
கத்திரிமேறைபாஞ்சாலன்மெத்தசபையோருங்காண
கடினமாகசொன்ன சபதமீடேரிய
கெடியினாலேவெகு மன்னரும்பார்த்திட (தரு)

கல்லுங்கதிருள்ளமட்டும் சொல்லுமதியுள்ளமட்டும்
எல்லையண்டமுள்ளளவும் வெல்லும்புகழுள்ளளவும்
இந்தகீர்த்தியழியாமலே ஆக்ஷக்ஷியாய்
தந்துவாழ்குவாய் மாயவன்சாக்ஷியாய் தரும

## துரோணர்-கவி.

துருபதனேபலறரியவென்முன்பாக
சொற்சபுதம்தனைமுடித்தேன்தேசமெல்லாம்
அரிதியதாய்கைகொண்டேன்நானுனக்கு
அளித்தனடாசுகமாகப்பகர்ந்தேதப்பா
ஒருபசுவைவேண்டிதனலோபிநீயே
உனைப்போலும்பாதகனும் உலகிலுண்டோ
பெருவிறலைநோக்கிவெட்கப்படவும்வேண்டாம்
பாஞ்சாலா உன்னகருக்கேகுவாயே

## வசனம்.

அடா துருபதேயா நான் உன்னிடத்தில் சொல்லியசபதமும் நிறைவேற்றினேன் நீ எனக்குச்சொன்ன பாதிருச்சியமும் உனது சுவாதீனபாதியும் யென்னுதாய்விட்டது நீ கொடாவிட்டாலும் நான் உனக்கு பாதிராச்சியமளித்தேன் நீற்கைக்கொண்டுகாணப்படாமல் இந்தறதமேறி உன்னகருக்குப் போய்வாரும் பாஞ்சாலருசனே.

## வீஷ்மர் விருத்தம்.

அத்திலாவீறங்கொண்டு அலமரியாதைசெய்த
சத்துருதன்னைவெல்ல தைரியம்தனைவிடாமல்
மெத்தவும்வலுமைகூறி வெல்லவல்லவரேநல்ல
உத்தமகுலத்தெவற்கும் உரைப்பதுஉலகந்தானே

## வசனம்.

கேளும்சபையோர்களே தனக்கொறுபங்கமென்றி இடர் செய்தசத்துருவை வெல்லுந்திராணியை செலுத்தினதற்கு வந்த துன்பத்தைக்குரித்து வெழ்க்கப்பட லாமாவீறங்கூறி முடிக்கப்பட்டவனெவனோ அவன் தான் உத்தமகுலஸ்த்திரியனென்று லகத்தார் சொல்லுவார்களப்பா சபையோர்களே.

பாஞ்சாலன்-விருத்தம்.

தன்னினந்தன்னைக்காற்கும் தடைவேலிப்பயிரைக்கார்க்கும்
என்னவும்நிசமரிந்தேன் எனைவென்றமைந்தனுக்கு
கன்னியுமளித்தநல்ல காளையும்பயிருந்துரோணா
உன்னைநான்கொல்லாவிட்டால் உத்தமக்ஷத்திரியனல்லா

வசனம்.

தன்னினம் தன்னைக்காற்கும் வேலியே பயிரைக்காற்கும் என்றதை அறிந்தேன் என்னைக்கட்டிக்கொண்டுவந்த அர்ச்சுனன் தோளுக்கேற்றபெண்பெற்றுதருவேன் ஓற் பிள்ளையைப்பெற்று யென்னைக்கட்டிவறச்சொன்ன துரோணாச்சாரியை நான் கொல்லாமல்போனால் நான் உத்தமகுல க்ஷத்திரியனுக்குப்பிறந்தவ நல்லநல்லதாகட்டும் போய்வருகுறேன் சபையோர்களே.

பொது-வசனம்.

அப்போது பாஞ்சாலராசன் தன்னகறம்வந்துசேர்ந்து மந்திரிகளைப்பார்த்துச் சொல்வது

பாஞ்சாலன்-விருத்தம்.

வேந்தர்கள்சபையைவிட்டு விடுபடாச்சிங்கம்போலே
பாந்தமாய்ப்புகழ்படைத்த பாஞ்சாலதேசம்வந்தோன்
யேந்திழைமாதேர்களும் யிக்ஷணம்நீங்களோடி
பூந்தேவிமனவிதன்னைப் பிரியமாய்வறச்செய்வாயே.

வசனம்.

கேளும் பெண்களா எனது தேவியான பூந்தேவியம்மனை அதிகசீக்கிறம் அழைத்துவாருங்கள் பெண்களா.

பூந்தேவி வருவது-விருத்தம்.

அகிலிகைசீதைமண்டோதரி றதிதனக்கொப்பாக
சகலரும்மனங்களிக்க சர்வபூஷணங்கள்மின்ன
துகிலணிசரிகைமின்ன துலங்குமிச்சபையைநாடி
புகலுமின்னிடையாளான பூந்தேவிவருகின்றாளே.

பூந்தேவி-தரு.

பூமிபுகழுஞ்சிவ காமியருளால்வந்த
பூந்தேவிமாதுவந்தாள் மகராசனைக்காண (பூமி
சோமசுந்திறரூபி சொல்லுங்கிளிப்பிறதாபி

சுகமுருமயிலென்ன மிகமதன்ரதியென
பகலொளிபூஷணம் தகதகவென்ன (பூமி)

அன்னநடையாள்வஞ்சி அறசிக்கறசியான
அருமைசிரோன்மணிவந்தாள் வெகுவஞ்சியர்சூழ
மின்னலிடைதுவள மேனிப்பளபளென்ன
வித்தகநருளிய உத்தமறதியென
மெத்தமகிழ்ந்திட சித்திரவதியாள் (பூமி)

செங்கறந்தன்னிலுள்ள கங்கணகடகமின்ன
சேல்விழிமாதுவந்தாள் ஜெகமதுவழகிய
சங்கறதிருபதம் பொங்கமுடன்வணங்கி
தபமுரும்மன்னனும் அபசெயமாகிய
விபரமரியவே அபிநயமாக (பூமி)

சிருந்தண்டைகொலுசு பேரும்பாதந்தனிலே
சிலம்புங்கலகலென்னவே நவமணிகளழுத்திய
சாரும்பதியைவிட்டு தாதிகள்சூழ்ந்திட
மேதினிமெச்சிய மூதரிவாகிய
தாதிகள்சூழ்ந்திட சிதரியென்ன (பூமி)

பூந்தேவி-தரு.

சோதிமுடிவதனு எந்தன்சுந்திரமாயதனு
நீதிக்கதிபதியே உந்தன்பாதத்துக்கேசருணம்

பாஞ்சாலன்–தரு.

கொஞ்சுங்கிளிமொழியே பெண்ணேகோகிலறஞ்சிதமே
ரஞ்சிதமாமயிலே எந்தன்நாயகிநீவாழி

பூந்தேவி-தரு

செழிக்கநகருண்ட மன்னுசிந்தைமிகவாடி
அழைத்தவிதமென்ன அடியவள்நான்சருணம்

பாஞ்சாலன்-தரு.

செப்புமென்றேஉரைத்த நல்லசெல்விழிரஞ்சிதமே
தப்பிதம்வந்ததெல்லாம் யிப்போதையலேனுனுரைப்பேன்

பாஞ்சாலன்-வசனம்

விற்குருவாகிய துரோணாச்சாரிக்கி பாதி நாடுதருவேன் அவர் வந்த காலம் அவரை மதிக்காமல் தூஷணித்தேன் அவரி

ட்ட சபதப்படி குருகுல அர்ச்சுனமகாராசனாலே என்னைத் தேற்காலில் கட்டிக்கொண்டு வறச்செய்ததின் பேரில் அவரைக் கொல்லும்படிக்கி ஒருபுத்திறனும் என்னைக்கட்டிய விவ்வாளிக்கி ஒருபெண்ணைத் தருவேனென்று சபதமிட்டு வந்தேன் பெண்ணே பிராணனாயகி.

பூந்தேவி-விருத்தம்.

மன்னர்மன்னவர்கள்சூழ்ந்து வணங்கவே அரசுசெய்தீர்
இன்னிலமதிக்கவந்த என்னிடப்பிராணனாதா
தன்னையுஞ்சிருவன்வந்து சமர்செய்துசெயமடைந்தான்
உன்னிதசேதிகேட்டு உரிகிடலாகினேனே

வசனம்.

கேளும் பிராணநாயகா இந்த பாஞ்சால தேசத்தையாவர்களும் வணங்கும்படி அறசு செய்து கொண்டிருந்த உம்மை சிருபிள்ளையாகிய அர்ச்சுனனால் கட்டுண்டு வறலாச்சுதே இதற்கென்ன செய்வேன் பிராணேசா.

பூந்தேவி-தரு.

என்னசெய்குவேனையோ மன்னற்குமன்னனான
எந்தன்பிராணநாயகரை தெய்வமே
சின்னஞ்சிருவன்வந்து செப்பியஎன்கணவனை
தேற்காலில்கட்டவைத்தாய் தெய்வமே
மணிமகுடந்தாங்கிய மண்ணுலகாளவும்
வசைக்கிடமாச்சுதையோ தெய்வமே
கணக்கில்அடங்காத கரிபரிசேனையெல்லாம்
கசக்கிமடியவைத்தாய் தெய்வமே
யேங்கிசபையரிய இட்டுவந்தசபதம்
யெப்படிமுடியுமோ தெய்வமே
சோங்கியன்னவன்வந்து சொல்லுமொழியினாலே
துடிக்குதென்திரேகமையோ தெய்வமே

பாஞ்சாலன்-விருத்தம்.

சுந்திரவதியேபெண்ணே சொல்லுவேனென்றுகேளும்
வந்ததுபங்கமென்றுவருத்தம் நீறடையவேண்டாம்
சந்ததிபெறவேநாமும் தபஞ்செய்யுமுறமைகாண
அந்தணன்தனையடக்க அடவிக்கியேகுவோமே

வசனம்.

நமக்கு பங்கம் வந்ததென்று நீவருத்தப்பட வேண்டாம் சந்ததி உண்டாகும்படி பரமசிவனைநாடி தபஞ்செய்ய அதற்கு ண்டாகிய உபதேசமுதலானதையும் தெரிந்துக் கொள்ளும்படி தபசிகள் இருக்கும் வனத்திற்குப் போகவேண்டும் சந்தோஷமாகவிடை தந்தனுப்பும் பெண்ணே பிராணநாயகி.

பூந்தேவி-தரு

தங்கமணிமகுடம் தாங்குஞ்செங்கோலாண்டமன்னா
தனியாகவே வனம்போகவும்
கனமோயிது மனமோ (தங்க)

பாஞ்சாலன்-தரு.

மடமயிலேமானேதேனே வனக்குயிலேபெண்ணேகண்ணே
மதியேமதன்றதியேவன பதியேகவும்சதியேதடி (மட)

பூந்தேவி-தரு.

என்னைநீரும்பிரியமனம் எப்படிபிரிந்திருப்பேன்
இடறொன்றுமேதுவராயலே திடமாகுமேஅடியாள்வர (எ)

பாஞ்சாலன்-தரு.

கொஞ்சுங்கிளிரஞ்சுதமே கூடிப்போகவேடிக்கையோ
குதவாகவே.அநலருள் சதியாகுமேமதியாதடி(கொ)

பூந்தேவி-விருத்தம்.

இத்தனைநாளாய்நாமும் யிணைபிரியாமல்வாழ்ந்தோம்
பித்தனைக்காணவேண்டி பெருந்தபம்செய்யநீரும்
எத்தனைசொன்னபோதும் இருந்தும்மைபிரிவதுண்டோ
பத்தினிவரலாங்கூடி பரிவுடனேகுவோமே.

வசனம்.

அடியாள் இதுவரைக்கும் பிரிந்ததில்லை பரமசிவனை நாடி தபஞ் செய்யு மிடத்தில் பாரியாள்கூடவரலாம் பிராணநாயகா.

பாஞ்சாலன்-வசனம்.

ஆனால் அப்படியே போகலாம் வாரும் பெண்ணே பிராணநாயகி.

பாஞ்சாலன்—தரு.

வாருய்நீமா தறசேபெண்ணே மானகறம்விட்டுகானகமே
காருர்குழலினமே பெண்ணேகடியநடந்துவாளன்பிறகே

பூந்தேவி-தரு.

மாருமுடிவதனுயிந்த மானகறமவிட்டுவிண்டோமே
சீரானயிவ்வனத்தின்விந்தை செப்பவுஞ்சொல்லிமுடியாது

பாஞ்சாலன்-தரு.

பூஞ்சோலைமாமயிலும்குயில் பூவும்பரிமளம்வீசுதுபார்
சாஞ்சாடும்நதிகளுமேநல்ல தாமரைப்பொய்கைஅலங்காறமும்

பூந்தேவி-தரு.

கண்டேனேகாணுதவிந்தை காவுநிறைந்திடுதாவுமிது
அண்டாதகாடுகண்டேன்யிப்போ ஆளிபுலிசிங்கம்வாழ்வனமே

வசனம்.

இப்படி பாஞ்சாலன் தேவியுடனே தபோவனத்திற்குள் வற அவ்வனத்தில் வாசமாகியஉபையன்உபையாசகன்வருவது.

உபையன்-உபையாசகன் வரும்—விருத்தம்.

தபயோகிதன்னைத்தேடி தயங்கும்பாஞ்சாலன்முன்னே
செயமாலைகையிலேந்தி சிறந்தருத்திராக்ஷம்பூண்டு
சுபமானவேடமிக்க சோதிசேர்சடைமுடித்து
உபையாசன்யாசநென்றும் உயிர்முனிவருகின்ருரே.

உபையன் உபையாசகன்-தரு.

தபயோகமாமுனிவர் சகலர்க்கதிகநான
உபையாசனன்யாச னென்றும்உயிர்முனிவந்தார்
ஓதுமெய்ப்பொருள் வேதசாதனமும்
போதபெற்றிடும் மாதபத்தினில் (தம)

நீண்டசடாமகுடம் பூண்டருத்திராக்ஷம்
ஆண்டவன்பாதம்போற்றி அழகுடன்வந்தார்
ஆவலாகவேகாலை காம்பறம்
தாவுங்கமண்டல தாரியாகவே (உபை)

பரிமளகெந்தம்பூசி பாயும்புலியாசனம்
சரியானமாமுனிவர் சம்பிறமாய்வந்தார்

சந்திரசேகரி மந்திரபூஷணி
விந்தைமலரடி சிந்தைவைத்துமே (உபை)

பாஞ்சாலராசன்முன்னே பரிவாய்வெண்ணீறணிந்து
பூஞ்சோலைமாவனத்தில் பிரியமாய்வந்தார்

பொங்கரவணிசர தங்கவேதமும்
சங்கையறஉற்ற அங்கமழகிய (உபை)

பாஞ்சாலன்-கவி.

வந்தனம்புரிந்தேன் மாமுனியோரை
வையகத்தருபத னென்டேம்
அந்தணன் தன்னைக் கொல்லுவும்மைந்தன்
அர்ச்சுனன் தனக் கொருபெண்ணும்
தந்திடசபதம் யீசனைநோக்கி
தபமதுசெய் வகையரிய
புந்தியில்நினைந்து வந்தநாள்எனக்கு
போதனைசெய்குவீர் போற்றி.

வசனம்.

சுவாமி நானே [illegible]ருபதேயனுகும் ஒரு காரணத்தினால் து ரோணச்சாரியாரைக் கொல்ல ஒருமைந்தனும் அவர் யேவலி னால் என்னை வலிக்கக் கட்டிக் கொண்டுபோன அருச்சுன ராஜ னுக்கு தரும்படி ஒரு பெண்ணும் பெற்று சபதமிட்டு பறமசிவ னைனுடி தபஞ்செய்யநாடினேன் பறமசிவனைப்போல் உங்களைக் கண்டேன் அடியேன்மீது அன்புவைத்து உபதேசிக்கவேண்டும் கந்தனே.

உபயன்-உபயாசனன்-விருத்தம்.

வாடியேயிவ்விடம்வந்த வல்லபாஞ்சாலாவாழி
நாடியதபசுசெய்ய னுள்செல்லும்லேசாலன்றும்
கூடியமுயிர்ச்சிசெய்து குரைதீர்ப்போம்யாகத்தாலே
தேடியஅதற்குண்டான சிலவதைத்தருவிப்பாயே.

வசனம்.

மலையெடுத்து மாறப்பு போடுவதுபோலே வெகுகாலம் செல்லும் இலேசாக உமதுஎண்ணத்தைப்போல் முடிப்போம் புத்திர காமேஷ்ட்டி யாகத்திற்கு உண்டாகிய சாமான் தந்தால் அதினால் சந்ததியைப் பெற்று சபத முடிக்கலாம் பாஞ்சால ருசனே.

பாஞ்சாலன்-வசனம்.

சுவாமி நினைத்தஎண்ணம் கனத்ததா யிருக்குமென்று சித்தம் வைத்தபோதும் இந்தசேதி என்மந்திரிக்கி அரிவித்து வேண்டுமான திறவியமழைத்தேன் சீக்கிரமாக யாகஞ்செய்துமுடிப்பீர்முனிவர்களே அப்படியே நல்லதையா மகாருசனே.

உபையன்-உபையாசனன்-தரு,

புத்திறகாமேஷ்ட்டியாகஞ்செய்தார் உபையாசனனென்னும்
மாசில்லாமுனிவர் புத்திறகாமேஷ்ட்டியாகம்செய்தார்
சத்திபாகன் தந்தமைந்தன் தந்திமுகன்பூசைசெய்து
வெற்றிசேற்கலசபூசை வேதிபன்விதிப்படிக்கி (புத்தி)
அந்தணர்கள்வேதமோத ஆகமம் அக்கினிமூட்டி
தந்திப்பொரியாகநெய்யும் தானம்வெகுவாய்வழங்கி (புத்தி)
அந்தரிசற்வசங்கரி அறவபூஷணிநிமலி
வந்துருவாகியாதரி வையகந்தழைக்கவென்று (புத்தி)
சண்முகன்தனக்கழகாய் சகலலோகப்பிறதாப
கண்மணிபாலனுண்டாக காளையாகபிண்டமாக (புத்தி)

உபையாசன்-விருத்தம்.

யோகசாதனமுஞ்செய்ப உருவேரிபலனுங்காண
யாகபிண்டத்தைக்கண்டு அபிறஞ்சிதட்டிலேந்தி
யோகசுந்திரனேவந்தோம் ஒன்றுரெண்டாகச்செய்தோம்
பாகுசேர்மொழியாளுக்கு பகறவேவறச்செய்வாயே.

வசனம்.

கேளும் மகாருஜனே வேதவிதிப்படி மந்திரத்துடன் யாகம் நிரைவேற்றிவர அதில்பிண்டம்தோன்ற அதைப் பொற்றட்டிலே தாங்கி இரண்டு பிண்டமாக்கினோம் இதைபக்ஷணம் செய்யும் படி உன்தேவிக்கு உத்திரவு செய்யும் மகாருசனே.

பாஞ்சாலன்-வசனம்.

கேளும் பெண்ணே பிராணநாயகி பயபக்தியுடனே பிண்ட பிறசாதத்தை வாங்கி உட்கொள்ளும் பெண்ணே பிராணநாயகி.

பொது-வசனம்.

அப்போது ஸ்ரீமன்னாராயண மூர்த்தியானவர் பிண்டத்தை பொசிக்க ஒட்டாமல் பிரவிடைக்கேது வையாக்கினார் அதைக் கண்டு பூந்தேவி விசனப்படுவது.

### பூந்தேவி-விருத்தம்.

அரகராயென்னசெய்வேன் யாகபிண்டத்தைப்புசிக்க
திரமிதுமைந்தருளை திரலாமென்றிருந்த
கரமதில்வந்தஅன்னம் கையெட்டிவாய்க்கெட்டாமல்
பிறவிடைய கவைத்தால் பிர்மனேயென்னுசெய்வேன்.

### வசனம்.

கந்தனே யிந்தயாகபிண்டத்தை வாங்கிபுசித்து மைந்தருளை திரலாமென்றிருந்தேன் நான் ஆசையோடு கையேந்திவருகும்போது கைக்கெட்டினது வாய்க்கெட்டாமல் போச்சுதே இதற்கு யென்ன செய்வேன் தெய்வமே.

### பூந்தேவி-தரு,

மண்ணுளவந்துதித்த என்மணவாளாயென்னுசெய்வேன்
பெண்ணுளும்அன்னமும் வாங்கவேவந்திட
பிறவிடை யாகினனே (மண்)

### பாஞ்சாலன்-தரு

கண்ணேபசுங்கிளியேஎந்தன் காதலிமாயயிலே
வண்ணமாமைந்தரை வேண்டியாகஞ்செய்து
மகாபாவியாகி னேமே(கண்)

### பூந்தேவி-தரு.

பக்ஷமாயாகஞ்செய்யபொருள் பலவிதமாயழித்து
கஷ்டத்துடன்வந்த பிண்டம்வீணுகியே
கலங்கவிதி இதுவோ (பக்ஷ)

### பாஞ்சாலன்-தரு'

அஷ்டதிக்கும்புகழும்மெத்த அரிதானமாமுனிவர்
இஷ்டமுடனேசெய்தயாகம் வீணுய்
யெங்கவிதி வசமோ(அஷ்)

### பூந்தேவி-தரு.

அத்தியருளாளாயிந்த அன்னத்தைநான்பொசித்து
புத்திறர்தங்களைப் பெற்றுவளர்க்காமல்
பெரும்பாவி யாகினனே(அத்)

### பாஞ்சாலன்-தரு

சத்தியமன்னர்முன்னேயிட்ட சபதம்முடித்திடவே
வெற்றிமுடிந்திட நற்காலமில்லையே
மெல்லியேஎன்னு செய்வேன்(சத்தி)

### பூந்தேவி-தரு.

ஐயய்யோஎன்னசெய்வேன்மன்னு யாகங்களைமுடித்து
கைக்கெட்டிவாய்க்கெட்டா கதையைப்போலாகவே
கலங்கவிதி இதுவோ(ஐ)

பாஞ்சாலன்-தரு.

மெய்யானமாமுனிவர்பெண்ணே வெகுபாடுபட்டவர்கள்
தையலேயேங்கவும் ளுமுந்தவிக்கவும்
தலையில்எழுத் திதுவோ(மெ)

பாஞ்சாலன்-வசனம்.

கேளுமையாமுனிவர்களே அடியேனை ஒரு பொருட்டாக எண்ணி இந்தவிரதம் முடிக்கவெகுபாடுபட்டு யாகபிண்டம் வாங்கினீர் அதைஎன்தேவிக்கி சாதிக்கும்போதுபிறவிடையாகிவிட்டாளே இதற்கென்னசெய்வேன் முனிவர்களே,

உபையாசன்-விருத்தம்.

பயப்படவேண்டாமன்னுபட்டபாடதுநிலைக்க
நயப்படவண்ணன்தன்னை நாங்கள்அக்கினியிலிட்டு
செயப்படஉந்தனுக்கு செல்வனுண்டாக்கிவைக்க
வயப்படசாதம்வந்தவழிவசம் அனுப்பினோமே.

வசனம்.

நீர்யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம் திவ்விய பிண்டங்களை பிறந்தயிடத்தில்விட்டு உனதுமனங்களிக்க மக்களுண்டாக்கி வருகிறோம். அவ்வகைநடத்தி மந்திரம் ஜெபிக்கலாம் பாஞ்சாலராசனே.

உபையன்-விருத்தம்.

திருமுனிவர்மந்திரத்தால் அயன்மாலீசன்
தேவியரும்ஒருருவம்கொண்டதென்ன
யிருநிலமும்மகிழ்ந்தேத்திய பாதவண்ணம்
யிலகும்நவமணிபணிகள் காந்திவீசும்
ஒருமையுள்ளதாய்தந்தைமனம்பூரிக்க
உதையகிரிசூரியன்போல் உருவங்கொண்டு
தருவெனவே அக்கினியில்துஷ்டதூய்மன்
சத்தியஞ்சோதியம்மன்பிரந்தாருமே.

பூந்தேவி-தரு.

திருஉருவாய்துஷ்டத் தூய்மனுடனேமஹா
தேவ்உதித்தனளே வீரபாஞ்சாலி-தேவியுதி
தருகுங்கறகமென்ன புருவந்தளதளென்ன
தழைக்கப்பிறந்தயிடம் செழிக்கஉலகமெங்கும்(திரு)

உதையகிரியில்வந்த வதனசுந்திரரூபி
உலகப்பிறதாபி வந்தாள்ஜெகரக்ஷகி

இருதயமதிவன்பர் யின்பம்வைத்தருளிய
யோகபரிபூறணி யோகபுண்ணியகாறணி(திரு)

ஆதிநாளாங்கனி ஜோதியுரும்பவுனி
அம்மனுதித்தனளே வேழ்விதன்னில்-அம்மன்
தீதில்லாவறந் தரும் தீனதயாபரியாள்
திகழும்மண்ணுலகெங்கும் நிகழும்மதிவதனி(திரு)

அகறஞ்சாலையில்மேவும் பகருந்தன்குலம்வந்த
அன்பறுளம்சுறந்த தேவரக்ஷக்ஷகி
புகழும்கிருஷ்ணசுவாமிக்கு பொருந்தும்வக்ஷமிகரம்
பூறணவரந்தந்த நாரணன்சகோதரி(திரு)

பொது-விருத்தம்.

மகாதேவிகரகபாலிமகிட சங்காரிகண்ணி
சிதேவிகமலவாணி திகழும்ஆகாயவாணி
பூதேவியுருவங்கூடி பொருந்துமித்தபமீடேற
சிதேவியாகிவந்த திருவடிபோற்றிபோற்றி.

வசனம்.

இவ்விதமாக பாஞ்சாலன் செய்து புத்திரகாமேஷ்ட்டியாக குண்டத்தில் திருவுருவத்தோடு பஞ்சலக்ஷணத்துடன் வீறபாஞ்சாலியும் துஷ்டத்துய்மன் உதித்தார்கள்.

பாஞ்சாலன்-விருத்தம்.

அஞ்செழுத்துருவேபோற்றி அருமறைப்பொருளேபோற்றி
செஞ்சுடர்வடிவேபோற்றி திகழும்பூறணியேபோற்றி
தஞ்சமென்றபடியார்தம்மை தறகாற்கவந்தாய்போற்றி
சஞ்சலமருத்தாள்கின்ற தயாபரிபாதம்போற்றி.

அம்மன்-தரு.

இந்தாயிந்தாவந்தேன்துரைதீற தந்தை
யேநிதிடக்கவும் எந்தா
ஒப்பில்லாமுடிபெற்று தருகவும்
உள்ளத்திலென்பதங்கண்டு உருகவும்
தப்பிலாதநல்லவறமது தந்தேனே
அந்தணர்அறக்கார்கீர்த்தி தருகவும்
வந்ததிருமகனேவாழ்த்தி தழைக்கவும் (எந்தா)

சிரணிதேவர்கள்கண்டுமெதிக்கவும் தேசதேசமெங்கும்கண்டுமெதிக்டுவுகம
தாறணிமன்னரும்வந்து துதிக்கவும்
தபமுனிவோர்களும் ஆசீர்வதிக்கவும் (எ)

சத்தியந்தப்பாமல் சபதம்யீடேறவும்
தாழ்வில்லாமலே வந்தனம்படிக்கவும்

நித்தியமங்களம் போற்றியடிக்கவும்
நேரிழைபாலாத்தி யேந்திநடிக்கவும் (எ)

ஒப்பிலாமுடிபெற்று வருகவும்
உள்ளத்திலென்பதங் கண்டுஉருகவும்
தப்பில்லாதநல்ல கீர்த்திதருகவும்
சாத்தங்கலியோங்கி செல்வம்பெருக்கவும் (எ)

பாஞ்சாலன் விருத்தம்.

இப்படிவரம்பாலிக்க இருமுனிவருந்துதிக்க
செப்பியயாகசேனன் செல்வரையழைத்துக்கொண்டு
தப்பிலாநகறடைந்து சந்தோஷம்பெருகிவாழ்வார்
ஒப்பிலாச்சரித்திறமெங்கும் ஓங்கியேவாழிவாழி.

பாஞ்சாலி-விருத்தம்.

யீசன்மால்அயனும்வாழி யீராறுமுகனும்வாழி
பாசம்வைங்கரரும்வாழி பரமேட்டிகாரனும்வாழி
வாசவன்முனிவர்தேவர் வானவர்மறையோர்வாழி
தேசமும்நீதிமன்னர் செங்கோலும்வாழிவாழி.

பொது விருத்தம்

இந்ததோர்சரித்திறத்தை எழுதிநேர்படித்தோர்கேட்டோர்
சந்ததிமிகஉண்டாகி சம்பத்தும்பெருகிவாழி
குந்தகமொன்றில்லாத குவலயந்தேவர்வாழி
பந்தமாம்உலகிலுள்ளோர்பாவலருள்ளம்வாழி.

மங்களம்-மங்களம்-மங்களம்
ஸ்ரீபாஞ்சாலியம்மன்-துணையுண்டாகவும்
ஸ்ரீமதே-ராமானுஜாயனமா
ஸ்ரீமதே-ராமானுஜாயனமா
ஸ்ரீமதே-ராமானுஜாயனமா.

துரோணா பள்ளிக்கூட நாடகம்

முற்றிற்று.

97233